டி. கே. எஸ். சகோதரர்களின் மகத்தான

புராண நாடகம்

30-12-48 வியாழன் முதல்

தினசரி நடைபெறும்

சென்னை ஒற்றைவாடையில்

★

ஞாயிறு, புதன்,
வெள்ளி மாலை 6

செவ்வாய்,
வியாழன், சனி
இரவு 9-15

★



★

சக்தி சிவ நடனம்,
மயில் நடனம்,
சிறுமியர் நடனம்
முதலிய அழகிய
நடனங்கள்!!

★

சிவலீலா

(By ஆலமங்கலம் வைத்தியநாத பாகவதர்)

★

திருக்கைலாயம், மீனாட்சி கோவில், பாண்டியன் தர்பார்,
தாமரைத் தடாகம், பொற்றாமரைக் குளம், சங்க மண்டபம்
முதலிய அற்புத காட்சிகள்!!

1-வது 2-வது வகுப்புகள் முன்னதாகவே ரிஸர்வ் செய்யப்படும்.

கிருஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு 3-1-49 திங்கட்கிழமையும்
இரவு 9-15க்கு நாடகம் நடைபெறும்


டால்டாவில் தயாரித்த ஜிலேபிகளை குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்!
1 கப் மைதாமாவில் தண்ணீர் ஊற்றி பிசைந்து நெகிழச்செய்து கொள்ளவும். பிசைந்த மாவை மூடி இரண்டு தினங்கள் வைத்திருக்கவும். 1½ பவுண்டு சர்க்கரையில் திக்க பாகுதயாரித்து அதில் ½ தேக்கரண்டி குங்குமப்பூவும் சில சொட்டுகள் பன்னீரும் சேர்த்துக் கொள்ளவும். பிசைந்த மாவில் 1 தேக்கரண்டி தயிர்விட்டு நன்றாக கலந்துகொள்ளவும். கலவையை ½ அங்குலம் குறுக்களவுள்ள துவாரம் வழியாக ஊற்றவும். தகரம் அல்லது உலர்ந்த போணியில் துவாரம் கொட்டாங்கச்சியில் உபயோகிக்க செய்து இதற்காக உபயோகிக்கலாம். டால்டாவை குழிவுகுறைந்த வாணலியில் நன்றாக சூடாக்கி மாவை வட்ட வட்டமாக பிழிந்து சிறு பொன்னிறமாக வெந்தவுடன் எடுத்து பாகில் போடவும். ஜிலேபிகளை சூடான பாகில் ஊறின பிறகு எடுத்து நல்ல காகிதத்தில் அப்புறப்படுத்தி பரப்பி உலரவைக்கவும்.
போஷாக்குகளை இழக்காமல் காய்கறிகளை சமைப்பது எப்படி?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!
டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால்பெட்டி நெ. 353, பம்பாய் 1
HVM. 96-173 TM

கல்கி
பொருளடக்கம்


மலர் 8 } இதழ் 23 }

ஜனவரி 2

சர்வதாரி ௵ மார்கழி 19

என்ன சேதி?	...	...	7
டாங்கி வருகிறது!	சாஸ்திரி	...	9
சர்வ தேசத் துரோகம்	...	...	10
சங்கீத சர்வ கலாசாலை	கர்நாடகம்	...	12
மாந்தருக்குள் ஒரு தெய்வம்	ரா. கி.	...	17
அலை ஓசை	கல்கி	...	21
இன்பத் தேன் வந்து பாயுது!	...	...	31
கிணறு வெட்ட, பூதம் கிளம்பியது!	ரஜனி	...	33
காலக்ஷேபம்	...	...	34
கைமேல் பலன்	விந்தன்	...	36
எது அக்கிரமம்?	...	...	40
அசட்டு ராதா	கி. வேதாந்தம்	...	42
தோற்றுப் போனார்!	வெங்கு	...	45
பொல்லாத ராஜா (பாப்பா மலர்)	பி. வி. பலராமன்	...	47
வாழ்க்கை (போட்டிக் கதை)	கி. ராமதுரை	...	50
சிற்ப தேவதைக்குப் பூஜை	டி. கே. சி.	...	54
நீலப் பெட்டி	எஸ். வி. எஸ்.	...	56
வட்ட மேஜை	...	...	57

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

சென்னை நகர உரிமைகள்: ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ், 83, பூந்தமல்லி ஹைரோட், மதராஸ்-10
திருவாங்கூருக்கு: தி பிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி, எர்ணாகுளம்
கொச்சின் மலபாருக்கு: தி அசோஸியேடட் பிக்சர்ஸ் லிமிடெட், எர்ணாகுளம்
மைசூர் பிராந்தியத்திற்கு:
ஸ்ரீ எல். எஸ். அய்யர், சாரதா பிலிம்ஸ், 174, காந்தி நகர், பெங்களூர்-2
கோயமுத்தூர் நீலகிரிக்கு: தி கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்
தென் ஆற்காடு. வட ஆற்காடு. செங்கற்பட்டு. சித்தூர் ஆகிய ஜில்லாக்களுக்கு:
ஸ்ரீ ஏ. கிருஷ்ணஸ்வாமி பிலிம் டிஸ்ட்ரிப்யூட்டர், 14, பெங்களூர் ரோடு, வேலூர்
இலங்கைக்கு: வெல்லிங்டன் டாக்கி சர்க்யூட், 117, புது செட்டி வீதி, கொழும்பு
சேலத்திற்கு: அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்
ஆந்திரா ஸ்டேட் ஜில்லாக்களுக்கும், ஹைதராபாத் சமஸ்தானத்திற்கும்:
சரஸ்வதி டாக்கீஸ் லிமிடெட், விஜயவாடா

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 38

என்ன சேதி?

தூவானம் விடவில்லை

உயிரை அழிப்பதும் கத்திதான்; உயிரைக் காப்பதும் கத்திதான். ஜனநாயகத்தை அழிப்பதற்காக நடப்பதும் யுத்தம்தான்; போர் வெறி பிடித்தவர்களிடமிருந்து ஜனங்களையும் ஜனநாயகத்தையும் காப்பதற்காக நடப்பதும் யுத்தம்தான். எனவே, இந்தோனேஷ்யா மீது டச்சுக்காரர்கள் தொடர்ந்துள்ள யுத்தத்தையும், காஷ்மீரத்திலும் ஹைதராபாத்திலும் இந்தியா தொடர்ந்த யுத்தத்தையும் சிலர் ஒப்பிடுவது பகுத்தறிவற்ற செய்கையாகும்.

ஹைதராபாத்தில் மத வெறி பிடித்தவர்களால் லட்சக்கணக்கான மக்கள் பட்ட பாடுகளை நினைப்போர் நெஞ்சம் பதறாமல் இருக்க முடியாது. மேற்படி கொடிய அரக்கர்களுக்காகப் பயந்து சமஸ்தானத்தை விட்டு வெளியேறியவர்களில் பலர் இன்னும்கூட அங்கு திரும்பிச் செல்லவில்லை. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல், ஹைதராபாத்தில் ரஸாக்கர்களின் அட்டூழியங்கள் நின்று விட்டன என்றாலும், அவர்கள் புரிந்த அக்கிரமங்களால் சமுதாயத்தில் ஏற்பட்ட சீர்குலைவு இன்னும் சரியாகவில்லை. போதாக் குறைக்கு ஆங்காங்கு பொது உடைமைக்காரர்கள் பதுங்கியிருந்து தங்களுடைய கை வரிசைகளைக் காட்டி வருகிறார்கள். சீர்குலைந்து கிடக்கும் சமஸ்தானத்தில் அவசரம் அவசரமாக ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டிய காங்கிரஸ் வாதிகளிடையே போட்டியும் பிணக்கும் தாண்டவமாடி வருகின்றன. அவர்களுடைய தகராறைத் தீர்த்து வைக்கும் பொறுப்பும் நம் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது! இந்த நிலையில் ஹைதராபாத்திலே இராணுவ ஆட்சி முறை நீடித்து வருவதைக் குறித்து நியாய புத்தி படைத்த எவர்தான் குறைகூற முடியும்?

கொள்கையா, கொலையா?

ஹைதராபாத்துக்கு விஜயம் செய்த பண்டித ஜவாஹர்லால் நேரு, மேற்கூறிய விதம் குறை கூறுவோருக்குச் சரியான பதில் அளித்திருக்கிறார். "இங்கு இராணுவ ஆட்சி தொடர்ந்து இருக்கப் போவதில்லை. எனினும் இராணுவ ஆட்சியின் ஸ்தானத்தில் பொது ஜனங்களுக்குப் பொறுப்பான இடைக்கால சர்க்கார் தாமதமின்றி அமைவது உங்கள் கையிலேதான் இருக்கிறது. எனவே, இடைக்கால சர்க்கார் ஏற்படுவதற்கான சூழ்நிலையை உண்டு பண்ண வேண்டியது உங்களுடைய பொறுப்பாகும்" என்று ஜவாஹர்லால்ஜி மூன்று லட்சம் ஜனங்கள் அடங்கிய மாபெரும் கூட்டத்தில் கூறினார்.

மற்றும் சமஸ்தான காங்கிரஸ் வாதிகளின் கடமைகள் என்ன என்பதை நமது மாபெரும் தலைவர் விளக்கிக் கூறிய பின், பொது உடைமைக்காரர்களுக்கும் புத்திமதியாகச் சில வார்த்தைகள் சொன்னார். "ஜனநாயக நியதிக்கு முரணின்றி உங்கள் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதில் சர்க்காருக்கு எள்ளளவும் ஆட்சேபணை யில்லை. ஆனால், கொலையும் கொள்ளையும் தீ வைத்தலும்தான் உங்களுடைய கொள்கையாயின், அதைச் சர்க்கார் ஒரு கணமும் சகித்துக் கொண்டிருக்க முடியாது!" என்றார். உலக நாடுகளின் நன் மதிப்புக்கு உரியவரும், நமது அருமைத் தலைவரும், இந்தியாவின் பிரதம மந்திரியுமான ஜவாஹர்லால்ஜியின் பொன் மொழிகளுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் செவி சாய்ப்பார்களாயின், ஹைதராபாத்தில் இன்னும் தலை காட்டி வரும் பல சில்லறைப் பிரச்னைகளும் தீர்ந்து தாமதமின்றி இடைக்கால சர்க்காரும், பிறகு சீக்கிரத்தில் நிரந்தரமாக ஜனநாயக ஆட்சி முறையும் அமைவதற்கு வழி பிறக்கும்.

மந்திரிகள் ஒன்று நினைக்க . . .

இலங்கை மந்திரிகள் இருக்கிறார்களே, அவர்கள் இன்னும் தாங்கள் கொண்டதே கோலமென்று காரியங்களைச் செய்து வருகிறார்கள். இலங்கைப் பிரஜா உரிமை மசோதா இலங்கையிலுள்ள எட்டு லட்சம் இந்தியர்களுக்கு அநீதி இழைப்பதாக இருக்கிறது என்று பலர் ஆட்சேபித்தனர், மற்றும் பலர் பலமாகக் கண்டித்தனர். இலங்கை இந்தியர்களுக்கு நீதி வழங்கினால்தான் இந்தியா — இலங்கையின் நல்லுறவு நீடிக்கும் என்று பண்டித ஜவாஹர்லால் நேரு முதல் பலரும் எச்சரிக்கை செய்தனர். ஆனால், இலங்கை சர்க்காரோ வெனில் யாரையும் பொருட்படுத்தாமல் மேற்படி மசோதாவை இரண்டாவது முறையாக நிறைவேற்றி விட்டார்கள். இலங்கைப் பார்லிமெண்டில் அந்த மசோதாவுக்குச் சாதகமாக ஐம்பத்திரண்டு பேரும் பாதகமாக முப்பத்திரண்டு பேரும் வோட் கொடுத்தனரென்றால், மசோதாவுக்கு எதிர்ப்பு எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

அந்த மசோதாவின்படி ஒவ்வொரு இந்தியரும் பிரஜா உரிமை பெற இரண்டாயிரம் ரூபாய் செலவழிக்க நேரும் என்பதை ஓர் அங்கத்தினர் எடுத்துக் காட்டினார். இருபது ரூபாய்க்குக்கூட வழியில்லாத ஏழை இந்தியத்தொழிலாளர் இரண்டாயிரம் ரூபாய்க்கு எங்குபோவர்? "எங்களுடைய முன்னோர் எண்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்தனர். அப்படியிருந்தும் இந்த மசோதாவின்படி எனது பிரஜா உரிமை பாத்தியதையை நிரூபிப்பது முடியாத காரியம்" என்று மற்றொரு இந்திய அங்கத்தினர் வருந்தினார். எதிர்ப்பு மிகவும் கடுமையாக இருந்தும்கூட, அம்மசோதாவை ஒட்டி யார் எவ்விதத் திருத்தம் கொண்டு வந்தாலும் தாங்கள் அதை அங்கீகரிக்க முடியாதென்று இலங்கை சர்க்கார் கைவிரித்து விட்டார்கள். எனவே, இலங்கை சர்க்காரின் மேற்படி எதேச்சாதிகாரத்தைக் கண்டித்து வர்த்தக மந்திரி ஸ்ரீ சுந்தரலிங்கம் ராஜிநாமா செய்துவிட நேர்ந்தது.

....திட்டம் ஒன்று நினைக்கிறது !


ராஜிநாமா செய்துள்ள ஸ்ரீ சுந்தரலிங்கம் சர்க்காரையே திகைக்க வைக்கும்படியான ஒரு பெரிய பிரச்னையைக் கிளப்பி விட்டிருக்கிறார். அதன் சம்பந்தமான விவரங்களை, இந்த இதழில் வெளியாகியுள்ள இலங்கைக் கடிதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். இலங்கை அரசியல் திட்ட ஷரத்தின்படி, ஒரு மதத்தினரையோ, வகுப்பினரையோ பாதிக்கக்கூடிய சட்டத்தை நிறைவேற்ற இலங்கை சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்றும், அதற்கு மாறாக நிறைவேற்றப்படும் சட்டம் செல்லாதென்றும் ஆகிறது. இனி இலங்கை மந்திரிகள் என்ன செய்யப் போகிறார்கள்? திருத்தங்களை ஏற்றுக் கொண்டு மேற்படி மசோதாவின் கோர ரூபத்தை மாற்றப் போகிறார்களா? அல்லது குல்லாவுக்குத் தகுந்தவாறு தலையைச் சரிப்படுத்துவதற் கொப்ப, இந்தியர்களை இலங்கையிலிருந்து விரட்டும் நோக்கத்துடன் அரசியல் திட்டத்தையே மாற்றி அமைக்கப் போகிறார்களா?

மனம் வைத்தால்...

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நல்லுறவு ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது காஷ்மீர் பிரச்னை ஒன்றுதான் என்று பாகிஸ்தான் தலைவர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். காஷ்மீர் பிரச்னையைச் சிருஷ்டித்தவர்களே பாகிஸ்தான் தலைவர்கள்தான். எனவே, அந்தப் பிரச்னை தீருவதும் அவர்களைத்தான் பொறுத்திருக்கிறது. பாகிஸ்தான் தலைவர்கள் மனம் வைத்தால்,— அதாவது அவர்கள் நேர்மையுடன் நடந்து கொள்வார்களாயின் காஷ்மீர் பிரச்னை நொடிப் பொழுதில் தீர்ந்துவிடும்.

ஐக்கிய நாடுகள் சபை நியமித்த காஷ்மீர் கமிஷன் முதல் தடவையாக காஷ்மீருக்கு வந்தபோது, இரு சாராரும் போரை நிறுத்த வேண்டும் என்று கோரியது. அந்தக் கோரிக்கைக்கு இந்தியா சம்மதித்தது: ஆனால் பாகிஸ்தான் இணங்கவில்லை. அது இணங்கியிருக்குமாயின், சில மாதங்களுக்கு முன்பே காஷ்மீர் பிரச்னை திருப்திகரமாக முடிந்திருக்கலாம். இப்போது மீண்டும் அந்தக் கமிஷன் வந்திருக்கிறது. பாகிஸ்தான் சர்க்கார் முன்போல் பிடிவாதம் காட்டாமல் கமிஷனுடன் ஒத்துழைக்க விரும்புவதாகச் செய்திகள் கூறுகின்றன.

காஷ்மீர் மீது படையெடுத்த துருப்புகளை வாபஸ் செய்து கொண்டுவிட்டால், காஷ்மீரின் விதியை சர்வஜன வோட்டின் மூலம் நிர்ணயிப்பதற்கு இந்திய சர்க்கார் எப்போதுமே தயாராக இருந்து வந்திருக்கின்றனர். தாங்கள் பூரண வெற்றி பெற்ற ஹைதராபாத்தில்கூட இந்திய சர்க்கார் அந்தச் சமஸ்தான ஜனங்களின் அபிலாஷைக்கு விரோதமாக எதுவும் செய்ய விரும்பாதிருக்கையில், காஷ்மீரில் அவர்கள் வேறு முறையை ஏன் அனுஷ்டிக்கப் போகிறார்கள்?



"ஐக்கிய இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் சத்துருக்களான மாகாணவாதம் வகுப்புவாதம் முதலிய பிரிவினைச் சக்திகளை ஒழிக்க நமது பலம் முழுவதையும் உபயோகிப்போம்" என்று ஜவாஹர்லால்ஜி பெங்களூரில் கூறினார்.

சர்வதேசத் துரோகம்

உலகிலே பல நாடுகளிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை வெகு 'விமரிசையாக'க் கொண்டாடப்பட்டது.

"ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு!" என்று ஏசுநாதர் உபதேசம் செய்தார். அன்பே உருவான அந்த மகான் அவ்வாறு ஒரே வாக்கியத்தில் அன்பின் எல்லையை நிர்ணயித்து விட்டார் எனலாம்.

மானிட வர்க்கம் சீரும் சிறப்பும் சுபிட்சமும் அடைவதற்குற்ற ஒரே வழி, பூமியில் அமைதியும் மனிதரிடத்தில் அன்பும் நிலைப்பதுதான் என்பது ஏசுநாதருடைய உபதேசத்தின் சாரமாகும்.

கிறிஸ்துவ நாடுகள் அந்த உபதேசத்தை மற்றக் காலங்களில் அனுஷ்டிக்கா விட்டாலும், ஏசுநாதரின் ஜெயந்தி வைபவமான கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது அந்த உபதேசத்துக்கு முரணில்லாமலாவது நடந்து கொள்ள முற்படுவது உண்டு.

போர் முனைகளில்கூட இரு கட்சியினரும் உடன்பாடு செய்துகொண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் போரை நிறுத்திவைப்பது வழக்கம்.

ஆனால் அந்த வழக்கத்துக்குக்கூட இப்போது ஆபத்து ஏற்பட்டுவிட்டது.

பல நாடுகளும் அந்த வழக்கத்தைக் கைவிட்டு விட்டதுடன், கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்திலும் ஏசுநாதரின் உபதேசத்துக்கு நேர்மாறாக வஞ்சமும் துவேஷமும் கொண்டு காரியங்களைச் செய்து வருகின்றன.

ஏசுநாதரின் ஜன்ம பூமியான பெத்லஹாமில்கூட மேற்படி பண்டிகையை முன்னிட்டுக் கிறிஸ்துவ ஆலயங்களுக்குச் சென்ற ஜனங்களுக்குப் போலீசும் இராணுவமும் பாதுகாப்பு அளிக்க வேண்டியிருந்தது!

அன்பு வடிவான ஏசுநாதரின் ஜனனத்தை அறிவிப்பதற்கு அறிகுறியாகக் கிறிஸ்துவ ஆலயங்களில் ஒலித்த மணிகளின் சத்தத்தோடு, கொலைக் கருவிகளான பீரங்கி, வெடிகுண்டுகளின் சத்தமும் சேர்ந்து கேட்டது!

கிறிஸ்துமஸ் பண்டிகையின் போதுதான் ஜெனரல் டோஜோ முதலிய ஜப்பானியத் தலைவர்களை அமெரிக்கர்கள் தூக்கிலிட்டுத் தங்களுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார்கள்.

அப்போதுதான் இந்தோனேஷ்யா மீது டச்சுக்காரர்கள் மீண்டும் அக்கிரமமாகப் படையெடுத்து அட்டூழியங்கள் புரிய ஆரம்பித்தனர்.

அதாவது அன்பின் எல்லையை நிர்ணயித்த மகான் ஏசுநாதரின் சீடர்கள், வஞ்சத்துக்கும் துவேஷத்துக்கும் எல்லையை நிர்ணயிக்க முற்பட்டிருக்கிறார்கள் போலும்!

நெதர்லண்ட்டை ஆட்சி புரியும் மகாராணி, காலனி ஆட்சி முறை செத்துவிட்டதாகச் சில மாதங்களுக்கு முன் கூறினார்.

எனவே, டச்சுக்காரர்களுக்கு ஞானோதயமாகி விட்டதென்றும், காலனி ஆட்சி முறை ஒழிந்து இந்தோனேஷ்யா பூரண சுதந்திரம் பெறும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றும் அப்போது பலர் நம்பியிருக்கலாம்.

ஆனால் டச்சு மகாராணி இப்போது என்ன சொல்லுகிறார், தெரியுமா?

அவர் விடுத்துள்ள கிறிஸ்துமஸ் செய்தியில், 'டச்சுக்காரர்கள் இந்தோனேஷ்யாவில் மனித சுதந்திரத்தை ஸ்தாபிப்பதற்காகப் போராடி வருகிறார்கள்" என்று பசப்புகிறார்.

எனினும் மேற்படி கூற்றை நம்புவோர் யாருமே இல்லை என்பதைச் சென்ற சில தினங்களாக நிகழ்ந்துள்ள உலக சம்பவங்கள் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டன.

• • •

சர்வ தேசச் சட்டத்தை மீறும் தேசங்கள் உலக சமாதானத்தின் சத்துருக்களாதலால், அவைகளை நாகரிக உலகம் பகிஷ்காரம் செய்து ஒதுக்கி விட வேண்டும் என்று கிறிஸ்துவ மத குருவான போப் கூறுகிறார்.

டச்சு அதிகாரிகளுக்கும் இந்தோனேஷ்யக் குடியரசின் தலைவர்களுக்கும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது, டச்சுக்காரர்கள் திடீரென்று இந்தோனேஷ்யாவில் யுத்தத்தை ஆரம்பித்தது, உலக அமைதிக்கு உலை வைக்கும் சர்வ தேசத் துரோகமான காரியம் அல்லவா?

இதற்கு முன் எந்தச் சம்பவமும் உலக நாடுகளிடையே இவ்வளவு மனக் கொதிப்பை உண்டாக்கியதில்லை என்று கூறுவது மிகையாகாது.

இந்தோனேஷ்யக் குடியரசைச் சேர்ந்த பிரதேசங்களைத் தாக்கும் டச்சுக்காரர்கள் மீது ஐக்கிய நாடுகள் சபை தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் வரையில் ஆசிய நாடுகள் காத்திருக்க விரும்பவில்லை.

"டச்சு சர்க்காரை வாயளவில் கண்டிப்பதுடன் நின்றுவிட மாட்டோம். அவர்களுடைய கொட்டத்தை அடக்குவதற்கான தகுந்த நடவடிக்கைகளை உடனே எடுத்துக் கொள்வோம்!" என்று பண்டித ஜவாஹர்லால் நேரு கர்ஜித்ததை அனுசரித்து இந்தியா, பாகிஸ்தான், இலங்கை பர்மா முதலிய நாடுகள் தங்களுடைய எல்லையின் வழியாக டச்சு விமானங்களோ, டச்சுக் கப்பல்களோ செல்வதைத் தடுத்து விட்டன.

ஆஸ்திரேலியா துறைமுகத் தொழிலாளிகள் டச்சுக் கப்பல்களைப் பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்தனர்.

"1940-ம் வருஷம் ஹாலந்தில் ஹிட்லர் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டாரோ, அதைக் காட்டிலும் படுமோசமாக ஹாலந்து அதிகாரிகள் இந்தோனேஷ்யாவில் நடந்து கொண்டிருக்கிறார்கள்" என்று கூறி, ஆஸ்திரேலியப் பிரதிநிதி ஐக்கிய நாடுகள் சபையில் ஹாலந்து பிரதிநிதியை பதில் பேச முடியாமல் திணற அடித்தார்.

"இந்தோனேஷ்யக் குடியரசைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிடுமாயின், ஜாவாவில் எரிந்து கொண்டிருக்கும் தீ, டச்சு சாம்ராஜ்யத்தை மாத்திரமல்ல ஆசியாவிலுள்ள மற்றெல்லா சாம்ராஜ்யங்களையும் அழித்து விடும்" என்று இந்தியப் பிரதிநிதி அந்தச் சபையின் எல்லா வல்லரசுகளையும் சேர்த்து எச்சரித்தார்.

மார்ஷல் உதவித் திட்டப்படி ஹாலந்துக்கு அளிக்கும் உதவியைக் கூட அமெரிக்கா நிறுத்திவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

ஜாவாவில் டச்சு சர்க்கார் நிறுவிய பொம்மை சர்க்கார்கள் கூட ராஜீனாமா செய்து விட்டனர். அவர்களைக்கூட, டச்சு அதிகாரிகளின் அட்டூழியமானது கொதித்து எழும்படி செய்துவிட்டது.

• • •

இந்தோனேஷ்யாவின் சரித்திரம் மிகவும் ருசிகரமானது.

சுமத்ரா, ஜாவா, மதுரா முதலிய மற்றும் பல தீவுகள் அடங்கியதே இந்தோனேஷ்யா. ஆதியில் ஹிந்துக்களின் சாம்ராஜ்யமாக இருந்த இந்தோனேஷ்யா பின்னர் முஸ்லிம்களால் படையெடுக்கப் பட்டது. அதன் பிறகு அங்கு போர்ச்சுகீசியர்கள் படையெடுத்து ஆதிக்கம் செலுத்தலாயினர். எனினும் அவர்களுடைய ஆட்சி ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டிஷாரும் டச்சுக்காரர்களும் படையெடுத்து, அங்கிருந்து போர்ச்சுகீசியர்களை விரட்டிவிட்டு அத்தேசத்தைப் பங்கு போட்டுக் கொண்டனர். இறுதியாக பிரிட்டிஷாரும் அங்கிருந்து டச்சுக்காரர்களால் விரட்டப் பட்டனர். இயற்கைச் செல்வம் கொழிக்கும் இந்தோனேஷ்யா, அதன் பின் சென்ற முந்நூறு வருஷங்களுக்கு மேலாக டச்சுக்காரர்களின் இரும்புப் பிடியில் இருந்து வருகிறது.

இன்று ஆசியா ஆர்த்தெழுந்து விட்டது. பல ஆசிய நாடுகளும் சுதந்திரம் பெற்றுள்ளன. இந்தோனேஷ்யாவைப்போல் மற்றும் பல நாடுகளும் சுதந்திரம் பெற உறுதிகொண்டு விட்டன. இந்த நிலையில், ஏழு கோடி ஜனங்கள் வாழும் இந்தோனேஷ்யாவில் டச்சுக்காரர்கள் இன்னும் ஆட்சி புரிய விரும்புவது ஆதிக்கப் பைத்தியமே யாகும்.

எனவே, இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேறியது போல், இந்தோனேஷ்யாவிலிருந்து டச்சுக்காரர்கள் வெளியேறிவிட வேண்டும்.

அவர்களை வெளியேற்றும் விஷயத்தில் வல்லரசுகள் தயங்குகின்றன; ஐக்கிய நாடுகள் சபையும் தயங்குகிறது. ஆனால், ஆசியா தயங்கப் போவதில்லை என்பதைச் சமீப காலத்தில் நடந்த சம்பவங்கள் உலகத்துக்கும் பிரகடனப் படுத்தி யிருக்கின்றன.

சங்கீத சர்வகலாசாலை

கர்நாடகம்

கர்நாடக சங்கீதம் வளர்ச்சியடைந்து வருகிறதா, தாழ்ச்சி அடைந்து வருகிறதா என்பதைப் பற்றி அபிப்பிராயபேதம் இருக்கும் என்று சென்ற இதழில் ஸ்ரீ என்.வி.வி. எழுதியிருந்தார். இந்த விஷயம் எப்படியிருந்தாலும் சென்னையில் சங்கீத அபிமானமும் ரஸிகத் தன்மையும் அதிகமாகப் பரவி வருகிறது என்பதைப் பற்றிச் சந்தேகம் இருக்க முடியாது. கிறிஸ்மஸ் வாரத்தில் சென்னையில் நடைபெறும் சங்கீதவிழாக்கள் ஒன்றாயிருந்து, இரண்டாகி, மூன்றாக வளர்ந்து, இந்த வருஷத்தில் நாலு இடங்களில் நாலு விழாக்கள் நடந்தன என்பது வியப்புடன் மகிழ்ச்சியும் தரும் விஷயம்.

கோகலே மண்டபத்தில் பைன் ஆர்ட்ஸ் சொஸைடி சங்கீத விழாவும், ஸெயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் தமிழிசை விழாவும், தியாகராஜ நகர் வாணி மகாலில் புதிதாக ஒரு விழாவும், மயிலாப்பூரில் வழக்கம்போல் மியூஸிக் அகாடமி விழாவும் நடைபெற்றன.

நாலு விழாக்களிலும் ஆரம்ப தினத்தன்று பேசிய பிரமுகர்கள் எல்லாரும் விவாதத்துக்கு இடந்தராத முறையில் நிதானமாகப் பேசியிருக்கிறார்கள்.

தமிழிசை மகாநாட்டில் ஸ்ரீ ஸி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் இசை நுட்பங்களில் புகுந்து சிரமப்படாமல் நல்ல சங்கீதம் கேட்க விரும்பும் சாதாரண ரஸிகர்களின் கோரிக்கை இன்னதென்பதைச் சிறந்த முறையில் வெளியிட்டார்.

பிரதமர் கனம் ஓமந்தூர் ரெட்டியார் தமிழ் மணமும் கவிச் சுவையும் ததும்பிய அழகான சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். பழந் தமிழ் நாட்டில் இசைக் கலை எவ்வளவு பெருகிப் பரந்திருந்தது என்பதை விளக்க அவர் பழந் தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டிய மேற்கோள்கள் கனம் ரெட்டியாரின் ஆராய்ச்சித் திறனுக்குச் சான்றாக விளங்கின. இசைக் கலை தமிழ் நாட்டில் இப்போது 'நுட்ப சாஸ்திர'மாக (Technical Science) மாறிப் போயிருக்கிறது என்றும், சர்வஜனங்களும் அனுபவிக்கக்கூடிய இதயத்தைத் தொடும் உணர்ச்சி சங்கீதந்தான் உயர்ந்த சங்கீதம் என்றும் வற்புறுத்திக் கூறினார். ('நுட்பசாஸ்திரம்' என்ற சொற்றொடர் ஒன்று தமிழுக்குக் கிடைத்தது பற்றி மகிழ்கிறேன்.)

சங்கீத வித்வத் சபையில் தலைமை வகித்த ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் விவகாரத்துக்கிடமான விஷயம் எதிலும் தலையிடாமல் சகலரும் பொதுவாக ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயங்களைப் பற்றியே பேசியதைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

மேடைக் கச்சேரி செய்யும் சங்கீத வித்வான்கள் சுருதியை மிகக் குறைவாக வைத்துக்கொண்டு பாடும் வழக்கத்தை அவர் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேல் பஞ்சமம் பிடிக்கும் சௌகரியத்துக்காகவே மேற்கண்டவிதம் சுருதியைக் குறைத்து வைத்துக்கொள்கிறார்கள். இதனால் மந்தர ஸ்தாயியில் ராக சஞ்சாரம் செய்ய முடியாமலே போகிறது. பிடில் வித்வான்கள் கணீரென்று பிடில் வாசித்துச் சபையை மகிழ்விப்பதும் அசாத்தியமாகிறது.

ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையை வித்வத் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்த சங்கீத வித்வான்கள் அவருடைய வார்த்தைகளுக்கு மதிப்பு வைத்து நடந்துகொள்வார்களாக.

* * *

இந்த வருஷத்துச் சங்கீத விழாக்களில் விவாதத்துக்கு உரியதும் ஆட்சேபிக்கத் தக்கதுமான ஒரு அம்சம் மியூஸிக் அகாடமி சார்பாகச் சென்னைக் கவர்னர் பவநகர் மகாராஜாவுக்கு அளித்த உபசாரப் பத்திரத்தில் காணப்படுகிறது. சென்னையில் கர்நாடக சங்கீதத்தை வளர்ப்பதற்கென்று இந்தியா சர்க்கார் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் சங்கீத கலாசாலையைப் பற்றி அந்த உபசாரப் பத்திரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஆட்சேபத்துக்குரிய விஷயத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் இந்திய சர்க்கார் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் சங்கீத கலாசாலைத் திட்டத்தைப் பற்றி நேயர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும். அந்தத் திட்டத்தின் வரலாறு பின்வருமாறு:—

இன்று இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி வகிக்கும் ராஜாஜி அவர்கள் வங்

வங்காள கவர்னராகப் போவதற்குச் சில காலத்துக்கு முன்னால் இரண்டு மாதகாலம் இந்திய சர்க்காரின் கல்வி மந்திரியாக வேலை பார்த்தார். அந்தக் காலத்தில் இந்தியாவின் மத்திய கல்வி ஸ்தாபனங்கள் என்று கருதப்படும் தாகூரின் விசுவபாரதி, காசி ஹிந்து சர்வ கலா சாலை, அலிகார் முஸ்லிம் சர்வ கலா சாலை ஆகியவற்றுக்குப் பெருந்தொகை நன்கொடை யளித்தார். அச்சமயம் இந்தியாவின் அருமையான சங்கீதக் கலையை வளர்ப்பதற்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்றும் ராஜாஜிக்குத் தோன்றியது. உடனே ஹிந்துஸ்தானி சங்கீதத்தை வளர்க்கும் ஸ்தாபனம் ஒன்றும் கர்நாடக சங்கீதத்தை வளர்க்கும ஸ்தாபனம் ஒன்றும் தொடங்கி நடத்துவதற்காக இந்திய சர்க்காரிலிருந்து நன்கொடை அளிக்க உத்தரவு பிறப்பித்தார்.

ஹிந்துஸ்தானி சங்கீதத்துக்குரிய ஏற்பாடுகள் உடனே தொடக்கப்பட்டன.

கர்நாடக சங்கீதத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக, பிற்பாடு சர்வகலாசாலையாக வளரக்கூடிய முறையில், இப்போது ஒரு கலாசாலை ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானித்து அதற்காக காலுபேர் அடங்கிய ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. இதுவரையில் நடந்த கர்நாடக சங்கீதத்துக்கு ராஜாஜி செய்த கைங்கரியம். பிற்பாடு, ராஜாஜி வங்காள கவர்னராகச் செல்ல, இந்திய சர்க்காரின் கல்வி இலாகா மௌலானா ஆஸாத் வசம் சென்றது.

காலுபேர் அடங்கிய கமிட்டியார் கர்நாடக சங்கீத கலா சாலை ஏற்படுத்துவது பற்றி ஆரம்ப யோசனைகளைக் கூறியதுடன், மேற்கொண்டு காரியங்களை நடத்துவதற்குப் பிரபல வித்வான்களும் ரஸிகர்களும் அடங்கிய பெரிய கமிட்டி நியமிக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்தார்கள்.

இதற்கிடையில், மேற்படி விவரங்களை அறிந்த மியூஸிக் அகாடமிக்காரர்கள் ஏதோ பறிபோய்விட்டது போல அலறத் தொடங்கினார்கள். தந்திகளும் மகஜர்களும் விண்ணப்பங்களும் இந்திய சர்க்காரின் கல்வி மந்திரிக்குப் பறந்து சென்றன.


சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர் இந்திய சர்க்கார் கர்நாடக சங்கீதத்தில் சிரத்தை காட்ட முன் வந்த புத்திசாலித்தனத்தைப் பாராட்டிவிட்டு, "ஆனால் எந்தக் காரியம் செய்தாலும் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் யோசனையைக் கேட்டுக் கொண்டு செய்யுங்கள். இல்லாவிட்டால் கர்நாடக சங்கீதம் குட்டிச்சுவராகிவிடும்!" என்று எச்சரித்தார்.

அதை ஆமோதித்து இன்னொரு சங்கீத கலாநிதியும் அறிக்கை விடுத்தார்.

இதையெல்லாம் இந்திய சர்க்கார் எவ்வளவு தூரம் பொருட்படுத்தினார்கள் என்பது நமக்குத் தெரியாது. கர்நாடக சங்கீத கலா சாலை அமைப்பைத் தயாரிப்பதற்காகப் பின்வரும் அங்கத்தினர் அடங்கிய கமிட்டி அமைத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று.

ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார்
ஸ்ரீ பி. வி. ராஜமன்னார்
ஸ்ரீ ஏ. லக்ஷ்மணசாமி முதலியார்
ஸ்ரீ கே. சீனிவாசன்
ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்
ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்
ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி
ஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரன்
ஸ்ரீ மடசர் கே. வரதாச்சாரி

மேற்படி கமிட்டி கூடியவரை திருப்திகரமான முறையில் அமைந்திருக்கிறதென்



பிரதமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தமிழிசை மகாநாட்டைத் திறந்து வைத்தார்

பதை நேரங் கவனிப்பார்கள். அதில் கல்வி மந்திரியும் வைஸ்சான்ஸலரும் இருக்கிறார்கள். சங்கீத வித்வான்களும் சங்கீத ரஸிகர்களும் இருக்கிறார்கள். தெலுங்கர்களும் தமிழர்களும் இருக்கிறார்கள். மியூஸிக் அகாடமியின் கர்த்தாத் தலைவரான ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயரும் இடம் பெற்றிருக்கிறார். எந்தவிதத்திலும் குறைகூற இடமில்லாத கமிட்டி என்று சொல்ல வேண்டும்.

• • •

மியூஸிக் அகாடமியார் கவர்னருக்கு அளித்த உபசாரப் பத்திரத்தில் மேற்படி சங்கீத கலாசாலை விஷயத்தைப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். இந்திய சர்க்காருக்குச் சங்கீதக் கலையில் கவனம் சென்றது பற்றி முதலில் ஒரு 'ஷொட்டு'க் கொடுத்துப் பாராட்டிவிட்டு, மேலே சொல்லுகிறார்கள்:

"ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் விஷயத்தில் இந்திய சர்க்கார் சரியானபடி காரியம் செய்திருக்கின்றனர். ஆனால் கர்நாடக சங்கீதத்தின் விஷயத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் சால்ஜாப்புச் சொல்லி வருகிறார்கள். கர்நாடக சங்கீதத்துக்காகச் சென்ற இருபது வருஷமாகப் பிராணனைக் கொடுத்துப் பாடுபட்டுப் பணம் தேடிப் பட்டம் அளித்துப் பாதுகாத்து வரும் அபூர்வ ஸ்தாபனம்,—நிகர் ஒன்றுமில்லாத தனிப் பெரும் ஸ்தாபனம்,—எங்கள் மியூஸிக் அகாடமி என்கிற சங்கீத வித்வத் சபை என்பது ஈரேழு உலகமும் தெரிந்த விஷயம் அல்லவா? இந்திய சர்க்கார் ஒதுக்கிவைத்திருக்கும் பணத்தை அப்படியே தூக்கி எங்களிடம் கொடுத்துக் கர்நாடக சங்கீதத்தை உத்தாரணம் செய்யுங்கள் என்று சொல்லாமல் வேறு ஏதேதோ நோக்கங்களை வைத்துக் கொண்டு ஏதேதோ காரணங்களைச் சொல்லி மீனமேஷம் பார்த்து அனாவசியமாகக் கால தாமதம் செய்து வருகிறார்கள். இது கொஞ்சம்கூடச் சரியில்லை."

மேற்கண்ட கருத்துடன் கூடிய உபசார பத்திரம் அகாடமி விழாவைத் திறந்து வைத்த பவநகர் மகாராஜாவுக்கு அளிக்கப்பட்டது. இதைக் கேட்டுச் சிறந்த ரஸிகர்களில் ஒருவராகிய பவநகர் மகாராஜா "இதேதடா, வினை வெட்டப் பூதம் புறப்பட்டுவிட்டது போலாயிற்று. நாம் ஏதோ நல்ல சங்கீதம் கொஞ்சம் கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தால் அதற்குப் பதிலாக இவர்கள் ஏதோ சண்டையைக் கிளப்பி இந்திய சர்க்கார் மீது புகார் கூறுகிறார்களே! எல்லாப் பணத்தையும் வாங்கி எங்களிடம் கொடு என்று கேட்கிறார்களே? நமக்கு என்னத்திற்கு இந்த வம்பு?" என்று நினைத்திருக்க வேண்டும்.

உபசாரப் பத்திரத்தில் கண்ட கோரிக்கையைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் வேறு சில விஷயங்களைப் பற்றிப் பவநகர் மகாராஜா அழகாகப் பேசினார்.

"இந்த மாதிரி சங்கீத விழாக்களைப் பொது மக்கள் அதிகம் விரும்புகிறார்கள் என்று அறிகிறேன்" என்று கவர்னர் சொன்னபோது, "உங்களுடைய விழா மட்டுந்தான் சங்கீத விழா இல்லை. வேறு சில விழாக்களும் இந்த நகரில் நடக்கின்றன" என்பதைக் குறிப்பிட்டார்.

"இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாடுகளிலும் சங்கீத விழாக்கள் நடத்துகிறார்கள். அந்த விழாக்களில் உயர்தரமான சங்கீதம் மிகக் குறைந்த கட்டணத்தில் பாமர ஜனங்கள் எல்லாருக்கும் கிடைக்கும்படி செய்கிறார்கள். அதனால் அங்கேயெல்லாம் நல்ல சங்கீதம் எல்லா ஜனங்களிடமும் பரவுகிறது. அந்த மாதிரி நீங்களும் செய்ய வேண்டும். மியூஸிக் அகாடமியின் முக்கிய வேலை அதுவாக இருக்க வேண்டும். அப்படி நீங்கள் உயர்ந்த சங்கீதத்தைப் பாமர மக்களிடையே பரவும் தொண்டைச் செய்ய முன்வந்தால், கவர்ன்மெண்டார் உங்களுக்கு நிச்சயமாக உதவி செய்வார்கள்!"

இவ்விதம் கவர்னர் மியூஸிக் அகாடமிக்குப் புத்திமதி கூறினார். அகாடமியின் 'குட்டு' இவ்வளவு நன்றாகக் கவர்னருக்கு எப்படித் தெரிந்தது என்பது வியப்பான விஷயம். சங்கீத வித்வத் சபையார் பணம் சேர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு சபை நடத்துவதும், பாமர ஜனங்களுக்கும் உயர்ந்த சங்கீதத்துக்கும் சம்பந்தமில்லையென்று எண்ணிக் கர்நாடக சங்கீதத்தை ஒரு சிலருக்கே சொந்தமான பிரத்யேக உடைமையாகச் செய்ய முயன்று வருவதும் கவர்னருக்கு எப்படித் தெரிந்ததோ, நாம் அறியோம். ஆனால் இதெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கிறதென்பது அவருடைய பதிலிலிருந்து வெளியாகிறது.

• • •


"கர்நாடக சங்கீத கலா சாலையையும் அதற்கான பணத்தையும் முழுதும் எங்களிடமே ஒப்புவித்துவிட வேண்டும்" என்று

மியூஸிக் அகாடமி நிர்வாகிகள் கோருவதைப் பார்த்தோ மல்லவா ?

இந்தக் கோரிக்கை முற்றும் அபத்தமானது என்று வற்புறுத்த விரும்புகிறோம்.

மியூஸிக் அகாடமி ஆரம்பமாகிப் பலவருஷ காலம் கர்நாடக சங்கீதத்துக்குச் சிறந்த தொண்டு செய்து வந்தது என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

1927-ம் வருஷம் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகா சபையை யொட்டி மியூஸிக் அகாடமி ஆரம்பமாயிற்று என்பதையும் நாம் மறந்துவிடவில்லை.



பவநகர் மகாராஜா திறந்து வைத்த சங்கீத வித்வத் சபைக்கு ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை தலைமை வகித்தார்.

பிற்காலத்தில் அச்சபையில் தமிழ்பாஷைத் துவேஷமும் குறுகிய மனப்பான்மையும் சேர்ந்து முன்னால் செய்த தொண்டுகளின் பயனையெல்லாம் அழித்து விட்டன என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

ஆகையால் கர்நாடக சங்கீதக் கலாசாலை ஏற்படுத்தி நடத்தும் பொறுப்பைத் தங்களுக்கே தரவேண்டும் என்று அகாடமி கேட்பதற்கு உரிமை கிடையாது.

உண்மையில், மேற்படி பொறுப்பை தனிப்பட வகிப்பதற்கு மியூஸிக் அகாடமி தகுதியற்றது என்பது வெட்ட வெளிச்சமாகி யிருக்கிறது.

தமிழ் நாட்டில் இருந்துகொண்டு தமிழைத் துவேஷிக்கும் காரியத்தினால் அவர்கள் மேற்படி யோக்கியதை தங்களுக்கு இல்லை யென்று காட்டி யிருக்கிறார்கள்.

“அகாடமி கச்சேரியில் முழுக்க முழுக்க திக்துன்தானா கீதங்கள் பாடலாம்; திக்துன் தானா சங்கீதம் பாடலாம். ஆனால் சுத்த கர்நாடக சங்கீதமாயிருந்தாலும் தமிழ் உருப்படிகளைப் பாடக் கூடாது” என்று எப்போது கட்டுப்பாடு செய்தார்களோ, அப்போதே தங்களுக்கு மேற்படி யோக்கியதை இல்லை யென்று நிரூபித்து விட்டார்கள்.

கர்நாடக சங்கீதத்தையும் பரத நாட்டியத்தையும் உத்தாரணம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு, பண வருமானத்துக்காக எவ்வளவு மட்டமான சங்கீதத்தையும் ‘பரத நாட்டியம்’ என்ற பெயரில் அர்த்தமற்ற கேலிக் கூத்தையும் கையாண்டதிலிருந்து தங்களுக்கு மேற்படி உரிமை இல்லை யென்பதைக் காட்டி வருகிறார்கள்.

சங்கீத வித்வான்களுக்குள் பாரபட்சம் காட்டுவதும், ஒரு வருஷம் பிரமாதப்படுத்திக் கௌரவிக்கும் வித்வானை அடுத்த வருஷம் அலட்சியமாக நடத்துவதும் வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், “கர்நாடக சங்கீத கலாசாலையை எங்களிடமே கொடுங்கள்” என்று சொல்வதற்கு அருகதையற்றவர்களாகிறார்கள்.

சென்ற இதழிலே ஸ்ரீ எஸ். வி. வி. எடுத்துக் காட்டி யிருப்பதுபோல், படாடோபமாகச் சங்கீத நிபுணர்களைக் கூட்டி நாளெல்லாம் சர்ச்சை செய்து முடிவான தீர்மானங்களைச் சாயங்காலம் பண வருமானத்துக்காக நடக்கும் கச்சேரிகளில் நிறைவேற்ற முடியாதவர்களாயிருக்கும்போது, சங்கீத வித்வத் சபை என்று சொல்லிக் கொள்ளவும் தகுதி யற்றவர்களாகிறார்கள்.

இருபது வருஷமாகக் கர்நாடக சங்கீத வளர்ச்சிக்காக உயிரைக் கொடுத்துப் பாடுபடுகிறதாகச் சொல்கிறவர்கள், சாதாரண ஜனங்களிடம் உயர்ந்த சங்கீதம் பரவ யாதொரு ஏற்பாடும் முயற்சியும் செய்யவில்லை. இதனால் மட்டரகமான சினிமா சங்கீதம் மக்களிடையே பரவுவதற்கு மறைமுகமான உதவி செய்து வருகிறார்கள்.

கச்சேரிகள் நடக்கும்போது கொட்டகைக்கு வெளியே ஒலிபெருக்கிக் குழாய் வைக்கக் கூட அவர்களுக்கு மனம் வருவதில்லை; யாராவது இலவசமாகச் சங்கீதம்

கேட்டுவிட்டால் என்ன செய்கிறதென்று அவ்விதம் செய்வது கிடையாது.

இப்படிப் பட்டவர்கள்தான் "இந்திய சர்க்காரின் உத்தேசத்திலிருக்கும் கர்நாடக சங்கீத கலாசாலையை எங்களிடமே ஒப்புவித்து விடுங்கள்!" என்று கேட்கிறார்கள்.

ஒப்புவித்தால் வேறு வினை வேண்டியதில்லை. அகாடமியைப் போலவே சங்கீதக் கலாசாலையிலும் சங்கீதக் கலை தனிப்பட்டவர்களின் சொந்த சொத்தைப் போலப் பாவிக்கப்படும். தமிழ்பாஷை மீது அர்த்தமில்லாத துவேஷம் குடிகொண்டு விடும். அதனால் வேறுபல விபரீதங்கள் விளையும்.

இந்திய சர்க்கார் சங்கீத கலாசாலைத் திட்டத்தை மியூசிக் அகாடமியாரிடம் ஏகபோகமாக ஒப்புவிக்கும் பெருந் தவறைச் செய்ய மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காக ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டியார் கர்நாடக சங்கீதம் நல்ல முறையில் வளர்வதற்கு ஏற்றபடி சங்கீத கலாசாலையை ஏற்படுத்தத் திட்டம் போடுவார்கள் என்று நம்புகிறோம்.

கவர்னர் பஹதூர் மகாராஜாவின் புத்திமதி ஒரு வேளை பயன்பட்டு, அடுத்த வருஷம் முதல் அகாடமி கச்சேரிகளை வெளியில் வந்து நிற்கும் ஜனங்கள் கேட்கும்படி ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டால் நலமாயிருக்கும். ஸெண்ட்மேரீஸ் மண்டபத்தில் நடைபெறும் தமிழிசைக் கச்சேரிகளை ஆயிரக்கணக்கான ஜனங்கள் மண்டபத்துக்கு வெளியில் நின்று கேட்டு அநுபவிக்க வசதி செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.


ராஜாஜி பரிசு



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மேற்கு வங்காள கவர்னராக இருந்தபோது தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியாரின் பாடல் போட்டி நடைபெறு மென்று பத்திரிகையில் படித்தார்கள். இந்தப் போட்டியில் முதன்மையாக வருகிறவருக்குத் தாம் ஒரு தம்பூராப் பரிசு அளிக்க விரும்புவதாகக் காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு எழுதியிருந்தார்கள். ராஜா ஸர் அவர்களும் கவர்னர் ராஜாஜியின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் ஆமோதித்து, இந்த வருஷம் ராஜாஜி அவர்கள் வாங்கிக் கொடுக்கும் தம்பூராவைப் பரிசாகக் கொடுக்கும்படியும், இது போல் வருஷா வருஷம் "ராஜாஜி பரிசு" தொடர்ந்து கொடுப்பதற்காக 3001 ரூபாயைத் தமிழிசைச் சங்கத்துக்கு அனுப்பி ஆண்டு தோறும் பரிசு வழங்கும்படியும் ஏற்பாடு செய்தார்கள்.

சென்ற டிசம்பர் 18உ தமிழிசைச் சங்கத்தில் ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியாரின் பாடல் போட்டி நடைபெற்றது. போட்டிக்குச் சுமார் இருபது பேர் வந்திருந்தார்கள். சங்கீத வித்வான்கள் மதுரை மணி ஐயரும் திருப்பாம்பரம் சுவாமிநாத பிள்ளையும் மேற்படி பாட்டுப் போட்டிக்கு நீதிபதிகளாக இருந்து ஸ்ரீமதி வேதவல்லி அம்மாள் முதற் பரிசுக்குத் தகுதியுடையவர் என்று தீர்ப்புக் கூறினார்கள்.

ஆறாவது தமிழிசை மகாநாட்டை டிசம்பர் 23-ந் தேதி அன்று ஆரம்பித்து வைத்த சென்னைப் பிரதமர் கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் பாரதியாரின் பாட்டுப் போட்டியில் முதற் பரிசு பெற்ற ஸ்ரீமதி வேதவல்லிக்கு ராஜாஜியின் பரிசான தம்பூராவை வழங்கினார். இரண்டாவது பரிசு பெற்ற ஸ்ரீமதி வி. விமலாவுக்கும் மூன்றாவது பரிசு பெற்ற ஸ்ரீ வி. சங்கரனுக்கும் வெள்ளிக் கோப்பைகள் பரிசாக அளிக்கப்பட்டன. ஸ்ரீமதி வேதவல்லி அம்மாள் இங்கே ராஜாஜி அளித்த தம்பூராப் பரிசுடன் தோன்றுகிறார்.



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

59. கடின சோதனைகள்

ருஷியா தேசத்து மகான் டால்ஸ்டாய் எழுதிய "ஆண்டவன் ராஜ்யம் உனக்குள்ளே" என்ற புத்தகம் மகாத்மா காந்தியின் மனதைப் பெரிதும் கவர்ந்தது என்பதை முன்னமே பார்த்தோமல்லவா? டால்ஸ்டாயின் கொள்கைகள் காந்திஜியின் வாழ்க்கையின் போக்கையே மாற்றி அமைத்தன என்று கூறலாம். காந்திஜிக்கு டால்ஸ்டாயிடம் ஏற்பட்டிருந்த மரியாதை காரணமாகவே தென்னாப்பிரிக்காவில் அவர் ஸ்தாபித்த இரண்டாவது ஆசிரமத்துக்கு 'டால்ஸ்டாய் பண்ணை' என்று பெயர் வைத்தார்.

டால்ஸ்டாய் பண்ணையில் காந்திஜி வசித்த காலத்தில் பல கடினமான பிரச்னைகளும் சோதனைகளும் ஏற்பட்டன. அவற்றில் சிலவற்றை இப்போது பார்க்கலாம்.

டால்ஸ்டாய் பண்ணையில் வாலிபர்களும் கன்னிகைகளும் வசித்தார்கள். எல்லாரும் வித்தியாசமில்லாமல் பேசிப் பழகிக்கொண்டிருந்தார்கள். இத்தகைய கல்மஷமில்லாத வாழ்க்கை அவர்கள் நடத்தவேண்டுமென்பதுதான் காந்திஜியின் விருப்பம். இதில் தவறு ஒன்றும் சேர்ந்துவிடாது என்ற பூரண நம்பிக்கை காந்திஜிக்கு இருந்தது. ஆயினும் ஆசிரமத்தில் வசித்த இளம் பெண்களின் பாதுகாப்புக்குத் தாம் பொறுப்பு என்பதை உணர்ந்து அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வந்தார்.

ஒரு சமயம் காந்திஜியின் மனதுக்கு மிகவும் ஆயாசம் தரும்படியான சம்பவம் ஒன்று நேரிட்டுவிட்டது. அதாவது ஆசிரமத்து வாலிபர்கள் சிலர் இரண்டு இளம் பெண்களிடம் பரிகாச வார்த்தையாடினார்கள் என்று தெரிந்தது. இந்தமாதிரி மறுபடி நேராதிருப்பதற்கு என்ன வழி என்று காந்திஜி சிந்தனை செய்தார். அந்த இளைஞர்களை அழைத்துக் கண்டித்துப் புத்திமதி கூறினார். இதனால் அவருடைய உள்ளம் திருப்தியடையவில்லை. இலங்கையில் தன்னந்தனியே சிறையிருந்த சீதா தேவியை இராவணன் நெருங்கவும் அஞ்சியது மகாத்மாவுக்கு அடிக்கடி நினைவு வந்துகொண்டிருந்தது. சீதை அத்தகைய கடுந்தவ விரதத்தை மேற்கொண்டிருந்ததினால் அல்லவோ, இராவணன் சீதா தேவியிடம் நெருங்கவும் தயங்கினான்? அவ்விதமே டால்ஸ்டாய் பண்ணையில் குடியேறி ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்ட பெண்களும் தவ விரதத்தை மேற்கொள்ளவேண்டுமென்று மகாத்மா எண்ணினார். அவர்கள் தவ விரதம் மேற்கொண்டிருப்பதோடு, அதற்கு வெளிப்படையான அறிகுறியும் இருக்கவேண்டும். அந்த அறிகுறியானது பரிகாசப் பேச்சுப் பேச விரும்பும் வாலிபர்களுக்குப் புத்தி புகட்டி எச்சரிக்கை செய்யக் கூடியதாயிருக்கவேண்டும்.

ஒருநாள் இரவெல்லாம் காந்தி மகாத்மா ஒரு கண நேரம் கூடத் தூங்காமல் மேற்கூறிய விஷயத்தைப் பற்றி யோசனை செய்

தார். பொழுது புலரும் சமயத்தில் ஒரு முடிவுக்கு வந்தார். பொழுது நன்றாக விடிந்ததும் அந்த இரு பெண்களையும் கூப்பிட்டார். "என் அருமைக் குழந்தைகளே! நேற்று உங்களைப் பார்த்துச் சில வாலிபர்கள் பரிகாச வார்த்தை பேசினார்கள். இதை எண்ணி நேற்று இரவெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை. அவர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும். மற்றவர்களுக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இதற்காக உங்களை ஒரு தியாகம் செய்யும்படி கோருகிறேன். உங்களுடைய தலையில் உள்ள அழகான நீண்ட கூந்தலை வெட்டி விட விரும்புகிறேன். அப்படி வெட்டி விட்டால், உங்களைப் பார்க்கும்போதெல்லாம் அந்த வாலிபர்கள் தங்கள் தவறை நினைத்து வருத்தப்படுவார்கள். ஆசிரமத்தில் மறுபடியும் இம்மாதிரி தவறு நேராது. ஆசிரமத்தின் நன்மைக்காக உங்களை இந்தக் கடினமான சோதனைக்கு உட்படுத்தவிரும்புகிறேன். உங்களுக்குச் சம்மதமா? என் சொல்லுக்காக இந்தத் தியாகத்தைச் செய்வீர்களா?" என்று கேட்டார்.

இந்தியப் பெண்களுக்குத் தங்கள் கூந்தல் நீளமாயிருக்க வேண்டுமென்பதில் மிக்க ஆசை உண்டு அல்லவா? எந்த இளம் பெண்மணிதான் காந்தி மகான் கூறிய சோதனைக்குத் தயங்காமல் உட்படுவாள்?

அந்தப் பெண்கள் இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள். அவர்களுடைய தாய்மார்களுக்கு இது தெரிந்தபோது அவர்களும் வந்து காந்திஜியிடம் மன்றாடினார்கள். மகாத்மா "உங்களைக் கட்டாயப் படுத்த எனக்கு இஷ்டமில்லை; வேண்டாம் என்றால் வேண்டாம்" என்று கூறி மறுபடியும் தம்முடைய நோக்கம் என்னவென்பதை விளக்கிச் சொன்னார். கடைசியில் அந்தப் பெண்கள் இருவரும், "பாபு! உங்கள் விருப்பத்துக்கு நாங்கள் மாறு சொல்லவில்லை. தங்கள் கட்டளைப்படி நடக்கிறோம்!" என்று சம்மதம் கொடுத்தார்கள். தாய்மார்களும் சம்மதித்தார்கள்.

காந்தி மகாத்மா எழுதுகிறார் :—"இந்த நிகழ்ச்சியை இன்று எழுதும் இதே கையினால் கத்திரிக் கோலை எடுத்து அந்தப் பெண்களின் கூந்தலை வெட்டி எறிந்தேன். அந்த இரு பெண்களும் உத்தம குணவதிகள்; நல்ல புத்திசாலிகள். அவர்களில் ஒருத்தி பிற்காலத்தில் இம் மண்ணுலக வாழ்வை நீத்துச் சென்றாள். இன்னொருத்தி இன்று ஒரு பெரிய குடும்பத்தின் தலைவியாயிருக்கிறாள். அவர்களுடைய கூந்தலை வெட்டி விட்ட பிறகு, நான் நடத்தி வந்த வகுப்பில் அதன் காரணத்தை எடுத்து விளக்கமாகக் கூறினேன். இதனால் மிகவும் நல்ல பலன் ஏற்பட்டது. அதற்குப் பிறகு டால்ஸ்டாய் பண்ணையில் எந்தப் பெண்ணிடமும் யாரும் பரிகாசமாகப் பேசியது கிடையாது!" மேற்கண்டவாறு சம்பவத்தைப் பற்றி எழுதிவிட்டு மகாத்மா ஓர் எச்சரிக்கையும் தந்திருக்கிறார். இம்மாதிரி கடின சோதனைகளைத் தகுதியற்றவர்கள் கையாளக் கூடாது என்பதுதான் எச்சரிக்கை. காந்திஜி எழுதியிருப்பதாவது:—

"இந்தச் சம்பவத்தை நான் சொல்லியிருப்பது மற்றவர்கள் இதைப் பின்பற்ற வேண்டுமென்பதற்காக அல்ல. இம்மாதிரி சோதனையைக் கையாளுவதில் பெரும் அபாயம் இருக்கிறது. நாங்கள் மேற்கொண்டிருந்த சத்தியாக்கிரஹம் எத்தனை தூய்மையானது என்பதைக் காட்டுவதற்காகவே இந்த நிகழ்ச்சியைச் சொன்னேன். இத்தகைய தூய்மையினாலேதான் இயக்கம் வெற்றிபெறும் என்னும் நிச்சயம் எனக்கு இருந்தது. இப்படிப்பட்ட கடுமையான சோதனையை ஒருவர் கையாளுவதாயிருந்தால், தம் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளிடம் சொந்தத் தாயும் தகப்பனும் செலுத்தும் அன்பைத் தாமும் செலுத்தப் பழகியிருக்க வேண்டும். சொந்தக் குழந்தைகளின் விஷயத்திலும் அதே மாதிரி செய்வோம் என்ற திட நம்பிக்கை இருக்க வேண்டும். சோதனையில் தவறிப் போனால் அதற்கேற்ற பிராயச் சித்தம் செய்து கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்."

* * *

காந்தி மகாத்மா உருக்கமாக விவரித்திருக்கும் மேற்படி சம்பவத்துக்குப் பிறகு டால்ஸ்டாய் பண்ணையின் வாழ்க்கை மேலும் தூய்மையடைந்தது; எளிமையும் பெற்றது. அது வரையில் ஆசிரமத்தில் வசித்த இந்தியர்கள் ஐரோப்பிய கனவான்களைப் போல் உடை தரித்து வந்தார்கள். இனி எல்லாரும் எளிய தொழிலாளிகளின் உடை தரிக்க வேண்டும் என்று தீர்மானமாயிற்று. சிறைக் கைதிகளுக்கு அளிக்கப்படும் உடையை ஓரளவு பின்பற்றி நீல நிற முரட்டுத் துணியில் கால்சட்டையும் அரைக் கைப் பனியன்களும் தைத்துக் கொண்டார்கள். ஆசிரமத்து ஸ்திரீகள் தையல் வேலை கற்றுக் கொண்டு ஆடவர்களுக்கு

வேண்டிய சட்டைகளையெல்லாம் தாங்களே தைத்துக் கொடுத்தார்கள்.

இம்மாதிரியே ஆசிரமவாசிகளின் உணவும் முன்னைவிட எளிய உணவாயிற்று.

பிற்காலத்தில் காந்தி மகாத்மாவின் வாழ்க்கையில் முக்கியத்துவம் அடைந்த பல காரியங்கள் டால்ஸ்டாய் பண்ணையில் ஆரம்பமாயின. தினந்தோறும் மாலை ஏழு மணிக்கு அனைவரும் கூடிப் பிரார்த்தனை செய்யும் வழக்கம் டால்ஸ்டாய் பண்ணையில் ஆரம்பித்ததுதான். இந்தப் பிரார்த்தனைக் கூட்டங்களில் பஜனைகீதங்கள் பாடப்பட்டன. இராமாயணம், குர்ஆன், பைபிள் ஆகிய மத நூல்களிலிருந்து சிற்சில பகுதிகள் படிக்கப்பட்டன.


காந்திஜிக்கு ஏற்கெனவே இயற்கை வைத்திய முறைகளிலும் உணவுப் பரிசோதனைகளிலும் ஆர்வம் உண்டு. டால்ஸ்டாய் பண்ணையில் அச்சோதனைகளை நடத்த வேண்டிய வசதிகள் இருந்தன. பண்ணையில் யாருக்கு என்ன நோய் வந்தாலும் டாக்டரைக் கூப்பிடுவதில்லை. சமீபத்தில் கூப்பிடும்படியாக டாக்டரும் இல்லை. காந்திஜி இயற்கை வைத்திய முறைகளைக் கொண்டே எல்லா நோய்களையும் குணப்படுத்தி வந்தார். ஆசிரமத்துக்கு வெளியே அக்கம் பக்கத்திலிருந்துகூட மகாத்மாவிடம் இயற்கை வைத்தியம் செய்து கொள்ள ஜனங்கள் வந்தார்கள். டால்ஸ்டாய் பண்ணைக்குச் சற்று தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் ஒன்று இருந்தது. ஸ்டேஷன் மாஸ்டரின் குழந்தை—இரண்டு வயதுப் பிள்ளைக்கு—டைபாய்டு சுரம் கண்டது. அதை இயற்கை வைத்திய முறையைக் கையாண்டு குணப்படுத்தினார். இயற்கை வைத்திய முறையில் தம்முடைய அநுபவங்களைக் கொண்டு காந்தி மகாத்மா "ஆரோக்கிய வழி" என்னும் ஒரு அருமையான நூலை எழுதியிருக்கிறார்.

ஆனால் இந்தத் துறையிலேயும் மகாத்மா எழுதியுள்ள எச்சரிக்கையை நாம் கவனித்து மனதில் வைத்துக் கொள்வது அவசியம். அந்த எச்சரிக்கை வருமாறு:— "இம்மாதிரி பல சோதனைகளை டால்ஸ்டாய் பண்ணையில் நான் நடத்தினேன். ஒன்றிலாவது தோல்வியடையவில்லை. ஆனால் நான் கைக்கொண்ட முறைகளில் அப்போதிருந்த உறுதி இப்போது எனக்குக் கிடையாது. 1918-ம் வருஷத்தில்

இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு எனக்கு வயிற்றுக் கடுப்பு நோய் வந்தது. அதை என்னுல் குணப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம் என்னுடைய நம்பிக்கை குறைந்து போனதா அல்லது சீதோஷ்ண நிலையில் வித்தியாசமா என்று சொல்ல முடியாது. தென்னுப்பிரிக்காவில் வெற்றி யளித்த சில முறைகள் இந்தியாவில் வெற்றிதர வில்லை யென்று மட்டும் சொல்லுவேன்.''

இயற்கை வைத்திய முறைகளில் சோதனை நடத்தியதுபோல் மகாத்மா உணவுப் பரிசோதனைகளும் செய்து வந்தார். மகாத்மாவின் சோதனைகளில் அவருக்கு உற்ற துணையாக இருந்து வந்தவர் மிஸ்டர் காலன் பாக் என்னும் ஜெர்மானியர். இருவரும் ஒரு தடவை கல்கத்தாவில் பசுமாடுகளை நிறையப் பால் கறக்கும்படி செய்வதற்காகக் கையாளும் கொடூர முறைகளைப் பற்றி ஒரு பத்திரிகையில் படித்தார்கள். "பாலை சாப்பிடாமல் ஏன் வாழ்க்கை நடத்தக் கூடாது?'' என்று காந்திஜி கேட்டார். உடனே, தாம் பால் உணவை விட்டு விடத் தயார் என்றார் மிஸ்டர் காலன் பாக். அவ்விதமே இருவரும் பால் அருந்துவதை நிறுத்தினார்கள். கொஞ்சகாலைக் கெல்லாம் சமைத்த உணவு எல்லாவற்றையுமே விலக்கி விட்டுக் கனி உணவு சாப்பிட ஆரம்பித்தார்கள். புதிய பழங்களையும் உலர்ந்த பழங்களையுமே சாப்பிட்டுக் காலம் கழித்தார்கள்.

'' தனித்த பழ உணவு மட்டுமே அருந்திய ஐந்து வருஷம் நான் சுகமாயிருந்தது போல் வேறு எந்தக் காலத்திலும் ஆரோக்கியமாயிருந்ததில்லை. அந்த காலத்தில் தான் உடல் உழைப்புச் சக்தி எனக்குப் பூரணமாயிருந்தது. நாள் ஒன்றுக்குச் சர்வ சாதாரணமாய் நாற்பது மைல் நடப்பேன். குறிப்பிட்ட ஒரு தினத்தில் ஐம்பத்தைந்து மைல் நடந்திருக்கிறேன். இவ்விதம் உடலுக்கு ஏற்பட்ட நலத்தையல்லாமல், கனி உணவு என்னுடைய ஆத்மீக வளர்ச்சிக்கும் உறு துணையாயிருந்தது என்று உறுதியாகக் கூறுவேன். இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகு, தனித்த பழ உணவு மட்டும் சாப்பிட முடியாமல் வேறு உணவும் சேர்த்துக் கொள்ளும்படி நேரிட்டது. அதை எப்போது நினைத்தாலும் எனக்கு வருத்தம் உண்டாகாம லிருப்பதில்லை'' என்று காந்தி மகாத்மா எழுதி யிருக்கிறார்.



எட்டாம் அத்தியாயம்

மரத்தடியில்

இரும்பை யொத்த கையினால் தன் கையை யாரோ பிடித்ததும் சூரியா திடுக்கமுற்றுத் திரும்பிப் பார்த்தான். அவ்விதம் பிடித்தவன் ஆஜானுபாகுவான ஒரு போலீஸ்காரன் என்பதைக் கண்டான். ஒரு கணநேரத்துக்குள் சூரியாவின் உள்ளத்தில் ஆயிரம் எண்ணங்கள் பாய்ந்து சென்றன. இத்தனை நாட்கள், இத்தனை தூரம் பிரயாணம் செய்த போதெல்லாம் பிடிபடாமல் வந்து கடைசியாக இந்த டில்லி நகரின் முழுச் சோம்பேறிப் போலீஸ்காரனிடந்தானா சிக்கிக்கொள்ள வேண்டும்? அதுவும் தான் செய்யவேண்டிய முக்கியமான காரியங்கள் சில பாக்கி யிருக்கும் போது? இன்னும் இரண்டு நாள் அவகாசம் தனக்குக் கிடைத்திருக்கக் கூடாதா? — இவ்விதம் ஏற்பட்ட மனக் கலக்கத்தைச் சூரியா வெளியில் காட்டிக் கொள்ளாமல், "யார் நீ? எதற்காக என் கையைப் பிடிக்கிறாய்?" என்று அதட்டலாகக் கேட்டான். போலீஸ்காரன் "இன்ஸ்பெக்டர் சாகிப் உன்னைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்!" என்று சொன்னதும் சூரியாவின் கலக்கம் அதிகமாயிற்று. "உன் இன்ஸ்பெக்டர் சாகிப்பை எனக்குத் தெரியாது. அவரிடம் எனக்கு என்ன வேலை? நான் வர முடியாது!" என்றான்.

அதற்கு அந்தப் போலீஸ்காரன், "இன்ஸ்பெக்டர் சாகிப்பைப் பார்த்தால் இப்படிச் சொல்ல மாட்டாய். சீக்கிரம் வா!" என்று சொன்னான்.

இதை அவன் கூறிய குரல் சூரியாவின் மனதில் ஏதோ ஒரு சந்தேகத்தை உண்டாக்கியது. குரலைக் காட்டிலும் அதிகமாக அந்தப் போலீஸ்காரனுடைய முகத்தில் தோன்றிய புன்னகையும் கண் சிமிட்டலும் சூரியாவின் மனதில் குழப்பத்தை உண்டாக்கின. இதற்குள்ளே ஜும்மா மசூதியின் படிகளில் அவர்கள் நின்ற இடத்துக்கு அருகில் கூட்டம் அதிகமாகச் சேர ஆரம்பித்தது. சிலர் போலீஸ்காரனுக்கும் சூரியாவுக்கும் நடந்த விவாதத்தைக் கவனிக்கவும் தொடங்கியிருந்தார்கள். இதையெல்லாம் ஒரு விநாடி நேரத்துக்குள் எண்ணிப்

பார்த்து, எப்படியிருந்தாலும் அந்தப் போலீஸ்காரனுடன் போவதே நல்லது என்று சூரியா தீர்மானித்தான். "சரி; வருகிறேன். இன்ஸ்பெக்டர் சாகிப் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான் சூரியா. "பேசாமல் என்னுடன் வா! ஆனால் ரொம்ப நெருங்கி வராதே! கொஞ்ச தூரத்திலேயே என் பின்னால் வந்து கொண்டிரு! இன்ஸ்பெக்டர் சாகிப்பிடம் நான் உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன்!" என்று சொல்லி விட்டுப் போலீஸ்காரன் நடந்தான்.

சூரியாவுக்கு இப்போது தைரியம் அதிகமாயிற்று. தான் தப்பித்துக் கொள்வதற்குச் சௌகரியமாகப் போலீஸ்காரன் முன்னால் சென்றதினாலும் அவன் திரும்பிக் கூடத் தன்னைப் பார்க்காததினாலும் சூரியாவின் மனதில் ஏற்கெனவே இருந்த சந்தேகம் உறுதிப்பட்டது. ஆனால் இன்ஸ்பெக்டர் சாகிப் என்பது யார்? ......இது விஷயம் குழப்பத்தை அளித்தாலும் சூரியா போலீஸ்காரன் போன வழியே, அவனைத் தன் கண் பார்வையிலிருந்து தவற விடாமல், பின்னால் நடந்து சென்றான். போலீஸ்காரன் ஜும்மா மசூதியைச் சுற்றி ஜே ஜே என்று நெருங்கி நின்ற ஜனக் கூட்டத்தின் வழியாகப் புகுந்து நடந்து வெள்ளி வீதிக்குச் சென்று மணிக்கூண்டை அடைந்தான். பிறகு டவுன் ஹால் காம்பவுண்டுக்குள் புகுந்து போய் அதன் பின்புறத்தில் கொஞ்ச தூரத்தில் இருந்த விசாலமான மைதானத்தை அடைந்தான்.

இன்று 'காந்தி மைதானம்' என்ற பெயர் பெற்று விளங்கும் அந்த மைதானத்தில் ஆங்காங்கே சில மரங்களும் செடிகளும் இருந்தன. மைதானத்தின் விளிம்பை அடைந்ததும் போலீஸ்காரன் நின்று திரும்பிப் பார்த்தான். சூரியா அருகில் வரும் வரையில் நின்றான். சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டி "அந்த மரத்துக்குப் பின்னால் இன்ஸ்பெக்டர் சாகிப் இருக்கிறார். போய்ப் பார்த்துக் கொள! இன்ஸ்பெக்டர் சாகிப்பும் நீயும் பேசும்போது நான் அருகில் இருப்பது நன்றாயிராது. உங்களுக்குள் எத்தனையோ இரகசியங்கள் இருக்கும்!" என்று சொல்லி மறுபடியும் புன்னகை புரிந்தான்.

சூரியா பொங்கி வந்த வியப்புடனே போலீஸ்காரன் சுட்டிக் காட்டிய மரத்தை நோக்கிச் சென்றான். மரத்தின் அருகில் போகும்போது அதன் பின்னால் ஒரு பெண் உட்கார்ந்து கையில் வைத்துக் கொண்டிருந்த புத்தகத்தை ஆழ்ந்த கவனத்துடன் படித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. "அவள் யார்?" என்ற எண்ணம் சூரியாவின் உள்ளத்தில் உதயமாவதற்குள், அவனுடைய காலடிச் சத்தத்தைக் கேட்டு அந்தப் பெண் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவள் தாரிணி தான் என்று கண்டதும் சூரியாவுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று.

"வருக! வருக! வீரர் சூரியாவின் வரவு நல்வரவாகுக!" என்றாள் தாரிணி.

"ஓகோ! இன்ஸ்பெக்டர் சாகிப் நீங்கள் தானா? அந்தப் போலீஸ்காரன் என் கையைப் பிடித்ததும் ஒரு நிமிஷம் திணறிப் போய்விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே சூரியா தாரிணிக்கு எதிரில் உட்கார்ந்தான். மேலும் தொடர்ந்து "உங்களுடைய சாமர்த்தியம் எனக்குத் தெரிந்த விஷயந்தான். ஆயினும் ஒரு போலீஸ்காரனையே உங்கள் வலையில் சிக்க வைப்பீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை" என்று சொன்னான்.

"போலீஸ்காரனைக் கண்டு எதற்காக அவ்வளவு பயம்? புரட்சி வீரர் சூரியாவே போலீஸ்காரனுக்குப் பயப்பட்டால் மற்றவர்களின் கதி என்ன?" என்று தாரிணி கேட்டாள்.

"பயம் என்று நான் சொன்னேனா? எத்தனையோ இடத்தில் எவ்வளவோ வேஷம் போட்டு எத்தனையோ தந்திரம் செய்து போலீஸாரிடம் தப்பி வந்தேன். புனிதமான சந்நியாசி வேஷங் கூடப் போட்டுக் கொண்டேன். அப்படியெல்லாம் செய்து இத்தனை தூரம் டில்லிக்கு வந்து விட்டுத் தங்களைச் சந்திக்காமல், விஷயந் தெரிந்து கொள்ளாமல், போலீஸ் 'லாக் - அப்'புக்குப் போகிறதென்றால் தகைப்பாயிராதா?"

"போன காரியமெல்லாம் பூர்த்தியாயிற்றா?" என்று தாரிணி கேட்டாள்.

"எப்படிப் பூர்த்தியாகும்? அதற்குள்ளேதான் தலைபோகிற காரியம் என்று தங்களிடமிருந்து கடிதம் வந்து விட்டதே? அந்தக் கடிதத்தினால் தேவபட்டணத்தில் நேர்ந்த விபரீதங்களைக் கேட்டால் ஆச்சரியப் படுவீர்கள். எதற்காக அப்படிக் கடிதம் எழுதினீர்கள்? சீதாவுக்கு அவ்விதம் என்ன நேர்ந்து விட்டது? உண்மையில் சீதாவை நினைத்தால் எனக்குக்கோபம் வருகிறது. ஒரு தனிப்பட்ட மனுஷிக்காக எவ்வளவோ முக்கியமான தேசிய காரியங்கள் தடைப்பட்டுப் போகிறதென்றால்?..."

"நான் அவ்விதம் நினைக்கவில்லை. கோபுரத்தைப் பொம்மை தாங்குகிறது என்று நினைத்துக் கொள்வது போல நம்மாலேதான் தேசத்தின் காரியங்கள் நடக்கவேண்டுமென்று நினைத்துக் கொள்கிறோம். தெய்வ சித்தம் ஒன்று இருக்கிறது; அதன் சட்டப்படி எல்லாம் நடக்கின்றன. தேசத்தை நாம் காப்பாற்ற முயல்வதை விட நமக்குத் தெரிந்திருக்கும் ஒருவரின் கஷ்டத்தைப் போக்கினால் கைமேல் பலன் உண்டு" என்றாள் தாரிணி.

"கடைசியாக நாம் சந்தித்த பிறகு தத்துவ ஆராய்ச்சி பலமாகச் செய்திருக்கிறீர்கள். முன் தடவை நாம் பேசியபோது தனி மனிதர்களுடைய சுக சௌகரியங்களைக் காட்டிலும் தேச நன்மையே பெரிது என்று முடிவு செய்தோம். இந்த மாறுதலுக்குக் காரணம் என்னவோ தெரியவில்லை."

"உங்கள் அத்தங்காதான் காரணம். தேசம் எந்தக் கேடாவது கெட்டுப் போகிறது, சீதாவின் கஷ்டம் நீங்கினால் போதும் என்று இருக்கிறது."

"சீதாவின் பேரில் உங்களுக்கு அளவில்லாத கருணை உண்டாகியிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை."

"ஒருவரிடம் பிரியம் கொள்ளுவதற்குக் காரணம் வேண்டுமா, என்ன?"

"வேண்டியதில்லைதான். பிரியம் கொள்வதற்குக் காரணம் வேண்டியதில்லை என்பதினாலேதானே ஸ்திரீகள் முதல் நம்பர் அயோக்கியர்கள் பேரில் காதல் கொள்கிறார்கள்?"

இவ்விதம் சொல்லி விட்டுச் சூரியா தாரிணியை உற்றுப் பார்த்தான். அவளுடைய முகத்தில் அவன் எதிர்பார்த்தபடி எந்தவிதமான மாறுதலையும் காணவில்லை.

"நீங்கள் சொல்வது எனக்கு நன்றாய்ப் புரியவில்லை. ஸ்திரீகள் அயோக்கியர்கள்மீது மட்டுமே காதல் கொள்கிறார்கள் என்று சொல்கிறீர்கள்? அப்படியானால் அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஸ்திரீகள் காதல் கொள்ளக்கூடிய யோக்கியர்கள் சிலரும் இருக்கிறார்கள். எனக்கு அப்படிப்பட்ட யோக்யர் ஒருவரைத் தெரியும்" என்று தாரிணி கூறிவிட்டு எங்கேயோ பார்த்தாள்.

சூரியா எரிச்சலுடன், "அப்பேர்ப்பட்ட தனிப் பெரும் யோக்யர் யார் என்று எனக்கும் தெரியும். அவர் பெயர் சௌந்தரராகவர். இல்லையா?" என்றான்.

"நான் சௌந்தர ராகவனை நினைத்துக் கொண்டு பேசவில்லை. என்றாலும் அவரையும் நான் அயோக்கியர் என்று சொல்ல மாட்டேன். ஏதோ சில தவறுகள் அவர் செய்யக்கூடும். ஆனால் சீதாவிடம் அவருக்கு எவ்வளவோ அன்பு உண்டு என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். சீதாவினுடைய வீண் சந்தேகங்களினால் அவருடைய அன்பையெல்லாம் விஷமாகச் செய்துவிடுகிறாள்" என்றாள் தாரிணி.

"போகட்டும்; ராகவனுடைய அந்தரங்கத்தைச் சீதாவைவிட நீங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?"

"சில சமயம் ஒரு பொருளுக்கு மிகவும் சமீபத்தி விருப்பவர்களைக் காட்டிலும் கொஞ்சம் தூரத்திலிருப்பவர்களுக்கு அதன் சொரூபம் நன்றாய்த் தெரிகிறது. அதனால் சீதாவைக் காட்டிலும் ராகவனுடைய உள்ளத்தை என்னால் நன்றாய் அறிந்து கொள்ள முடிந்தது."

"யார் கண்டார்கள்? சீதாவைக் காட்டிலும் ராகவனுடைய உள்ளத்துக்கு நீங்கள் அதிக சமீபத்தில் இருக்கலாமல்லவா?"

"சூரியா! நீங்கள் ஏதோ விகல்பமாகப் பேசுகிறீர்கள். இத்தனை நேரமும் அறியாமற் போனேன். இப்படிப் பேசுவதானால் நான் உங்களுடன் பேசவே இஷ்டப்படவில்லை. நீங்கள் எழுந்து போகலாம்!"

"இந்த மைதானம் உங்களுக்குச் சொந்தமா என்ன?"

"சரி; அப்படியானால் நான் எழுந்து போகிறேன்" என்று சொல்லிக் கொண்டு தாரிணி எழுந்தாள்.

சூரியா பரபரப்புடன், "தாரிணி! நான் சொன்னதையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். நான் கூறியது பிசகுதான். தயவுசெய்து உட்காருங்கள்! சீதா விஷயமாக நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போங்கள்" என்றான்.

தாரிணி மறுபடி உட்கார்ந்து, "திடீரென்று உங்களிடம் இந்த மாறுதல் காணப்படுவதின் காரணம் தெரியவில்லை. யாரோ ஏதோ சொல்லி உங்கள் மனதைக் கெடுத்திருக்கிறார்கள். சீதாவைப் பார்த்து விட்டு இங்கு வந்தீர்களா?" என்றாள்.

"இல்லை; ஸ்டேஷனில் இறங்கியதும் நேரே இங்கு வந்தேன். என்னுடைய அறைக்குக் கூடப் போகவில்லை. சீதா எப்படி இருக்கிறாள்? அவள் விஷயத்தில் நான் என்ன செய்ய வேண்டும்?"

"அவள் மனதில் ஏதோ ஒரு விஷம் புகுந்திருக்கிறது. ஏதோ ஒரு சந்தேகம் குடிகொண்டிருக்கிறது. அதனாலேயே அவளுடைய குடும்ப வாழ்க்கை பாழாகிக் கொண்டிருக்கிறது. அவளுடைய ஆயுளுக்கே அபாயம் வந்துவிடும் போலிருக்கிறது. நீங்கள் உடனே போய் விசாரித்து அவளுடைய மனதிலுள்ளதைத் தெரிந்துகொள்ள முயல வேண்டும். சில நாளைக்கு அவளை எங்கேயாவது அனுப்பிவைத்தாலும் நல்லது."

"அவள் எந்த ஊருக்குப் போவாள்? போவதற்கு எந்த ஊர் இருக்கிறது? நான் சொல்கிறேன், தாரிணி! சீதா இனிமேல் சுகமடைவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அவள் விவாகரத்து செய்து கொள்ள வேண்டும். ஆனால் ஹிந்து சாஸ்திரமும் பிரிட்டிஷ் சட்டமும் அதற்கு இடங் கொடுக்கவில்லை. ஆகையால் கஷ்டப்பட்டுப் பட்டுச் சாகவேண்டியதுதான்."

"நான் கூடச் சில சமயம் நினைப்பதுண்டு. சீதா விவாகரத்து செய்துவிட்டு உங்களைக் கலியாணம் செய்து கொண்டால் எவ்வளவு சந்தோஷமாயிருப்பாள் என்று."

"ஒருநாளும் இல்லை. நீங்கள் நினைப்பது பெருந் தவறு. சீதாவிடம் என்னுடைய அபிமானம் அந்த ரகமேயன்று. அத்தையிடம் நான் கொண்ட அபிமானம் அவளுடைய பெண்ணின் க்ஷேமத்தில் அக்கறை கொள்ளச் செய்திருக்கிறது. மற்றப்படி அவளுடைய இலட்சியங்களுக்கும் என்னுடைய இலட்சியங்களுக்கும் பொருந்தவே பொருந்தாது. சீதா பட்டுப்பூச்சி ரகத்தைச் சேர்ந்தவள். பட்டிலும் பகட்டிலும் பளபளப்பிலும் படாடோபத்திலும் பிரியம் கொண்டவள். பார்ட்டிகளுக்குப் போவதே ஜன்ம சாபல்யம் என்று எண்ணியிருக்கிறவள்......"

"சீதா பிறக்கும்போதே இந்த மாதிரி குணங்களுடனே பிறந்தாளா? எல்லாம் பின்னால் ஏற்பட்ட வழக்க பழக்கங்கள்தானே?"

"அது எப்படியிருந்தால் என்ன? தாரிணி! உங்களுக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். தேவபட்டணம் போலீஸாரிடமிருந்து தப்புவதற்காக நான் சந்நியாசி வேஷம்பூண்டேன். அந்த வேஷத்திலேயே நான் சில நாள் இருக்க நேர்ந்தது. அப்போது உண்மையாகவே நாம் சந்நியாசியாகிவிட வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. மதராஸில் காமாட்சி அம்மாளைப் பார்த்துப் பேசிய பிறகு அந்த எண்ணம் பலம் பெற்றுத் தீர்மானம் ஆயிற்று."

"தங்களுடைய தீர்மானத்தை நான் மிகவும் மெச்சுகிறேன்."

"எல்லாவிஷயத்திலும் நம்முடைய கருத்துக்கள் ஒத்திருப்பது பற்றிச் சந்தோஷம்" என்றான் சூரியா.

"எனக்கும் சந்தோஷந்தான். ஆனால் காமாட்சி அம்மாள் தங்களுடைய குருநாதரானது எப்படி?"

"சீதாவைப் பற்றி விசாரிப்பதற்காக அந்த அம்மாளிடம் போயிருந்தேன். சீதாவுக்கு டைபாய்ட் சுரம் வந்தது பற்றியும் நீங்கள் அவளுக்கு சிசுருஷை செய்து பிழைக்க வைத்தது பற்றியும் சொன்னாள்."

"அவ்வளவு தானா! அதிலிருந்து எப்படி சந்நியாசம் வாங்கிக் கொள்ளும் உறுதி ஏற்பட்டது?"

"காமாட்சி அம்மாள் இன்னும் சில விஷயங்களும் சொன்னாள். ராகவனு



டைய இளம்பிராயத்தில் அவன் வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்பட்டதைப் பற்றியும் அவளும் அதற்கு ஆவலாயிருந்தது பற்றியும் சாதி வித்தியாசங் காரணமாகத் தான் மறுத்து விட்டது பற்றியும் சொன்னாள். தாயாருடைய வாக்கை இவ்வளவு பக்தியாக நிறைவேற்றி வைத்த சௌந்தர ராகவனை நான் மனதார மெச்சினேன்."

"நீங்கள் இன்றைக்கு ஒரு மாதிரி பேசி வந்ததின் காரணம் இப்போது தெரிகிறது. ஒரு விஷயம் கேட்க விரும்புகிறேன். அந்தப் பெண்ணின் இப்போதைய அபிப்பிராயத்தைப் பற்றிக் காமாட்சி அம்மாள் சொன்னாளா?"

"இல்லை; அவளுக்கு எப்படி அது தெரியும்? ஆனால் 'ராகவன் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டிருந்தால் ஒரு வேளை சந்தோஷமாயிருந்திருப்பான்' என்று சொன்னாள்."

தாரிணி சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, "இதற்கும் தங்களுடைய சந்நியாசத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டாள்.

"நான் எப்போதாவது கலியாணம் செய்து கொள்வதாயிருந்தால் ஒரு பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ள முடியும். அவள் இன்னொரு ஆசாமியிடம் காதல் கொண்டிருப்பதாகத் தெரிந்தால், நான் சந்நியாசம் வாங்கிக் கொள்வதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?"

"நீங்கள் நினைப்பது முற்றும் தவறு. அந்தப் பெண்ணின் இதயத்தில் ராகவனுக்கு இப்போது கொஞ்சம் கூட இடமில்லை. நீங்கள் சந்நியாசி ஆனதாகத் தெரிந்தால் அவளும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிக் கன்னிகா மடத்தைச் சேர்ந்து விடுவாள்!"

சூரியா ஆர்வத்துடன் தாரிணியின் கரங்களைப் பிடித்துக் கொண்டு, "இது உண்மைதானா?" என்று கேட்டான்.

"தங்களுடைய இருதயத்தையே கேட்டுப் பார்க்கிறதுதானே?" என்று சொன்னாள் தாரிணி.

"என் இருதயம் சொல்லியதை நம்புவதற்கு இதுவரை எனக்குப் பயமாயிருந்தது. அவ்வளவு பெரிய பாக்கியம் இந்த துரதிர்ஷ்டசாலிக்கு எப்படிக் கிடைக்கும் என்றும், இருதயம் நம்மை ஏமாற்றுகிறது என்றும் எண்ணிக் கொண்டிருந்தேன்."

"இருதயம் ஏமாற்றவில்லை. சலன சுபாவமுள்ள அறிவுதான் ஏமாற்றுகிறது. சீதாவையும் அதே அறிவுதான் ஏமாற்றுகிறது. நீங்கள் உடனே சென்று அவளுடைய நிலையைத் தெரிந்துகொண்டு வாருங்கள். சீதாவை நான் பார்த்து இருபது நாள் ஆகி விட்டது. எப்படியிருக்கிறாளோ என்று கவலையாயிருக்கிறது."

"அப்படியே ஆகட்டும். நாளைக்கு இந்த இடத்திலேயே சந்திக்கலாமா?"

"கூடவே கூடாது. சுற்றுமுற்றும் பாருங்கள். நம்மை எத்தனை பேர் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியும். நாளைக்கு ஜாகையில் சந்திக்க வேண்டியதுதான். நம்முடைய நண்பர்கள் உங்களுடைய அநுபவங்களைக் கேட்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். நாளைக்கு இதே நேரத்துக்கு மணிக் கூண்டுக்கு அருகில் வாருங்கள். என்னுடைய காவல் போலீஸ்காரன் இந்துலால் உங்களைச் சந்தித்து ஜாகைக்கு அழைத்துக் கொண்டு வருவான். இப்போது என்னுடன் தொடர்ந்து வர வேண்டாம். நான் அந்தப் போலீஸ்காரன் அருகில் போய்ச் சேரும் வரையில் இந்த மரத்தடியிலேயே உட்கார்ந்திருங்கள்."

இவ்விதம் கூறிவிட்டுத் தாரிணி எழுந்து நடந்தாள். சூரியா அங்கேயே உட்கார்ந்து தாரிணியும் போலீஸ்காரனும் மறையும் வரையில் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒன்பதாம் அத்தியாயம்

இதயம் நின்றது

தாரிணி கண்ணுக்கு மறைந்ததும் சூரியா அங்கிருந்து எழுந்து செல்லலாம் என்று நினைத்தான். அச்சமயம் இத்தனை நேரமும் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்திருந்த மூன்று மனிதர்கள் தன்னை நோக்கி வருவதைச் சூரியா பார்த்தான். அவர்கள் வரட்டும் என்று காத்திருந்தான்.

மூன்று மனிதர்களும் வந்து சூரியாவைச் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

"தம்பி! உனக்கு எந்த ஊர்?" என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

"எனக்கு மதராஸ்!" என்றான் சூரியா.

"ஆ! மதராஸ்!" என்று மூன்று பேரும் சேர்ந்து சொன்னார்கள்.

சற்றுப் பொறுத்து, "இங்கு ஒரு பெண் உட்கார்ந்திருந்தாளே? அவள் உனக்கு என்னமாகவேணும்?" என்று ஒருவன் கேட்டான்.

"அவள் என் சிநேகிதி!" என்றான் சூரியா.

"ஆகா! அவள் உன் சிநேகிதி!" என்றார்கள் மூன்று பேரும் சேர்ந்தாற்போல்.

அதற்குப் பிறகு சற்று நேரம் சம்பாஷணை நகரவில்லை. சூரியா பொறுத்துப் பார்த்துவிட்டு, "உங்களுக்கு என்னவேண்டும்? எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்றான்.

"பஹூத் அச்சா! அப்படிக் கேள், சொல்கிறோம்" என்றான் ஒருவன்.

"பஹூத் அச்சா! அப்படிக் கேள், சொல்கிறோம்" என்றார்கள் மற்ற இருவரும்.

அவர்கள் ஏதோ ஒரு சுதேச சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம் என்று ஏற்கெனவே சந்தேகித்தான். இப்போது அவர்கள் பல்லவி, அநுபல்லவி முறையில் பேசுவதிலிருந்து சந்தேகம் உறுதிப்பட்டது.

"சொல்லுங்கள்; கேட்பதற்குத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் சூரியா.

"அந்தப் பெண்ணின் சிநேகம் உனக்கு வேண்டாம்!" என்று ஒருவன் சொன்னான்.

மற்ற இருவரும் அதையே திருப்பிச் சொன்னார்கள்.

"ஏன்? அந்தப் பெண்ணிடம் என்ன கெடுதல்? அவளிடம் சிநேகம் செய்தால் என்ன?" என்று சூரியா கேட்டான்.

"பெரிய இடத்துச் சமாசாரம்!" என்றான் ஒருவன்.

"ஆமாம்; ரொம்பப் பெரிய இடத்துச் சமாசாரம்" என்றார்கள் மற்ற இருவரும்.

"அப்படியானால் அந்த ரொம்பப் பெரிய இடத்திலே போய்ச் சொல்லுங்கள். என்னிடம் ஏன் சொல்ல வேண்டும்?" என்றான் சூரியா.

மூன்று பேரும் ஒருவருடைய முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.

"எனக்கு நேரமாகிறது; நான் போகிறேன்" என்றான் சூரியா.

மூன்று பேரில் ஒருவன் மற்றவர்களைப் பார்த்துச் "சொல்லி விடலாமா?" என்று கேட்டான்.

"சொல்லி விடலாமா?" என்று அவர்களும் கேட்டார்கள்.

முதல் மனிதன் சூரியாவைப் பார்த்து, "தம்பி! உனக்குப் பணம் வேணுமா?" என்று கேட்டான்.

"எவ்வளவு?" என்று சூரியா கேட்டான்.

முதல் மனிதன் மற்றவர்களைப் பார்த்து "எவ்வளவு என்று கேட்கிறான்; சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லு!" என்றார்கள்.

"தம்பி! உனக்கு லட்சம் ரூபாய் பணம் வேண்டுமா? ஒரு லட்சம் ரூபாய்!" என்றான் முதல் மனிதன்.

சூரியா கொஞ்சம் திகைத்துப் போனான். மெதுவாகச் சமாளித்துக் கொண்டு, "கள்ள நோட்டா? நிஜப் பணமா?" என்றான்.

"ஆகா! கள்ள நோட்டு!" என்று சொல்லிவிட்டு மூவரும் சிரித்தார்கள்.

பிறகு முதல் மனிதன், "தம்பி! நிஜப் பணம்! ஒரு லட்சம் ரூபாய். நோட்டு வேண்டாமென்றால், தங்கமாகத் தருகிறேன்!" என்றான்.

"ஆமாம்; தங்கமாகத் தருகிறோம்!" என்றார்கள் மற்றவர்கள்.

"கொடுங்கள்!" என்று சூரியா கையை நீட்டினான்.

"கெட்டிக்காரப் பையன்; பணத்துக்குக் கையை நீட்டுகிறான்!" என்று சொல்லி விட்டு மூவரும் சிரித்தார்கள்.

கடைசியில் ஒருவன் மென்று விழுங்கிக் கொண்டு, "ஒரு லட்சம் ரூபாய் சும்மாக் கிடைக்குமா? எங்களுக்கு ஒரு உதவி செய்தால் கிடைக்கும்!" என்றான்.

"என்ன உதவி?" என்றான் சூரியா.

"சற்று முன்னால் நீ ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தாயே? அவளைக்கொண்டு வரும்படி எங்களுக்குப் பெரிய இடத்து உத்தரவு கிடைத்திருக்கிறது. அதற்கு நீ உதவி செய்தால் லட்சம் ரூபாய் ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளலாம்!" என்றான் அந்த மனிதன்.

சூரியா இம்மாதிரி ஏதோ வரப் போகிறது என்று எதிர்பார்த்தான். ஆயினும் அதைக் காதால் கேட்டதும் சொல்ல முடியாத கோபம் வந்தது.

கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டான். இப்போது கோபித்துக் கொண்டு என்ன பயன்? அவர்கள் மூன்று பேர்; முரட்டுத் தடியர்கள். அவர்களுடன் சண்டை பிடிப்பதால் பல காரியங்கள் கெட்டுப் போகும். மேலும் அவர்களுடைய உண்மையான நோக்கம் என்ன என்று அவனுக்கு இன்னும் சந்தேகமாயிருந்தது.

கொஞ்ச நேரம் யோசிப்பதுபோல் பாசாங்கு செய்துவிட்டு, "இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள்; யோசித்துப் பதில் சொல்கிறேன்" என்றான்.

"எப்போது எங்கே சந்திக்கலாம்?" என்று முதல் மனிதன் கேட்டான்.

"இதே இடத்தில் இதே நேரத்தில் நாளை மறுநாள் சந்திக்கலாம்!" என்றான் சூரியா.

"உன்னுடைய ஜாகை எங்கே?" என்று ஒருவன் கேட்டான்.

"ஜாகை எங்கே?" என்று மற்ற இருவரும் கேட்டார்கள்.

"தற்போது எனக்கு ஜாகை எதுவும் இல்லை. இனிமேலே தான் தேட வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டு சூரியா எழுந்தான்.

அவர்களும் எழுந்தார்கள்.

சூரியா எங்கே போனாலும் அவர்களும் சற்றுத் தூரத்தில் பின் தொடர்ந்துவந்தார்கள். அவன் டோங்காவில் சென்றபோது அவர்கள் பின்னால் காரில் தொடர்ந்தார்கள்.

காரியம் இல்லாத இடங்களுக்கெல்லாம் சூரியா சென்று அந்த மூன்று பேருடைய பார்வையிலிருந்து தப்புவதற்கு இரவு வெகு நேரமாகிவிட்டது. ஆயினும், சீதாவை அன்று இரவு எப்படியும் பார்த்து விடுவது என்ற தீர்மானத்துடன் நடந்தான்.

• • •

சீதா தன்னுடைய அறையில் தன்னந் தனியாக உட்கார்ந்திருந்தாள்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் 'டிக் டிக், டிக் டிக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

சீதாவின் இதயம் கடிகாரத்தின் 'டிக்' சத்தத்தோடு ஒத்து அடித்துக் கொண்டிருந்தது.

கடிகாரத்தின் ஒவ்வொரு 'டிக்' கும் தன்னுடைய வாழ்நாளின் இறுதியை அருகில் கொண்டு வந்து கொண்டிருக்கிறது என்பது சீதாவுக்குத் தெரிந்துதானிருந்தது.

கடிகார முள் நள்ளிரவின் பன்னிரண்டு மணியை நெருங்க நெருங்க, சீதாவின் இதயத்தில் குத்தியிருந்த துன்ப முள்ளின் வேதனை அதிகமாகிக் கொண்டிருந்தது.

மணி பதினொன்றரை ஆகிவிட்டது. அவளுடைய ஆயுளில் இன்னும் அரை மணி நேரந்தான் பாக்கியிருக்கிறது.

அதற்குள் எத்தனையோ காரியங்கள் செய்தாக வேண்டும்.

குழந்தைக்குக் கடிதம் எழுத வேண்டும்; லலிதாவுக்குக் கடிதம் எழுத வேண்டும்; இவருக்கும் நாலுவரி எழுதத்தான் வேண்டும்.

ஆனால் எத்தனை முயன்றாலும் எழுத வரவில்லையே, என்ன செய்கிறது?

• • •

சரியாக மணி பன்னிரண்டுக்கு மார்பில் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு செத்துப் போவது என்று சீதா முடிவு செய்திருந்தாள்.

அதற்குத் தயாராவதற்காக ஒன்பது மணிக்கே ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டாள்.

சாகிறபோது அவலட்சணமாக எதற்காகச் சாக வேண்டும்? நாலு பேர் வந்து பார்க்கிறவர்கள், "அடாடா! இப்பேர்ப்பட்ட அழகியை மனைவியாகப் படைத்தும் இந்த ராகவனுக்கு அவளை வைத்துக் கொண்டு வாழக் கொடுத்து வைக்கவில்லையே?" என்று சொல்ல வேண்டாமா?

அதற்காகவே ஆடை ஆபரணங்களைப் பூண்டு அழகு செய்து கொண்டு வந்து எழுதுவதற்கு உட்கார்ந்தாள்.

வஸந்திக்கு முதலில் கடிதம் எழுதி வைக்க எண்ணினாள். ஆனால் குழந்தையை நினைத்துக் கொண்டதும் அழுகை அழுகையாக வந்தது. அவளைப் பார்க்காமல் செத்துப் போகிறோமே என்ற எண்ணத்தினால் நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. குழந்தைக்கு என்ன எழுதுவது? "உன் அப்பா என்னைக் கொன்று விட்டார்! அவரை நீ எனக்காகப் பழி வாங்கு!" என்று எழுதலாமா? சீச்சீ! இது என்ன பைத்தியக்கார எண்ணம்?

முதலில் லலிதாவுக்குக் கடிதம் எழுதலாம் என்று ஆரம்பித்தாள். "என் ஆருயிர்த் தோழி லலிதாவுக்கு......" என்பதற்கு மேலே ஒன்றும் எழுதத் தோன்றவில்லை. லலிதாவை நினைத்ததும் பழைய ஞாபகங்கள் எல்லாம் பொங்கிக் கொண்டு வந்தன. ஆகா! ராஜம்பேட்டையில் கலியாணத்துக்கு முன்னால் லலிதாவும் தானும் கூடிக் குலாவி அந்தரங்கம் பேசிய நாட்கள் எவ்வளவு ஆனந்தமாக இருந்தன? அப்புறம் இவர் பெண் பார்க்க வந்தபோதும், லலிதாவுக்குப் பதிலாகத் தன்னை மணப்பேன் என்று சொன்ன போதும் தான் அடைந்த களிப்பு என்ன? இப்போது அநுபவிக்கும் நரக வேதனை என்ன? தான் அப்போது மனதினால் லலிதாவுக்குச் செய்த துரோகந்தான் இப்போது தன்னை வந்து இப்படிப் பிடித்திருக்கிறதோ, என்னமோ?

லலிதாவுக்கு என்ன எழுதுவது? "என்னை மன்னித்து விடு!" என்று எழுதுவதா? அப்படி எழுதினால் அவளுக்கு அர்த்தமே ஆகாதே! எதற்காக மன்னிப்பு என்று கேட்பாளே? தன்னுடைய துயரத்தைச் சொன்னால்கூட அவளுக்கு விளங்காது. அவள் ஆனந்தமான இல்வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறாள். சந்தோஷமாயிருக்கிறவர்களுக்குத் துக்கப் படுகிறவர்களின் துக்கத்தை அறிந்துகொள்ளக் கூட முடியாது. "என் புருஷன் என்னைக் கஷ்டப் படுத்துகிறான்!" என்றால், "வெறுமனே ஒரு புருஷன் கஷ்டப் படுத்துவானா? உன்னுடைய நடத்தையில் ஏதாவது கெடுதல் இருக்கும்!" என்று சொல்லுவார்கள். அதிலும் பெண் பிள்ளைகள் அப்படித் தான் நினைப்பார்கள்.

லலிதாவுக்கு இப்போது என்ன எழுதி என்ன பிரயோஜனம்? சந்தோஷமாயிருக்கிறவளிடம் போய்த் தன்னுடைய துக்கத்தைச் சொல்லிக் கொள்வானேன்? அப்படிச் சொல்லிக்கொண்டு அவள் பரிதாபப்படுவ

தாக வைத்துக் கொள்ளலாம். அத ஞல் சாகப் போகிற தனக்கு என்ன உபயோகம் ஏற்படப் போகிறது?

இவருக்குக் கடிதம் எழுதலாம் என் ருல், அதைப்பற்றி நினைக்கும்போதே அவளுடைய இதயம் வெடித்து விடும் போலிருந்தது!

என்னத்தை எழுதுவது?

"இந்த உலகத்தில் தங்களைத் தவிர எனக்கு வேறு கதியில்லை. தாங்களே என்னை வெறுத்து விட்டீர்கள். இனி இந்தப் பூமியில் இருந்துதான் என்ன பயன்?" என்று எழுதலாமா?

"ஓயாமல் 'தொலைந்து போ!' 'தொலைந்து போ!' என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே? அதன்படி இதோ தொலைந்து போகிறேன்!" என்று எழுதி வைக்கலாமா?

இவ்விதம் எண்ணியதும் சீதாவின் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது.

ராகவன் தன்னை எத்தனையோ விதத்தில் கொடுமைப் படுத்தியதெல் லாம் சீதாவின் மனதை அவ்வள வாகப் பாதிக்கவில்லை. ஆனால் 'தொலைந்து போ!' 'தொலைந்து போ!' என்று சிலகாலமாக அவன் அடிக்கடி சொல்லி வந்தது அவளை எல்லை யில்லாத துன்பத்துக்கு ஆளாக்கியது. எங்கே தொலைந்து போகிறது? தன்னை அழைத்துக் கொள்ள யார் காத்துக் கொண்டிருக்கிருர்கள்? தாயில்லை;— தகப்பனுரைப் பற்றித் தகவல் இல்லை. வேறு எங்கே தொலைந்து போகிறது?

ஒருவழியாகச் செத்துத் தொலைந்து போக வேண்டியதுதான்!

ஆகா! சீதையைப் பூமாதேவி அழைத்துக் கொண்டதுபோல் தன்னை அழைத்துக் கொள்ளக் கூடாதா? சகுந்தலையை அவள் தாயார் அழைத் துக்கொண்டு போனதுபோல் தன்னைத் தன்னுடைய தாயார் அழைத்துக் கொண்டு போகக் கூடாதா?

அப்படியெல்லாம் கதைகளிலேதான் நடக்கும். உண்மை வாழ்க்கையில் நடைபெருது. தானே கட்டுக்கொண்டு செத்துப் போனுல்தான் போனது! நல்ல வேளையாக, இவர் கைத் துப் பாக்கி வாங்கிவைத்திருக்கிருர்! அதற் காகத் தன் கணவருக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான். கடிதத் தில் அவ்விதம் நன்றி செலுத்துவதாக எழுதி வைக்கலாமா?

ஐயோ! இந்தக் கடிகாரத்துக்கு என்ன இத்தனை அவசரம்? ஏன் இவ் வளவு வேகமாக இது ஓடுகிறது? ஏன் இவ்வளவு துரிதமாக இருதயம் அடித்துக் கொள்கிறது!

இதோ மணி பன்னிரண்டுக்கு நெருங்கி வந்துவிட்டதே! இன்னும் சில நிமிஷந்தானே பாக்கி இருக்கிறது?

பன்னிரண்டு மணி அடித்ததும் தன்னைத் தானே சுட்டுக் கொள்வ தாகச் சீதா தீர்மானம்செய்திருந்தாள்.

பன்னிரண்டரை மணிக்கு அவர் வருவார். வருவதற்குள்ளே காரியம் முடிந்து போய்விட வேண்டும். அவர் வீட்டிலிருக்கும் போது இந்தக் காரி யம் தான் செய்தால், வீணாக அவர் பேரில் பழி விழுந்தாலும் விழும். "இருந்தும் கெடுத்தாள்; இறந்தும் கெடுத்தாள்!" என்ற அபகீர்த்தி தனக்கு ஏன் ஏற்பட வேண்டும்?

குழந்தை வஸந்தி தாயில்லாப் பெண்ணுனுலும், தகப்பனுராவது இருக்க வேண்டாமா?

அந்த இரண்டு நிமிஷமும் ஆகிவிட் டது. கடிகாரம் டிங், டிங், டிங் என்று பன்னிரண்டு மணி அடித்தது.

மணியை மனதில் எண்ணிக் கொண்டே வந்த சீதா, மணி அடித்து முடிந்ததும் கைத் துப்பாக்கியைக் கையில் எடுக்க எண்ணினுள்.

அந்தச் சமயத்தில் அறையின் அருகில் காலடிச் சத்தம் கேட்டது.

சீதாவின் இதயத்தின் துடிப்பு சட்டென்று நின்றது; அவளுடைய கை செயலற்றுப் போயிற்று.

வருகிறவர் யார்? அவர்தாளு? சீக்கிரம் வந்துவிட்டாரா? மனதுக்கு மனது விஷயம் தெரிந்துபோய்த் தன்னைக் காப்பாற்ற வருகிருரா?

கைத்துப்பாக்கியைப் பார்த்ததும் தான் செய்ய எண்ணிய காரியத்தை ஊகித்து அறிந்து கொள்வாரா? தன்னுடைய மன வேதனையைத் தெரிந்து கொள்வாரா? தன்னிடம் பணிந்து மன்னிப்புக் கேட்பாரா?


உள்ளத்தை உருக்கும் அற்புத
சம்பவங்கள்
நிறைந்த
அருமையான
சித்திரம்
ஜெமினியின்
சக்ரதாரி
இப்பொழுது சென்னை கிரௌன், ஸ்டார் இரு தியேட்டர்களிலும்
மற்றும் அநேக முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது....
டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
சென்னையில் தினசரி 3 காட்சிகள். 3, 6.15, 9.30

இன்பத் தேன் வந்து பாயுது!

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 'வேல்ஸ் இளவரச'ராக இருந்த காலத்தில் ஒரு சமயம் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவர் கல்கத்தாவுக்கு வந்த சமயத்தில் சென்னையிலிருந்து ஒரு பிரமுகர் அங்கே சென்றிருந்தார். வேல்ஸ் இளவரசரின் பவனியைப் பார்ப்பதற்காக அவர் மற்றும் பலரைப் போல் ஊர்வலம் வரும் சாலை ஒன்றுக்குச் சென்றார். அங்கே, ஊர்வலத்தைப் பார்ப்பதற்கு நல்ல இடம் பிடிப்பதற்கு அவர் முயற்சி செய்தபோது, பாதுகாப்புக்காக நின்ற போலீஸ்காரர்கள் குறுக்கிட்டுத் தடுத்தனர். தடுத்த போலீஸ்காரர் வட நாட்டவர் என்ற எண்ணத்தின் பேரில் அந்தப் பிரமுகர் "இந்தப் பாழும் போலீஸ்காரன் இங்கேயும் வந்து தொலைத்திருக்கிறானே?" என்றார்.

அதைக் கேட்ட போலீஸ்காரர் ஒருவர் உடனே அவரைத் திரும்பிப் பார்த்து, "ஐயா! நீங்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்களா?" என்று ஆர்வத்துடன் கேட்டார்.

அந்தப் பிரமுகருக்கு ஒரு பக்கம் வெட்கமாயிருந்தது. இன்னொரு பக்கத்தில், "தமிழனுக்குத் தமிழ் மொழி எத்தனை இன்பம் தருகிறது! நாம் இவனைப் பற்றிக் கேவலமாகப் பேசியிருந்தும் வெளியூரில் வந்திருக்கும் இவனுடைய காதுக்குத் தமிழ் மொழி இன்பம் அளித்ததினால் அல்லவா நம்மிடம் இவ்வளவு ஆசையோடு பேசினான்?" என்று வியப்பாயிருந்தது.

மேற்படி அநுபவத்துக்கு உள்ளான தமிழ்நாட்டுப் பிரமுகர் தர்மரட்சாமணி ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர். (காலஞ்சென்ற பிரசித்தி பெற்ற நீதிபதி வி. கிருஷ்ணசாமி ஐயரின் புதல்வர்.) மேற்படி நிகழ்ச்சியை எட்டயபுரத்தில் நடந்த பாரதி விழாவில் அவர் கூறினார். கூறிவிட்டு, "மகா கவி பாரதியார்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே

என்று பாடியிருக்கிறாரே, அதன் பொருள் மேற்படி போலீஸ்காரனுடைய தமிழ் ஆர்வத்தைப் பார்த்த போதுதான் எனக்கு விளங்கிற்று!" என்று விளக்கிக் கூறினார்.

தமிழ் நாட்டின் தாரக மந்திரமாக எண்ணக்கூடிய மேற்படி பாரதியாரின் கீதம் இப்போது இசைத்தட்டில் வெளியாகியிருக்கிறது, "இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்பதன் பொருள் மேலும் நன்கு விளங்கும்படியாக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அந்த கீதத்தைப் பாடியிருக்கிறார்.


தமிழ் மொழியின் இனிமையையும் பெருமையையும் பற்றி மகா கவி பாரதியார் பாடியிருக்கும் மற்றொரு அருமையான பாடல்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்று ஆரம்பமாகும் பாடல். இதை ஷண்முகப்பிரியா, மோகனம், காபி, செஞ்சுருட்டி ஆகிய நாலு ராகங்களில் ஸ்ரீமதி எம். எஸ். ராகமாலிகையாகப் பாடியிருக்கிறார். பாடலில் அங்கங்கே அமைந்திருக்கும் கருத்துக்குத் தக்கபடி ராகங்களிலும் இனிமை, இரக்கம், பெருமிதம், வேண்டுதல் முதலிய உணர்ச்சிகள் ததும்பி நிற்கின்றன. "தமிழ் முழக்கம்" என்னுமிடத்தில் அமைந்திருக்கும் செஞ்சுருட்டியின் அழகான பிடி ஆயிரம் முரசுகள் வெற்றி முழக்கம் செய்யும் பெருமித உணர்ச்சியைத் தருகிறது.

ராகமாலிகையைத் தொடர்ந்து மறு பக்கத்தில் "செந்தமிழ் நாடு" கீதம். அதில் நாலடி பாடிய பிறகு பின்னணிச் சங்கீதம் செஞ்சுருட்டியிலிருந்து மத்தியமாவதிக்கு லாகவமாகச் செல்கிறது. பிறகு, தமிழ்நாட்டின் தேசிய கீதமாவதற்கு உரிய "வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!" என்னும் வாழ்த்துப் பாடல், பல பிரமுகர்களாலும் ரஸிகர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட மத்தியமாவதி வர்ணமெட்டில் கம்பீரமாகப் பாடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் இசைப் பொக்கிஷம் என்று சொல்லக்கூடிய இந்த இசைத்தட்டு விற்பனையில் கிடைக்கும் லாபம் முழுவதும் பாரதியார் ஞாபகார்த்த மண்டப நிதிக்குச் சேர்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எச். எம். வி. கம்பெனியார் தங்கள் விற்பனைக் கமிஷனையும், ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் தமக்குரிய காபிரைட் கமிஷனையும், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாட்டுக்குரிய சன்மானத்தையும் மேற்படி நிதிக்கு உதவ முன்வந்ததன் பொருட்டுப் பாரதி சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன். -ரா. கி.



கிணறு வெட்ட, பூதம் கிளம்பியது!

ரஜனி

கொழும்பு, டிசம்பர் 20

இந்தியர் பிரஜா உரிமை மசோதாவை இப்பொழுதுள்ள நிலையிலேயே இலங்கை அரசாங்கம் சட்டமாக்கினால், இலங்கை அரசியல் திட்டத்தின் பிரகாரம் மசோதாவிலுள்ள பல ஷரத்துகள் சட்ட விரோதமாகி விடலாம் என்று, ராஜிநாமாச் செய்த வர்த்தக மந்திரி ஸ்ரீ வி. சுந்தரலிங்கம் ஒரு பெரிய பிரச்னையைக் கிளப்பி விட்டிருக்கிறார். இதற்கு அவர் குறிப்பிடும் சட்ட நியாயங்கள், அரசாங்கத்துக்கும் யோசனை கூறும் சட்ட நிபுணர்களுக்கும் பெரிய தலைவலியை உண்டு பண்ணியிருக்கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்துள்ள பொழுதிலும் அதன் பார்லிமெண்டின் சட்டம் செய்யும் அதிகாரங்கள் அரசியல் திட்டத்தின் 29-வது ஷரத்தின்கீழ்க் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. பார்லிமெண்டின் இஷ்டப்படி யெல்லாம் சட்டம் செய்யும் சர்வ சுதந்திரம் அளித்து அரசியல் திட்டம் திருத்தி யமைக்கப்பட்டாலொழிய 29-வது ஷரத்தை மீறிச் செய்யும் சட்டங்கள் செல்லுபடியாக முடியாது. இந்த 29-வது ஷரத்து பின்வருமாறு :—

"நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலவுவதற்குற்ற நல்ல சர்க்கார் அமைவதற்கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் பார்லிமெண்டு சபைக்கு உண்டு. ஆனால் பார்லிமெண்டு சபை நிறைவேற்றும் எந்தச் சட்டமும், சகல மதத்தினரும் சுதந்திரமாகவும் தங்கு தடையில்லாமலும் தங்கள் மத சம்பிரதாயங்களை அனுஷ்டிப்பதற்குத் தடையாக இருக்கக் கூடாது. எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினரையும் மற்ற மதத்தினருக்கு இல்லாத கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் உட்படுத்துவதாயிருக்கக் கூடாது. மற்றவர்களுக்கில்லாத விசேஷ சலுகைகளையும் உரிமைகளையும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கோ, மதத்தினருக்கோ அளிப்பதாகவும் இருக்கக் கூடாது."

சட்டம் செல்லுமா?

மேற்படி ஷரத்தின் விதிகளுக்கு விரோதமான பல அம்சங்கள் இந்தியர் பிரஜா உரிமை மசோதாவில் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக, இலங்கையில் குறிப்பிட்ட சில வருட காலம் வசித்த இந்தியருக்கு இந்நாட்டின் பிரஜைகள் ஆகும் உரிமையைப் பல நிபந்தனைகளுடன் மசோதா அளிக்கிறது. ஆனால் அதே அளவு காலம் இலங்கையில் வசித்த பிரிட்டிஷாருக்கு இலங்கைப் பிரஜையாகும் உரிமையை மசோதா மறுக்கிறது. இதன்படி மசோதா அரசியல் திட்டத்தின் 29-வது ஷரத்தை மீறுவதாக ஆகிறது. இந்தியர்களிலேயே ஒரு சாராருக்கு மற்ற ஜனங்களுக்கு இல்லாத கட்டுப்பாடுகளை விதிக்கும் மசோதாவின் ஷரத்துகளும் அப் பிரிவை மீறுவதாகும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணந்து கொள்ள இந்து மதம் அனுமதிக்கிறது. இஸ்லாமும் அனுமதிக்கிறது. இரு மனைவிகளையுடையவர்கள் இலங்கைப் பிரஜையாகக் கூடாதென்று மசோதா தடுப்பதும் அரசியல் திட்ட ஷரத்தை மீறுவதாகும். மேற்படி பிரிவுகளை மீறும் சட்டங்கள் செல்லுபடியாக மாட்டாதென்றும் அதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் ஸ்ரீ சுந்தரலிங்கம் எடுத்துக் காட்டியிருப்பது கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகி யிருக்கிறது.

மந்திரி கூறும் சமாதானம்

சர்க்கார் கொண்டு வரும் சட்டங்களை ஆராய்ந்து, பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்துத் திருத்தங்களைச் செய்வதே ஜனநாயக ஆட்சி முறையில் பார்லிமெண்டின் இலட்சியம். இந்தியர் பிரஜா உரிமை மசோதாவைப் பற்றிப் பேசுகையில், அதற்கு எவ்வித திருத்தத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாதென்ற சர்வாதிகாரத் தொனியில் சர்க்கார் கட்சித் தலைவர் ஸ்ரீ பண்டாரநாயகா சொல்லியது பார்லிமெண்டு நியதிக்கே முரணானது.

1938-ம் வருடம் பண்டித நேரு இலங்கைக்கு வந்தபொழுது அவருக்கு அளித்த சில வாக்குறுதிகளின்படி மசோதாவைத் திருத்த ஸ்ரீ சுந்தரலிங்கம் விரும்பினார். இந்தியாவைப் பகைத்துக் கொள்வது

இலங்கைக்கு நன்மையல்ல என்றும் அவர் நினைத்தார். இதற்கு ஸ்ரீ பண்டாரநாயகா இடமளிக்க மறுத்ததால்தான் ஸ்ரீ ஸி. சுந்தரலிங்கம் வர்த்தக மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்தார். தாமும் அவ்விதம் செய்யாததற்கு மந்திரி ஸ்ரீ ஜி. ஜி பொன்னம்பலம் என்ன காரணம் சொல்லுகிறார், தெரியுமா? மந்திரி சபையில் இருந்தாலாவது இந்தியாவின் கஷ்ட நிவாரணத்துக்கு இயன்ற அளவு வாதாடிப் பார்க்க இடமுண்டு. அந்தச் சந்தர்ப்பமும் இல்லாமல் ராஜிநாமாச் செய்வதில் யாருக்கு என்ன பலன் என்று கேட்கிறார்.

மதுவிலக்கும் சர்க்காரும்

இலங்கை பூரண மதுவிலக்குப் பிரசார சங்கத்தின் தூது கோஷ்டியொன்று உள்நாட்டு மந்திரியைப் பேட்டி கண்டு நாடெங்கும் பூரண மதுவிலக்கை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. இதற்கு மந்திரி பிடி கொடுத்துப் பதில் சொல்ல மறுத்துவிட்டார். அவ்விஷயமாகச் சர்க்கார் கொள்கையை விளக்கிக் கூடிய சீக்கிரம் ஓர் அறிக்கை விடுப்பதாகச் சொல்லித் தூது கோஷ்டியைத் திருப்பி யனுப்பிவிட்டார். இலங்கையில் பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் அடுத்த வாரம் ஆரம்பமாகும் சைவ சித்தாந்த சமாஜத்தின் மகாநாட்டில் ஒரு தீர்மானம் வருகிறது. இந்த மகாநாட்டுக்குத் தென் இந்தியாவிலிருந்து நூற்று இருபத்தைந்து பிரதிநிதிகள் வருகிறார்கள்.

காலக்ஷேபம்

வாஸ்தவம்

நோயாளி:— டாக்டர் ஸார், உடம்பில் ஒரு சுறுசுறுப்பையும் வேகத்தையும் உண்டாக்கும்படியாக ஒரு மருந்து தரக்கூடாதா?

டாக்டர்:— அந்த மாதிரி உணர்ச்சியை மருந்தினால் நீங்கள் உண்டாக்கிவிட முடியாது. நான் உங்களுக்கு 'பில்' அனுப்பி வைக்கிறேன்; அப்புறம் பாருங்கள்!

★

அசலும் நகலும்

ஒரு சினிமா நடிகையினிடம் ஒரு வைர மாலை இருந்தது. அதைப் பத்திரமாய்க் காப்பாற்றுவதற்காக அவள் இரவெல்லாம் தூக்கமின்றித் தவிக்க வேண்டி வந்தது. திடீரென்று ஒரு நாள் அவளுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அந்த மாலையை மேஜை டிராயரில் வைத்துக் கீழ்க் கண்டபடி ஒரு குறிப்பு எழுதி வைத்தாள்:

"இது இமிடேஷன் வைர மாலை; அசல் வைரமாலை பாங்கியில் இருக்கிறது."

ஒரு திருடன் அந்த மாலையை எடுத்துக் கொண்டு மேஜையின்மேல் இன்னொரு குறிப்பை எழுதி வைத்தான்:

"எனக்கு இந்த இமிடேஷன் மாலை போதும்! நானும் அசல் திருடன் அல்ல; இந்தப் பக்கத்தில் தன் தொழிலை நடத்தும் திருடன் சிறையில் இருக்கிறான்!"

நல்ல விளம்பரம்!

ஒரே தெருவில் இரண்டு ஹோட்டல்கள் இருந்தன. இரண்டு ஹோட்டல் சொந்தக்காரர்களும் பிரமாதமாக விளம்பரம் செய்தார்கள்.

ஒருவர், "உலகத்திலேயே உன்னதமான தின்பண்டங்கள் இந்த ஹோட்டலில்தான் தயாராகின்றன!" என்று விளம்பரம் செய்தார்.

இன்னொருவர், "அகில உலகத்திலும் சிறந்த தின்பண்டங்கள் தயார் செய்வது இந்த ஹோட்டல்தான்!" என்று விளம்பரம் செய்தார்.

இரண்டு ஹோட்டல்களுக்கும் மத்தியில் அதே தெருவில் இன்னொருவர் ஒரு ஹோட்டல் வைத்திருந்தார். அவர், "இந்த வட்டாரத்திலேயே சிறந்த தின்பண்டங்களுக்கு எங்கள் ஹோட்டலுக்கு வாருங்கள்!" என்று விளம்பரம் செய்தார்.

★

சரிதான்!

அவர்:—ஏன் உங்கள் காரை விற்று விடுகிறீர்கள்?

இவர்:—என் காரில் உள்ள ஒவ்வொரு பாகமும் கெட்டுப்போன சத்தம் போடுகின்றன; ஆனால் ஹாரன் மாத்திரம் சத்தம் போடுவதே யில்லை—அதனால்தான் விற்று விடுவதென்று தீர்மானித்து விட்டேன்!

கைமேல் பலன்

விடுகதை

'கொக்கரக்கோ' என்று கோழி கூவிற்று!

சின்னப்பன் படுக்கையை விட்டு எழுந்தான். எழுந்தவன், தன் மனைவியை ஒரு முறை பரிதாபத்துடன் பார்த்தான். அவள் அசைவற்றுத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய நெற்றியில் விழுந்து புரண்டு கொண்டிருந்த கூந்தலை ஒதுக்கிவிட்டு, அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

இன்னொரு முறை கோழி கூவிற்று!

அவன் மீண்டும் ஒரு முறை தன் மனைவியைப் பார்த்தான். பார்த்துவிட்டு, "நாளெல்லாம் நாய்மாதிரி உழைச்சுப்பிட்டு வருகிறாள், பாவம்! உடம்பெல்லாம் ஒரே அசதியா யிருக்காதா? எப்படி இம்புட்டுச் சீக்கிரத்தில் எழுந்திருக்க முடியும்?" என்று தனக்குத் தானே வாய்விட்டுச் சொல்லிக் கொண்டான்.

மீண்டும் கோழி கூவிற்று!

சின்னப்பன் தன் மனைவியை லேசாகத் தீண்டி, "செல்லம், செல்லம்!" என்றான்.

செல்லம் திடுக்கிட்டு எழுந்து, "என்ன, பொழுதா விடிந்துவிட்டது?" என்றாள்.

"இல்லே, இப்பத்தான் கோழி கூவிற்று!" என்றான் சின்னப்பன்.

செல்லம் எழுந்து பல்லைத் துலக்கி முகத்தை அலம்பிக் கொண்டாள். குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டு, "நீங்க வீட்டிலேதானே இருக்கப் போறீங்க?" என்று கேட்டாள்.

"ரொம்ப நல்லாயிருக்கு! பொம்மனாட்டி வேலைக்குப் போறது; புருசன் வீட்டிலே குந்திக்கிட்டுக் கொட்டாவி விடறதா, என்ன? அந்தப் பாழாய்ப்போன 'மாட்ச் பாக்டரி'க்காரன் மனசு எப்போ இளகப் போகுதோ, நாங்க எப்போ வேலைக்குப் போகப் போறோமோ? அதுவரை எங்கே யாச்சும் கூலி வேலை, கீலி வேலை இருக்கான்னு பார்க்கவேணுமில்லே?"

"அப்படின்னு போறப்போ தட்டியை இழுத்துச் சாத்தி நல்லாக் கட்டிட்டுப் போறீங்களா?"

"போறேன்."

"மத்தியானம் நான் அய்யர் வீட்டிலேருந்து சோறு எடுத்துக்கிட்டு வாரதுக்குள்ளே நீங்க இங்கே வந்து இருக்கிறீங்களா!"

"இருக்கிறேன்."

"சரி, அப்போ நான் போயிட்டு வாரேன்!" என்று சொல்லிவிட்டுச் செல்லம் நடையைக் கட்டினாள்.

சின்னப்பன் வாயில் பல் குச்சியை எடுத்து வைத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் சென்றான்.

★

அந்த ஊரில் 'எம். எம். மாட்ச் பாக்டரி' என்றால், 'மன்னார்குடி மாணிக்கம் தீக்குச்சித் தொழிற்சாலை' என்று எல்லோருக்கும் தெரியும். அந்தத் தொழிற்சாலையில் ஏறக்குறைய இருநூறு பேருக்குமேல் வேலை செய்து வந்தனர். இந்த இருநூற்றுச் சொச்சம் பேருடைய வயிறுகளையும் சென்ற மகாயுத்தத்தின்போது தோன்றிய பஞ்சம், அபேதவாதிகளாக மாற்றிவிட்டது. தங்களுக்குத் தெரியாமல் அபேதவாதிகளாக மாறிவிட்ட தங்கள் வயிறுகளைத் தேசியவாதிகளாக மாற்ற அந்த அப்பாவித் தொழிலாளிகள் பெருமுயற்சி செய்தனர். அந்த முயற்சியில் அவர்கள் ஒரு வருஷம் வெற்றியடைந்தனர்; இரண்டு வருஷங்கள் வெற்றியடைந்தனர்; மூன்று வருஷங்கள் வெற்றியடைந்தனர். அதற்குமேல் அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லை; அந்தப் பாழும் வயிறுகள் அத்தனையும் 'அசல் அபேதவாதி'களாகவே மாறி, நிலைத்து நிலைத்து நின்றுவிட்டன!

இதன் பயனாகத் தங்களுக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்று கோரி, முதலில்

அவர்கள் முதலாளிக்கு ‘நோட்டீஸ்’ விடுத்தனர். முதலாளிகளின் சம்பிரதாயத்தையொட்டி அந்த ‘நோட்டீஸ்’ காற்றில் பறக்க விடப்பட்டுவிடவே, தொழிலாளிகள் கடவுளுக்கு அடுத்தபடியாக இருந்த வேலை நிறுத்தத்தில் இறங்கினர்; கடவுளைப்போல் வேலை நிறுத்தம் தங்களைக் கைவிடாதென்றும் அவர்கள் நம்பினர். அப்படி நம்பியவர்களில் ஒருவன்தான் சின்னப்பன்.

வேலை நிறுத்தம் ஆரம்பித்து விளையாட்டுப்போல் இரண்டு மாதங்களாகிவிட்டன. சர்க்கார் வழக்கம்போல் அந்த வேலை நிறுத்தத்தைச் சட்டவிரோதமாக்கிவிட்டுப் பேசாமலிருந்தனர். தொழிலாளிகள் அந்த இரண்டு மாத காலமும் கூட்டம் கூட்டமென்று கூடினர்; பேச்சுப் பேச்சென்று பேசினர்; தீர்மானம் தீர்மானமென்று நிறைவேற்றினர்—ஒன்றும் பலனில்லை.

இருந்தாலும் அவர்கள் சளைக்கவில்லை; "வெற்றி நமதே!" என்று கோஷித்துக் கொண்டு தெருவெல்லாம் சுற்றிச் சுற்றி வந்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால், இவ்வாறு கோஷமிடுவதற்கும் அவர்கள் ஏதாவது சாப்பிட வேண்டியிருந்தது; அதற்காகச் சம்பாதிக்க வேண்டியும் இருந்தது. இதை நினைத்துத்தான் மன்னார்குடி மாணிக்கம் மௌனம் சாதித்து வந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை; அவர்களுடைய ‘சாணக்கி’யை எதிர்பார்த்துத் தமக்குள் சிரித்துக் கொண்டுமிருந்தார்!

இந்தச் சிரிப்பைச் சின்னப்பன் பொருட்படுத்தாமலிருப்பதற்குச் செல்லம் துணை புரிந்தாள். அதாவது, வேலை நிறுத்தம் ஆரம்பமானதும் அவள் அந்த ஊர்ப் பெரிய மனிதர் வீடு ஒன்றில் வேலைக்கு அமர்ந்தாள். காலையில் வீடு வாசலைப் பெருக்கிச் சாணம் தெளித்துக் கோலமிடுவது, பாத்திரம் தேய்ப்பது, துணி துவைப்பது, காலைச் சிற்றுண்டிக்கு மாவு அரைத்துக் கொடுப்பது முதலியவைதான் அவளுடைய வேலைகள். இந்தப் பிரமாத வேலைக்கு மாதம் பிறந்தால் கணை கணையாக ஐந்து ரூபாய் சம்பளம். அத்துடன் மத்தியான வேளையில் ஏதாவது சாதம், குழம்பு மீதமானால், அவை பிச்சைக்காரனுக்கு அல்ல; அவளுக்குத்தான்!

மத்தியானம் மட்டுமா இந்தச் சலுகை? இரவில் ஏதாவது கறி வகைகள் மிஞ்சி மறுநாள் காலை அவை கெட்டுப்போனால் செல்லத்துக்கு அடித்தது யோகம்!—அந்தக் கறி வகைகள் அத்தனையும் குப்பைத் தொட்டிக்கா என்கிறீர்கள்?—இல்லை, இல்லை; செல்லத்தின் வயிற்றுக்குத்தான்!

செல்லத்துக்கு அடித்து வந்த இந்த யோகம், கடந்த இரண்டு மாத காலமாகச் சின்னப்பனுக்கும் அடித்து வந்தது. அதன் பயனாக அவனுடைய உயிர் மட்டும் அல்ல; அவளுடைய உயிரும் உடம்பில் ஊசலாடிக் கொண்டிருந்தது. இருவரும் உயிருள்ள பிணங்களைப்போல ஊரில் நடமாடிக் கொண்டிருந்தனர்.

அன்று மத்தியானம் ‘அலைந்து மிச்சம்’ என்று அய்யர் வீட்டுச் சோற்றை எதிர்பார்த்தவனாய்ச் சின்னப்பன் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்துவிட்டான். வந்தவன் தட்டியை அவிழ்க்கவும் இல்லை; குடிசைக்குள் நுழையவுமில்லை. வாசலிலேயே நின்று அவள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றான்.

நின்றான், நின்றான், நின்றான்—நின்று கொண்டே யிருந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் சற்றுத் தூரத்தில் வருவது தெரிந்தது; அவளைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது.

அவள் அருகில் வந்தாள்; அவன் முகம் குவிந்தது!

ஏன் தெரியுமா?—இத்தனை நாளும் அவளுடைய முகத்தில் ஒருவிதமான களை இருக்குமே, அந்தக் களையை இன்று காணவில்லை; இத்தனை நாளும் அவளுடைய கையில் சாதம் இருக்குமே, அந்தச் சாதத்தையும் இன்று காணவில்லை!

"இன்னிக்குத் திடீரென்று அய்யர் வீட்டுக்கு ரெண்டு விருந்தாளிங்க வந்துட்டாங்க; அதாலே ஒண்ணும் கிடைக்கலே!"



கொள்ளையோ கொள்ளை!



மனைவி:—சம்பளத் தேதியும் அதுவுமாக வெறும் கையோடு வந்து நிற்கிறீர்களே!

கணவன்:—என்ன பண்றது! இந்த மாதச் சம்பளத்தில் கார்ப்பொரேஷன்காரன் 'ப்ரொபஷன் டாக்ஸ்' என்று கொஞ்சம் பிடுங்கிக் கொண்டு விட்டான்; இன்னும் கொஞ்சம் 'இன்கம் டாக்ஸ்'காரன் பிடுங்கிக் கொண்டு விட்டான்; பாக்கி இருந்ததை 'பிக் பாக்கெட்' காரன் அடித்துக்கொண்டு விட்டான்!

என்று சொல்லி, வருத்தத்துடன் கையை விரித்தான் செல்லம்.

"அதுக்குத்தான் என்ன பண்றது? தண்ணீர் இருக்கவே இருக்கு; அது எத்தனை விருந்தாளிங்க வந்தாலும் தாக்குமில்லே!" என்று சொல்லி, ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தான் சின்னப்பன்.

"அப்படின்னா நான் வாரேன்! ஏகப் பட்ட துணிங்க இருக்கு; தோய்ச்சுப் போடணும்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பினான் செல்லம்.

"சரி, போய் வா! நானும் 'மீட்டிங்'குக்குப் போறேன். இன்னிக்குப் பட்டணத்திலே யிருந்து யாரோ வந்து பேசப் போறாங்களாம்!" என்றான் சின்னப்பன்.

இருவரும் பிரிந்தனர்—தாற்காலிகமாகத்தான்!

★

அன்று மாலை செல்லம் வீட்டில் விளக்கேற்றி வைத்துவிட்டு வாசலுக்கு வந்து நின்றான். சின்னப்பன் வந்தான்.

"வாங்க, பட்டணத்திலே யிருந்து வந்தவரு என்ன சொன்னாரு?" என்று விசாரித்தான் செல்லம்.

சின்னப்பன் தலையைச் சொறிந்து கொண்டே, "அவர் நல்லதைத்தான் சொன்னாரு!" என்றான்.

"என்ன, நல்லதைச் சொன்னாரு?"

"இப்போ வெளியிலே தீப் பெட்டிக்குப் பஞ்சமா யிருக்குதில்லே? அரையணாவுக்குக் கிடைக்க வேண்டிய பெட்டி ஓரணாவுக்குக் கூடக் கிடைக்க மாட்டேங்கிறது இல்லே?—இந்தச் சமயத்திலே நீங்க 'ஸ்ட்ரைக்' செஞ்சி உற்பத்தியைக் குறைக்கலாமான்னு கேட்டாரு!"

"உற்பத்தியைக் குறைக்காம இருப்பதற்கு உடம்பிலே கொஞ்சம் தெம்பும் இருக்க வேணுமா?—அதுக்குக் கொஞ்சம் சம்பளத்தை ஒசத்திப் போட்டால் என்னவாம்?"

"எப்படி ஒசத்தறது? உற்பத்தியைப் பெருக்கினாத்தானே முதலாளிக்கு லாபம் அதிகமா வரும்? அவரும் சந்தோசமா சம்பளத்தை ஒசத்திப் போடுவாரு?—இது தெரியாம இத்தனை நாளா நாங்களும் இந்த 'ஸ்ட்ரைக்'க் கட்டிகிட்டு அழுதோமே?" என்று சொல்லித் தன் அடி வயிற்றில் லேசாக அடித்துக் கொண்டான் சின்னப்பன்.

"அப்படியா சங்கதி? அப்படின்னா நீங்க இப்போ என்ன தீர்மானம் பண்ணி யிருக்கீங்க?" என்று ஆவலுடன் கேட்டான் செல்லம்.

"தீர்மானம் என்ன? நாளையிலேருந்து எல்லோரும் பழையபடி வேலைக்குப் போகப் போறோம்!" என்று சின்னப்பன் சாவதானமாகச் சொன்னான்.

"இதுக்குத்தானா இம்புட்டு நாளா ஊரைச் சுற்றிச் சுற்றி வந்தீங்க?" என்று சொல்லிச் செல்லம் மூக்குவாய்க்கட்டையில் கையை வைத்துக்கொண்டான்.

"எல்லாம் பட்டாத்தானே தெரியும்?" என்று அலுத்துக்கொண்டு கீழே உட்கார்ந்தான் சின்னப்பன்.

"நல்ல கூத்து, போங்க!" என்று சொல்லிக்கொண்டே, செல்லம் தன் மடியிலிருந்து ஒரு பிடி வேர்க்கடலையை எடுத்து அவனுக்கு எதிரே போட்டான்.

"ராத்திரிக்காச்சும் கஞ்சி கிஞ்சி காய்ச்சலையா?" என்று சின்னப்பன் ஒப்பாரி வைத்தான்.

"இந்தாங்க, காய்ச்சாத கஞ்சி!" என்று சொல்லி, ஒரு குவளை நிறையக் குளிர்ந்த நீரை எடுத்து வந்து அவனுக்கு எதிரே வைத்துவிட்டுச் சிரித்தாள் செல்லம்.

★

எழுபது நாட்களுக்குப் பிறகு 'எம்.எம். மாட்ச் பாக்டரி'யில் மீண்டும் வேலை தொடங்கிற்று. முன்னெல்லாம் மாலை ஐந்தரை மணி மட்டும் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளிகள், இப்பொழுது இரவு ஒன்பதரை மணி வரை வேலை செய்ய ஆரம்பித்தனர். இதனால் அவர்களுடைய கூலியும் கொஞ்சம் உயர்ந்தது; உற்பத்தியும் பெருகிற்று.

மொத்த வியாபாரிகள் திணறிப் போகும் படியாகத் தீப்பெட்டிகளைக் கட்டுக் கட்டாக அனுப்பி வைத்தார் மன்னார்குடி மாணிக்கம். அவர்கள், "போதும், போதும்!" என்று அலறும் வரை அவர் நிறுத்தவே யில்லை.

அந்த மாதம் சம்பளம் வாங்கியதும், "செல்லம், நீ நாளையிலேருந்து அய்யர் வீட்டு வேலைக்குப் போகவேண்டாம்; என்னுடைய சம்பாத்தியமே போதும்!" என்று சின்னப்பன் தன் மனைவியிடம் சொல்லி விட்டான். அதைக் கேட்டு அவளும் பூரித்துப் போனாள்.

இருந்தாலும் சின்னப்பனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு குறை இருக்கத்தான் இருந்தது. அதாவது, "இப்பொழுது நாம் இரவு ஒன்பதரை மணி வரை வேலை செய்வதால்தானே சம்பளம் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கிறது? அப்படிச் செய்யாவிட்டால் பழைய சம்பளம்தானே கிடைக்கும்?" என்று எண்ணி அவர்கள் அதிருப்தி யடைந்தார்கள் ஆனால் அந்த அதிருப்தியிலும் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை, "நாம் உற்பத்தியைப் பெருக்கினால் கூலியம் தானாகவே உயரும்" என்பதுதான்.

இந்த நம்பிக்கையில் ஒரு வருஷம் எப்படியோ ஓடிவிட்டது. அரையணாவுக்கு விற்ற தீப்பெட்டி முக்காலணாவாக உயர்ந்தது. இதனால்தானோ, அல்லது உற்பத்தியைப் பெருக்கியதினால்தானோ சுற்றுப்புறத்திலிருந்த தீப்பெட்டிப் பஞ்சமும் தீர்ந்தது. மன்னார்குடி மாணிக்கம் இன்னும் கொஞ்சம் முன்னால் வந்த தம் தொந்தியை லேசாகத் தடவி விட்டுக் கொண்டார். ஆனால், சின்னப்பனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் இருந்த கவலை மட்டும் இன்னும் தீரவில்லை. அதாவது, அவர்கள் நினைத்தபடி சம்பளம் உயரவில்லை.

அதற்குப் பதிலாக, "நம்மிடம் தீப்பெட்டி 'ஸ்டாக்' அதிகரித்து விட்டது. மொத்த வியாபாரிகளிடமிருந்து 'ஆர்டர்'ரும் வரவில்லை. அவர்களெல்லாம் விலையைக் குறைப்பதற்கு ஏதாவது முயற்சி செய்தால் தேவலை என்று வேறு எழுதி வருகிறார்கள். எனவே, இனி உங்களுக்கு இரவில் வேலை கிடையாது; பகலில் மட்டுந்தான் வேலை!" என்று மன்னார்குடி மாணிக்கம் அறிவித்து விட்டார்.

அவர்தான் என்ன செய்வார், பாவம்! நிலைமை லாபத்தில் நஷ்டம் வரும் அளவுக்கு வந்து விட்டபோது, அவர் பேசாமல் இருக்க முடியுமா?

இருந்தாலும், இதைப் பற்றிப் 'பட்டணத்துத் தலைவர்' வந்து ஏதாவது சொல்வார் என்று 'எம். எம். மாட்ச் பாக்டரி' தொழிலாளிகள் எதிர்பார்த்தனர். ஆனால், அவர் அந்தப் பக்கம் வரவும் இல்லை; ஒன்றும் சொல்லவும் இல்லை!

★

அன்று காலை வேலைக்குப் புறப்படும் போது, "செல்லம், நாலு பேரைப்போல நாமும் நல்லா யிருக்கிறதுக்கு, இருபத்து நாலு மணி நேரமும் வேணுமானாலும் நான் வேலை செய்யலாம்னு எண்ணி யிருந்தேன்; அதுக்கும் இனிமேல் வழி யில்லாமல் போச்சு!" என்றான் சின்னப்பன்.

"என்?" என்று கேட்டாள் செல்லம்,



"இப்பெட்டி 'ஸ்டாக்' ஏராளமா இருக்குதாம். அதுக்காக இனிமேல் ராத் திரியிலே வேலே இல்லேன்னு எசமான் சொல்லிவிட்டாரு!"

"அப்படின்னு இனிமேல் பழைய சம் பளம்தான் கிடைக்கும்னு சொல்லுங்க!"

"ஆமாம்."

"தொலேயறது! ஏதோ கிடைச்சதைக் திருப்தி யடைய வேண்டியதுதானே!" என்ருன் செல்லம்.

"வேறே என்ன செய்யறது? நாம் அம் புட்டுத்தான் கொடுத்து வைச்சிருக்கோம்—நான் போய் வாரேன்!" என்று சொல்லி விட்டுப் போனுன் சின்னப்பன்.

அவனே வாசல் வரை சென்று வழி யனுப்பிவிட்டு, செல்லம் வீட்டுக் காரியங் களில் ஈடுபட்டான்.

அடுப்பை மூட்டி உலே வைத்துவிட்டு அவன் அரிசியைக் கழுவிக் கொண்டிருந்த சமயத்தில், சின்னப்பன் எதிர்பாராத வித மாகத் தளர்நடை நடந்து வந்து அவனுக்கு எதிரே நின்ருன்.

"என்னங்க, என்ன உடம்புக்கு? லீவு கீவு போட்டுட்டு வந்துட்டீங்களா?" என்று கேட்டுக்கொண்டே, அவனேத் தலேநிமிர்ந்து பார்த்தான் செல்லம்.

அவன் ஒன்றும் சொல்லாமல் விசித்து விசித்து அழுதான்.

செல்லம் திடுக்கிட்டு எழுந்து நின்று, "என்னங்க, என்ன? விசயத்தைச் சொல் லுங்களேன்!" என்று பரபரப்புடன் கேட்டான்.

அதற்கும் அவன் ஒன்றும் பதில் சொல் லாமல் விம்மி விம்மி அழுதான்.

"ஐயோ! இதென்ன, பொம்மனாட்டி மாதிரி இப்படித் தேம்பித் தேம்பி அழு றீங்களே! — ஏதாச்சும் தப்புத் தண்டா செய்துப்பிட்டுப் போலீஸிலே கீலீஸிலே மாட் டிக்கிட்டீங்களா, என்ன?" என்று கவலே யுடன் கேட்டான் செல்லம்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, செல்லம்! இனிமேல் நாம் எப்படிப் பிழைக்கப் போரேும்னுதான் எனக்குத் தெரியலே!" என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே ஆரம்பித்தான் சின்னப்பன்.

"பிழைச்சாப் பிழைக்கிறேரும், செத்தாச் சாகிறேரும்—நீங்க முதல்லே விசயம் என் னன்னு சொல்லித் தொலேயுங்க!" என்று செல்லம் கத்தினுன்.

"ஆமாம், செல்லம்! நீ சொல்றது சரிதான்! நாம் செத்தால் சாகிறேரும், பிழைச்சாப் பிழைக்கிறேரும்னுதான் எங்க முதலாளியும் நினைச்சுப்பிட்டாரு! அவரு உற்பத்தியைக் குறைக்கணும்னு இன்னிக்கு ஐம்பது பேரை வீட்டுக்கு அனுப்பி வைச் சுட்டாரு! — அவர்களிலே நானும் ஒருத் தன்!" என்று சின்னப்பன் விஷயத்தை ஒருவாறு சொல்லி முடித்தான்.

அவ்வளவுதான்; செல்லம் 'குபீர்' என்று சிரித்தான்!

சின்னப்பன் அழுகையை நிறுத்திவிட்டு அவனே ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"கவலே வேணும், போங்க! பட்டணத் துத் தலேவர் சொன்னபடி உற்பத்தியைப் பெருக்கினீங்க; கைமேல் பலன் கிடைச் சுது! அம்புட்டுத்தானே!" என்று சொல்லி விட்டு, அவன் மீண்டும் மீண்டும் மீண்டும் சிரித்துக் கொண்டேயிருந்தான்!

★ ★ ★ ★ ★ ★ ★ ★ எது அக்கிரமம்? ★ ★ ★ ★ ★ ★ ★ ★

ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒருவர் மிகவும் கோபத் துடன் தம்முடைய மகனைப் 'பளீர், பளீர்' என்று அறைந்துவிட்டார்.

"என்ன அக்கிரமம் ஐயா, இது? பையனைப் போட்டு இப்படி அடிக்கி றீர்களே!" என்ருர் அவருக்கு அருகில் இருந்தவர்.

"எது அக்கிரமம் என்று கேளும், ஐயா! பிளாட்பாரத்தோடு போன ஒருவனிடம் நான் ஒரு சோடா வாங்கிச் சாப்பிட்டேன். ஒரு ரூபாயை வாங்கிக் கொண்டு போன அவன், பாக்கிச் சில்லறையைத் தரவில்லை. என்னுடைய இன் னொரு பிள்ளையோ இந்த ஸ்டேஷனுக்கு முன் ஸ்டேஷனிலேயே இடம் தெரியா மல் இறங்கிவிட்டான். பெங்களூர் போகவேண்டிய நானே தவறுதலாக இந்த வால்டேர் வண்டியில் ஏறிவிட்டேன். போதாக்குறைக்கு இந்தப் பையன் என்னடா என்ருல், டிக்கெட்டுகளைக் கிழித்து எறிந்து விட்டதாகச் சொல்லு கிருன்! இதற்கு மேல் என்ன அக்கிரமம் இருக்க முடியும், சொல்லுங்கள்!" என்று ரௌத்திராகாரத்துடன் கேட்டார் அவர்.

அருகில் இருந்தவர் வாயைத் திறக்கவில்லை!


IT'S HERE

The new Super-Cushion Tyre

சூபர் குஷன் டயர்

கண்டு பிடித்ததும், தயார் செய்வதும் குட் இயர் தான் .... தேவையான சைஸுகளில் தற்போது பெருவாரியாகக் கிடைக்கும்

- FLOWS ALONG ON ONLY 24 POUNDS OF AIR PRESSURE
- IT'S BIGGER, SOFTER . . . GLIDES OVER BUMPS
- FIRST TYRE TO ABSORB LATERAL SHOCK . . .
- MORE MILEAGE AND . . . EASIER HANDLING



வெண்மையாகவோ கருப்பாகவோ பக்க மதில்கள் கொண்ட டயரை—உங்கள் காருக்கேற்ற சைஸுக்குப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள்.

ஸ்டாண்டர்டு சைஸ் சூபர் குஷன்

5.50-15க்கு பதிலாக	6.40-15
6.00-16க்கு பதிலாக	6.70-15
6.50-16க்கு பதிலாக	7.10-15
6.50-16 / 7.00-16 பதிலாக	7.60-15
6.00-16க்கு பதிலாக	6.70-16★
6.50-16க்கு பதிலாக	7.60-16★

★ கூடிய சீக்கிரத்தில் இந்தியாவில் செய்ய உற்பத்தியாகும்.

உங்களுக்கு அருகிலுள்ள குட் இயர் டீலரிடத்தில் இப்போதே ஒரு செட் சூபர் குஷன் டயர்களுக்கு ஆர்டர் கொடுங்கள்.

GOODYEAR

GC-6A



அசட்டு ராதா

கி. வேதாந்தம்

"ஆமாம், என்றைக்குத்தான் வாழ்ந்தது? நீங்கள் எப்பொழுது சமூகமாய் 'போய்விட்டு வா, இதைச் செய், அதைச் செய்' என்று சொல்லியிருக்கிறீர்கள்?" என்றாள் ராதா.

"அசட்டைக் கட்டிக்கொண்டு ஆயிரம் காலம் வாழ்வதைவிடச் சமர்த்தைக் கட்டிக்கொண்டு சட்டென்று உயிரை விடலாம் என்றானும் ஓர் அநுபவசாலி. உன்னைப் போன்ற அசடுகளுக்குத்தான் ஒன்றுமே தெரிகிறதில்லையே? அப்படி இருக்கும் போது உன் இஷ்டப்படி விட்டுவிட்டால், அவ்வளவுதான்! எல்லாம் குட்டிச் சுவர் தான்! நான் ஒருவன்கூட இருந்துகொண்டு 'இப்படிச் செய், அப்படிச் செய்' என்று சொல்லிக்கொண்டு வரும்போதே ஏதாவது அசட்டுப் பிசட்டுன்னு செய்து தொலைத்து விடுகிறாய்.........!" என்று ஆரம்பித்தான் ராதையின் கணவன் ரகு.

"போதும், சமர்த்தாய்ப் பார்த்துக் கலியாணம் பண்ணிக் கொள்கிறதை யாராவது வேண்டாமென்று சொன்னார்களா, என்ன? எதுக்கு இப்படி 'அசடு, அசடு'ன்னு கரிக்கக் கொட்டுகிறீர்கள்? இப்பவும் ஒன்றும் முழுகிப் போய் விடவில்லை, சமர்த்தாய்ச் சமையல் பண்ணிச் சாப்பிட்டுக் கொண்டு இருங்கோ; நான் அப்பாவோடே ஊருக்குப் போறேன்!" என்று ஒரு பாணத்தைத் தூக்கி எறிந்தாள் ராதா.

★

ரகுராமனுக்குக் கலியாணமாகி இரண்டு வருடங்களே ஆகியிருந்தன. சர்க்கார் உத்தியோகம்: மாதம் ரூபாய் நூறு சம்பளம்; குடித்தனம் மயிலாப்பூரில்.

ரகுவின் தாயார் பால்யத்திலேயே இறந்து விட்டாள். தகப்பனார் மட்டும் கிராமத்தில் இருந்து வந்தார். கலியாணமாகி ஆறாவது மாதத்தில் அவன் மயிலாப்பூரில் ஜாகை வைத்தான். ரகுவுக்கு மனதில் ஒரு குறை இருக்குமானால், அது தன் சகதர்மிணியைப் பற்றித்தான். அவன், சதா தன்னுடன் கொஞ்சிக் குலாவவும், கேளிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளவும், பத்திரிகை படிக்கவும், சினிமா நாடகத்துக்குப் போகவும் தெரிந்த ஓர் அழகிய நவயுவ நாரீமணியைத்தான் விரும்பினான். அவள் சங்கீதத்தில் மேதையாய் இருக்க வேண்டுமென்பதும் ரகுவின் ஆசை.

ஆனால் ராதாவோ, அதற்கு நேர்மாறாக இருந்தாள். பட்டிக் காட்டுப் பெண். கும்பகோணத்துக்குப் பக்கத்தில் ஒரு கிராமம். ஐந்தாம் வகுப்பு வரை படிப்பு. 'ஓஹோ ஹோ' என்று சொல்லும்படி அழகில்லையாயினும், குடித்தனப் பாங்கான அழகு. ஆங்கிலப் பத்திரிகைகள் படிக்கத் தெரியாவிடினும் தமிழ்ப் பத்திரிகைகள் படிக்கத் தெரியும். டென்னிஸ், பாட்மிண்டன் ஆடத் தெரியாவிட்டாலும் சொக்கட்டான், சோழி, பல்லாங்குழி முதலியவை ஆடத் தெரியும். சங்கீதத்தில் விசேஷ பாண்டித்தியம் இல்லாவிட்டாலும் கேள்வி ஞானத்தில் நாலு கீர்த்தனைகள், நாலு சினிமாப் பாட்டுக்கள், இரண்டு நலங்கு, இரண்டு ஊஞ்சல் முதலியவைகளை ஸ்வர சுத்தமாகப் பாடத் தெரியும். வீட்டுக் காரியங்களைக் கச்சிதமாகச் செய்யவும் குடித்தனத்தை நிர்வகிக்கவும் நன்றாகத் தெரியும். எல்லாவற்றுக்கும் மேலாகச் சமைப்பதில் ராதாவுக்கு ஈடு ராதாவேதான். ராதாவின் கணவன் மட்டும் ஒரு 'சாப்பாட்டு ராம'னாக இருந்திருந்தால் அவளைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டிருப்பான்.

ரகுவின் தகப்பனார் வரதக்ஷிணைக்கு ஆசைப்பட்டுக் கொண்டு ராதாவை அவனுக்குக் கலியாணம் செய்து வைத்து விட்டார். முதன் முதலில் ராதாவுடன் குடித்தனம் நடத்த ரகு மறுத்தபோதிலும், தகப்பனாரின் வற்புறுத்தலின் பேரில்-

வேண்டா வெறுப்பாகக் குடித்தனம் நடத்த ஆரம்பித்தான். எடுத்ததற்கெல்லாம் ராதா வின்பேரில் எரிந்து விழுந்தான். ராதா வுக்கு அசட்டுப் பட்டம் கட்டி, 'அசடு, அசடு!' என்றே அழைத்து வந்தான்.

"என்னு! இன்னிக்கு என்ன சமையல் பண்ணட்டும்?" என்பாள் ராதா.

"எந்த இழவையாவது பண்ணித் தொலை! அதுதான் தெரியுமே உனக்கு, வாழைப்பூ கறி, மாங்கொட்டை குழம்பு, வடாம், மண்ணாங்கட்டி எல்லாம்!" என்றெல்லாம் சொல்லிக் கிராமாந்தரச் சமையலைப் பழிப்பான் ரகு.

இது அவனுடைய ஒரு காலைய நாடகம். ரகு என்றைக்காவது, "என்ன அசடு! இன்னிக்குச் சினிமாவுக்குப் போவோமா?" என்றால், அந்த அசட்டுப் பெண் அன்றைக் குத்தான் தோசைக்கு நனைத்திருப்பாள். "என்ன சினிமா வேண்டிக் கிடக்கு! நான் தோசைக்கு அரைக்கணும், நீங்க வேணும்னு போங்கோ!" என்று சொல்லி விடுவாள்!

"அட அசடே! உனக்கு வெண்கலப் பானையைக் கரி போகத் தேய்க்கத் தெரியுமே தவிர, வேறொன்றும் தெரியவும் தெரியாது; பிடிக்கவும் பிடிக்காது!" என்று ரகு அலுத்துக் கொள்வான்.

★

இந்தச் சூழ் நிலையில் ராதா மூன்று மாதமாகக் குளிக்கவில்லை. இதை யறிந்த ரகு மனதுக்குள் பூரித்துப் போனா லும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

ராதா குளிக்காமல் இருக்கிறாள் என்று அறிந்து அவளை அழைத்துப் போக அன்று ராதாவின் தகப்பனார் வந்திருந்தார். ரகுவுக்கு ஹோட்டல் சாப்பாடு, வேலைத் தொந்தரவு இவைகளை நினைக்கும் போது பயமாயிருந்தது. ஆகையால் ராதாவை அனுப்புவதில் அவனுக்கு இஷ்டமில்லை. ஆயினும் மாமனார் கேட்டபோது, "சூசா வாய் அழைத்துக் கொண்டு போங்கள்! ஆனால் திருப்பி இங்கே கொண்டு வந்துவிட வேண்டாம்!" என்றான்.

"ஏன், நீங்களே வந்து அழைத்துப் போகிறீர்களா? ரொம்ப நல்லது!" என்றார் மாமனார்.

"இல்லை, இல்லை; உம்ம பெண் உம் மிடமே இருக்கட்டும். அசடைக் கட்டிக் கொண்டு மாரடிக்க நம்மால் முடியாது!" என்றான் ரகு.

"ஏன், என்ன நடந்தது? ஏதாவது அசட்டுப் பிசட்டுன்னு......?"

"என்ன ஏதாவது! பண்றது பூரா அசட் டுக் காரியம்தான்!"

"சிறிசுதானே? நாளடைவில் எல்லாம் சரியாய்ப் போய்விடும்."

"என்ன இருந்தாலும் ராதாவை இப் பொழுது அனுப்புவதாய் எனக்கு உத்தேசம் இல்லை. எனக்கு ஆபீஸ் தொந்தரவு அதிக மாக இருக்கிறது. ஹோட்டல் சாப்பாடும் ஒத்துக் கொள்ளாது. சமர்த்தாய் இல்லா மற் போனாலும், கட்டின கடனுக்காகப் பொங்கியாவது போட்டுக்கொண்டு இருக் கட்டுமே!" என்று கடைசியாகச் சொல்லி முடித்தான் ரகு.

இந்தச் சமயத்தில்தான் ராதாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து அப்பா வுடன் ஊருக்குப் போவதாகச் சொன்னாள்.

மாமனாரும் பிடிவாதமாகப் பெண்ணை அழைத்துக் கொண்டுதான் போக வேண்டு மென்றார். ரகுவுக்கு அதற்குமேல் அவர்க ளுடன் வாதாடப் பிடிக்கவுமில்லை, நேரமு மில்லை. 'அசட்டு ராதாவின் அப்பன்தானே! அவருடன் பேசுவதில் பிரயோஜனம் இல்லை!' என்ற முடிவுக்கு வந்தான். இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்



அவர் கவலை!



வீட்டுக்காரி (திருடனைப் பார்த்து):—உஷ்...ஷ்...ஷ்...! சத்தம் போடாதே! குழந்தை இப்போதுதான் தூங்குகிறது!

டான். கோட்டை மாட்டிக் கொண்டு ஆபீஸுக்கும் கிளம்பிவிட்டான்.

சாப்பிடும்போது ராதாவால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் இல்லை. மாமனாரும் போகும்பொழுது ஒன்றும் கேட்கக் கூடாதென்று பேசாமல் இருந்துவிட்டு, மாப்பிள்ளை மாடிப் படி இறங்கியதும், "உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொங்கோ, கடிதம் போடுங்கோ!" என்றார்.

★

தூடக்கை போகும் வண்டி எட்டே முக்கால் மணிக்குக் கிளம்புகிறதாகையால், ஏழரை மணி வரையில் ரகுவை எதிர்பார்த்தார்கள். ரகு வரும் வழியாயில்லை. ராதாவுக்குக் கொஞ்சம் வருத்தமாய்த்தானிருந்தது. இருந்தாலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு கதவைப் பூட்டிச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டு, அப்பாவும் பெண்ணும் ஸ்டேஷனுக்குப் போய் விட்டார்கள். கடைசி ஆசையாக ரகு ஸ்டேஷனுக்காவது வருகிறானா என்று பார்த்தாள் ராதா. அவளுடைய மனது நிலை கொள்ளாமல் தவித்தது. என்ன இருந்தாலும் அவர் தம் வாயால், "'போய் விட்டு வா' என்று சொல்லவில்லையே! நாம் இப்படி, 'அவர் சொல்வதுபோல் அசடுமாதிரி, திடீரென்று கிளம்பலாமா? —ஏன், நம்மைத்தான் அசடுன்னு தீர்த்துக் கட்டியாகி விட்டதே! ஏதோ அசட்டுத்தன மாய்ப் போய்விட்டாளென்று நினைத்துக் கொள்ளட்டுமே!" என்று தனக்குத்தானே என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டாள்.

முதல் மணி அடித்தது. பரிதாபகரமாக ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். ரகுவைக் காணாத ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு வேதனையாயிருந்தது. "வண்டியை விட்டுக் கீழே இறங்கி விடலாமா?" என்றுகூட நினைத்தாள். அப்பா ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். ஒன்றுமே ராதாவின் காதில் விழவில்லை. வண்டி ஊதிவிட்டு நகர ஆரம்பித்தது. ராதாவின் மார்பு வெடித்து விடும் போலிருந்தது. அவள் வேண்டியதெல்லாம், "அசடு, போய் வா!" என்ற ஒரே ஒரு வார்த்தைதான்!

ஆஹா! அந்த ஒரு வார்த்தையில்தான் எவ்வளவு இன்பம்! தேடி அலைந்த குரல் ஒன்று, "கையை வெளியே நீட்டாதே, அசடு! என்னை மறந்து......" என்று மேலே சொல்லுவதற்குள் வண்டி நகர ஆரம்பித்து விட்டது. அவ்வளவுதான்; ஒரே அந்தகாரம் குடிகொண்ட அந்த நேரத்தில் ஒரு பொட்டணமும் ஒரு கவரும் ராதாவின் கையில் திணிக்கப்பட்டது. வண்டி பிளாட்பாரத்தைத் தாண்டி ஒரு பர்லாங் தூரம் போயிருக்கும்; ராதாவின் தகப்பனார் ஜன்னல் வழியே தலையை நீட்டி, "மாப்பிள்ளை! மாப்பிள்ளை!" என்று இரைந்தார். ஆனால் அது மாப்பிள்ளையின் காதில் விழுந்தால்தானே!

'என்னை மறந்து.........' என்ற வார்த்தைகள் ராதாவை ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவது போலிருந்தது. அதற்கப்புறம் அந்த வார்த்தையை முடிக்க அவளுக்குத் தெரியவில்லை. மெதுவாக வியர்வையைத் துடைத்துக் கொண்டு, கொடுத்த பொட்டணத்தைப் பிரித்துப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அதற்குள்ளிருந்த மல்லிகையும், ரோஜாவும் ராதாவின் கண்களை மலர வைத்தன. 'அவர் தான் என் முகத்தில் விழிக்கப் போகிற தில்லையே! ஒருவேளை இந்த மலரின் மூலம் சுமுகமான முறையில் கடைசிப் பிரிவைக் கோரி இப்படிச் செய்திருக்கலாம். எதற்கும் கவரை உடைத்துப் பார்க்கலாம்' என்று நினைத்தாள். ஆனால் மனம் இடம் கொடுக்கவில்லை. கவரை உடைப்பதற்கு அவளுடைய கை நடுங்கிற்று. 'என்ன எழுதி இருக்கப் போகிறார்? அசடே, இனி நீ இங்கு வரவேண்டாம். எப்பொழுது அப்பாவின் பேச்சைக் கேட்டுக்கொண்டு

போகிறாயோ, அப்படியே உன்னுடைய அப்பாவுக்குப் பக்கத்திலிருந்து பணிவிடை செய், என்னை மறந்துவிடு! உன் பேச்சு, உன் காரியம் ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை!" என்றுதான் எழுதியிருப்பார்.

இதற்குமேல் அவளால் சிந்திக்க முடியவில்லை. தலை சுற்றியது. அப்படியே சாய்ந்துவிட்டாள். வண்டி விழுப்புரம் தாண்டியதும் சற்று மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். அப்பா பாதி பெஞ்சை ஆக்ரமித்துக்கொண்டு நன்றாகக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தார். எதிரே இருந்த பெஞ்சியில் ஒரு கிழவனும், கிழவியும் தூங்கி விழுந்து கொண்டிருந்தனர். கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கவரை உடைத்துப் படிக்கத் தொடங்கினாள் :—

என் அன்புமிக்க அசட்டு ராதா,

ஆபீஸிலிருந்து வருவதற்குச் சற்றுத் தாமதமாகிவிட்டது. நேரே வீட்டுக்கு வந்தேன். வீடு வெறிச்சென்றிருந்தது. என்னத்தை எழுத?—வீடு சோபையில்லாத பர்ணசாலையாகக் காட்சி அளித்தது. நானும் ராமனின் நிலையை அடைந்தேன். என் மனது என்ன பாடு பட்டது தெரியுமா? ஆசையுடன் 'அசடே!' என்று யாரைக் கூப்பிடுவேன். நீ வரும்வரை வீண்? நீ நினைக்கலாம், உன்பேரில் எனக்குப் பிரியமில்லை என்று! வாஸ்தவம், பிரியமில்லாமலிருந்த காலம் உண்டு. ஆனால் உன்னுடைய வெகுளித்தனம், குடித்தனப் பொறுப்பு, பதிபக்தி எல்லாம் என்னை அடியோடு மாற்றிவிட்டன. முதலில் நாகரிகத்தையும், வெளிவேஷத்தையும் கண்டு மதிமயங்கினேன். ஆனால் உன்னுடன் வாழ்க்கை நடத்திய ஒரு வருஷப் பழக்கம் என்னையும் அறியாமல் உன் பேரில் ஒருவித வாத்ஸல்யம், அன்பு, காதல்—எது வேண்டுமானாலும் வைத்துக்கொள்—உண்டாகிவிட்டது. நிரந்தரமாக என் இருதயத்தின் ஒரு மூலையில் நீ இடம் பிடித்துக் கொண்டுவிட்டாய்! அசடே, கூடிய சீக்கிரம் தாயாகப் போகும் நீ மனதில் எந்தக் குறையும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று இன்று என் இருதயத்தைத் திறந்து காண்பிக்கிறேன். உனக்குப் பதினைந்து நாட்கள் லீவு கொடுத்திருக்கிறேன். இந்தப் பதினைந்து நாட்களும் எனக்குப் பதினைந்து வருஷங்களாகத்தான் தோன்றும். இன்றைக்குப் பதினைந்தாம் நாள் சென்னைக்கு ரயில் ஏறிவிடு. இல்லையேல் நான் நேரில் வரும்படி இருக்கும். நீ ஊருக்கெல்லாம் சமர்த்தாய் இருந்தாலும், எனக்கு நீ அசட்டு ராதாதானே!

உன்னைக் கனவிலும் மறவாத,

ரகு.

ராதா கடிதத்தைப் படித்து முடித்ததும் வெளியே எட்டிப் பார்த்தாள். உணர்ச்சி மிகுதியால் கண்கள் கலங்கவே, மீண்டும் தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டாள்.

தோற்றுப் போனார்!

கோபு என்னுடைய மூன்றாவது புத்திரன்; படிப்பில் சிரத்தை கொண்டவன். பத்து மணிப் பள்ளிக்கூடத்துக்கு ஒன்பதே முக்கால் மணி வரை படித்துக் கொண்டோ, எழுதிக்கொண்டோ இருப்பான்.

"கோபு! கோபு! இலை போட்டாச்சு, வாடா! இன்னும் எவ்வளவு நேரம் எழுதிக் கொண்டிருப்பாய்?" என்று அடுக்களையிலிருந்து என் மனைவி இரைவாள்.

இதைக் கேட்டதும் கடைக்குட்டி சங்கரனுக்குக் கோபம் வந்துவிடும். "அவனுக்காக மற்றவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டுமாக்கும்! நான் ஒரு மணி நேரமா இலை முன்னால் உட்கார்ந்திருக்கிறேனே, அது கண்ணில் படவில்லையாக்கும்!" என்று முணுமுணுப்பான்; முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வான்.

அவனைச் சமாதானப்படுத்திப் பரிமாற ஆரம்பித்தால் பட்டுவைக் காண மாட்டாள். அந்தச் சமயம் பார்த்து அவளுடைய சிநேகிதி அவளைப் பின்னல் புஸ்தகம் கேட்க வந்திருப்பாள். அதை எடுத்துக் கொடுக்க அவள் எழுந்து போயிருப்பாள். அந்த விஷயம் தெரியாமல், "பட்டு எங்கே போய்த் தொலைந்தாள், சமயம் பார்த்து?" என்று கத்துவாள் என் மனைவி.

"அவள் எங்கே போய்த் தொலைந்தால் என்ன. நட்டு முன்னால் உட்கார்ந்திருப்பவர்களுக்குப் பரிமாறித் தொலையேன்!" என்று எரிந்து விழுவாள் மூத்த புத்திரி கருணா.

இவ்விதம் ஒவ்வொரு வேளையும் சாப்பாட்டுக் கடை என்றால் எங்கள் வீட்டில் ஒரே அமளி துமளிதான்! ஒன்றாவது சாப்பாட்டு வேளைக்குச் சரியாக வராது; நாலு குழந்தைகளும் நாலு நேரத்தில் வந்து சாப்பிடும். 'எல்லோரும் ஒன்றாய் வந்தோம், சாப்பிட்டோம்' என்பதே கிடையாது!

* * *

என் நண்பர் குப்பண்ணா இவ்வாறு அன்று என்னிடம் வந்து அலுத்துக் கொண்டார்.

நான் அவரை உட்காரச் சொல்லிவிட்டு, "சென்ற மகாயுத்தத்தில் தளபதியாகவும், இந்தியாவின் வைஸராயாகவுமிருந்த வேவல் துரை தம் குழந்தைகளைப் பற்றி என்ன சொன்னார், தெரியுமா?" என்று கேட்டேன்.

"தெரியவில்லை; சொல்லுங்கள்!" என்றார் அவர்.


"என்னுடைய ஒரே ஒரு வார்த்தையினால் பத்து லட்சம் போர் வீரர்களை என்னால் பணிந்து நடக்கும்படி செய்ய முடிந்தது. ஆனால் என் மூன்று பெண்களை ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு என்னுடன் சேர்ந்தாற்போல் உட்காரச் செய்ய என்னால் முடியவில்லை!' என்றார். அந்த வீர தளபதியே தம் குழந்தைகளிடம் தோற்றுப்போனார் என்றால், நம் போன்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?" என்றேன்.

"நீங்கள் சொல்வது வாஸ்தவம்" என்று கூறி, ஆறுதலடைந்தார் அவர். — வேங்கு.

ரூ. 22/8 பெறுமானமுள்ள கைக்கெடிகாரம் இனும்

இன்னும் ஒரு மாதத்திற்கு மட்டும் இந்த குறைந்த சலுகையான விலைகள்.

முதன் முதலாக இப்போதுதான் மேற்கண்ட கெடிகாரங்களை பத்து வருடத்திற்கு முன்பிருந்த விலைக்கே விற்பனை செய்கிறோம். எல்லா கெடிகாரங்களும் உன்னதமான ஸ்விஸ் வேலைப்பாட்டுடனும், பிளாஸ்டிக் பாண்டுடன் வெல்வெட் கேஸில் அனுப்பப்படுகின்றது. மூன்று வருஷ உத்தரவாதம்.




நெ. 122 நீண்ட சதுர வடிவம்

6 ஜுவெல்ஸ்	குரோமியம்	32/-	ரோல்டுகோல்டு	38/-
7	,,	,, உயர்ந்தது	44/-	,,	55/-
15	,,	,,	55/-	,,	65/-



நெ. 121 (டோனு)

5 ஜுவெல்ஸ்	குரோமியம்	37/-	ரோல்டுகோல்டு	44/-
7	,,	,, உயர்ந்தது	46/-	,,	58/-
15	,,	,,	56/-	,,	68/-



நெ. 123 தட்டை வடிவம் 4 ஜுவெல்ஸ் 24/-

4 ஜுவெல்ஸ்	குரோமியம்	32/-	ரோல்டுகோல்டு	42/-
15 ,,	,,	37/-	,,	60/-




நெ. 124 (சைஸ் 13)

குரோமியம் கேஸ்	18/8/	ரேடியம்	20/-
சென்டர் செகண்ட்	22/8/	,,	24/-

அலாரம் டயம் பீஸ் 16/- சற்று உயர்ந்தது 20/- மிகவும் உயர்ந்தது 25/-

பாக்கிங், தபால் செலவு அணா 12 பிரத்தியேகம். சேர்ந்தாற்போல் மூன்று கெடிகாரங்களுக்கு ஆர்டர் செய்தால் 22/8/- பெறுமானமுள்ள கடிகாரம் ஒன்று இலவசமாக அளிக்கப்படும்.

H. DAVID CO., POST BOX NO. 11424 CALCUTTA



இச்சுலபமான முறையில் பார்லிக்கஞ்சி தயாரியுங்கள்

வெகு சீக்கிரமாக பார்லிக்கஞ்சி தயாரிக்க இரண்டு கரண்டி நிறைய பியூரிடி பார்லி எடுத்து சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்துக்கொண்டு இரண்டு டம்ளர் ஜலம் விட்டு நன்கு நீரும் கொதிக்கவையுங்கள். பின்னர் ருசிக்குத் தகுந்தபடி எலுமிச்சை ரசம், உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப்பருகவும். சௌகரியமாகப் பொடிசெய்யப்பட்ட பார்லியை உபயோகித்து, நேரமும், சிரமமும் குறையச்செய்யுங்கள். அரிசி பார்லியைப்போல எட்டு மடங்கு அதிக புஷ்டியுள்ளது.

பியூரிடி

இந்தியன் பார்லி

APOS 3 TM

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்., 21-, செட்லா ரோடு, கல்கத்தா

தென்னிந்தியாவுக்கு ஏஜண்டுகள் :

மெஸர்ஸ். பாரி அண் கோ., லிமிடெட், த. பெ. நெ. 12, மதராஸ்

பொல்லாத ராஜா

பி.ஸி.பலராமன்

அழகு என்றால் அந்த ராஜாவைத் தான் அழகு என்று சொல்லவேண்டும்; புத்திசாலி என்றால் அந்த ராஜாவைத் தான் புத்திசாலி என்று சொல்ல வேண்டும்; பலசாலி என்றால் அதே சுந்தர ராஜாவைத்தான் பலசாலி என்று சொல்ல வேண்டும்.

ஆனால் உலகத்திலேயே கர்வம் பிடித்தவர் யார் என்றாலோ, அதே ராஜாவைத்தான் சொல்ல வேண்டும்.

ராஜாவின் அழகையும் சாமர்த்தியத்தையும் கேள்விப்பட்டு அரசர்களும் சக்கரவர்த்திகளும் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் தனக்கேற்ற அழகி இந்த உலகத்திலேயே இல்லை என்ற கர்வத்தினால் சுந்தர ராஜா யாரையும் மணக்க முடியாதென்று மறுத்து விட்டார்.

இந்தக் காரணத்தால் எல்லா அரசர்களும் சுந்தர ராஜாவின்மேல் கோபங் கொண்டார்கள். மங்கள தேசத்து அரசர் மட்டும் ஓயாமல் தன் மகளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று தூது விட்டுக் கொண்டிருந்தார். ஆனால் ஒன்றும் பிரயோசனம் இல்லை.

ஒரு நாள் மாலை சுந்தர ராஜா தன் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். ஓரத்திலிருந்த ரோஜாச் செடியில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் பூத்திருந்தன. அரசர் அதைக் கூர்ந்து கவனித்தார். அந்தச் செடியின் மேல் கிளையில் ஜோடியாகப் பூத்திருந்த இரு பூக்கள் தங்கள் இதழ்களைக் குவித்தும் விரித்தும் ராஜாவை அருகில் அழைப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தன.



சுந்தர ராஜா அவசர அவசரமாகச் சென்று அந்தப் பூக்களைக் கிள்ள முயன்றார். 'ஆ' என்ற சத்தம் அவர் காதில் விழுந்தது. திடுக்கிட்டு விழித்தார் ராஜா. ஏன் தெரியுமா? அவர் கிள்ள முயன்றது நிஜமான ரோஜாப் பூக்களை அல்ல. அந்த ரோஜாச் செடியின் பின் பக்கம் இருந்த தேவ கன்னிகையின் அழகிய மலர் போன்ற கன்னங்களைத்தான் ராஜா கிள்ள முயன்றார்!

தேவ கன்னிகைக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்து விடவே, "அரசே! இதோ, பிடி சாபம்! உன் உடம்பு ஸ்தூலமாகப் போய் நீ அழகற்றவன் ஆவாயாக; உன்னுடைய கர்வம் ஒடுங்குமாக!" என்று சாபம் கொடுத்து விட்டாள்.

"இந்தச் சாபம் மாற வழியே கிடையாதா?" என்று அரசர் வருத்தத்துடன் கேட்டார்.

"ஒரே ஒரு வழியிருக்கிறது. அந்த வழிப்படி யார் செய்து உன் சாபத்தை நீக்குகிறார்களோ, அவரை உன் ராஜாங்கக் காரியங்களுக்குத் துணையாக வைத்துக்கொள்!" என்று சொல்லித் தேவதை மறைந்தாள்.

மாதங்கள் சென்றன; வருஷம் ஒன்றும் கடந்தது. தேச தேசங்களிலிருந்து வைத்தியர்களும் உடல் தத்துவ ஆராய்ச்சி நிபுணர்களும் வந்து சுந்தர ராஜாவை மெலிய வைக்க முயற்சி செய்தார்கள். ஒரு வைத்தியர், "பதினெட்டு வகைப் பச்சிலைகளில்

பாதம் அல்வாவைப் போட்டுச் சாப்பிட்டால் குணமாகும்!" என்றார். இன்னொருவர், "தினம் ஒன்றுக்கு 179 கசரத்தும் 232 தண்டாலும் எடுத்தால் குணமாவது நிண்ணம்!" என்றார். வேறொருவர், "சாதத்தில் நெய் கூட இரண்டு கரண்டி விட்டுச் சாப்பிட்டால் குணமாகிவிடும். அப்படிக் குணமாகாவிட்டால் எனக்குப் பணம் வேண்டாம்!" என்றார்.

சுந்தர ராஜா எல்லாவற்றையும் செய்து பார்த்தார். ஆனால் நேர் மாறாக உடம்பு பருமனாகிக் கொண்டே போயிற்று.

ஒரு நாள் நீண்ட காவிச் சட்டை அணிந்து கொண்டிருந்த ஒரு சின்ன சந்நியாசி வந்து, "அரசருடைய வியாதியை நான் குணப்படுத்துகிறேன்!" என்றார். இதைக் கேட்ட அரண்மனை உத்தியோகஸ்தர் ஒருவர் அந்தச் சந்நியாசியை அரசரிடம் அழைத்துக் கொண்டு போனார்.

வந்த சந்நியாசி அரசருடைய கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "அரசனே! உன்னுடைய தேகம் ஒரு நாளும் இளைக்காது. இன்னும் ஆறு மாதங்களுக்குள் நீ இறந்துவிடுவாய்! ஆகையால் மருந்துக்கு வீணாகப் பணத்தைச் செலவு செய்யாதே!" என்றார்.

அரசனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது. "அடேய், யார் அங்கே? இந்த வைத்தியனைக் கொண்டு போய்ச் சிறையில் அடையுங்கள். இவன் சொன்னபடி நான் ஆறாவது மாதத்தில் இறந்து போய் விட்டால் இவனை விடுதலை செய்து விடுங்கள்: இல்லாவிடில் நானே இருந்து இவனைத் தூக்கிலிடச் செய்கிறேன்!" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

அன்று முதல் ராஜாவுக்கு ஓரே பீதியாக இருந்தது. நாட்கள் ஆக ஆக, பீதி அதிகரித்தது. "ஐயோ! செத்து விடப் போகிறோமே!" என்று எண்ணி எண்ணி, அன்ன ஆகாரம் சாப்பிடாமல் தவித்தார்: தூக்கமே இல்லாமல் கஷ்டப்பட்டார்.

மாதங்கள் ஆறும் கடந்தன. தான் இறந்து போகவில்லை என்று தெரிந்த பிறகுதான் ராஜாவுக்கு உயிர் வந்தது. அன்று பொய் சொல்லி வீண் பீதியைக் கிளப்பி விட்ட அந்த அற்ப சந்நியாசியை இழுத்து வரச் சொன்னார். சேவகர்கள் சிறிது நேரத்தில் அந்தச் சந்நியாசியைக் கொண்டு வந்து அரசர் முன்னால் நிறுத்தினார்கள்.


"அடேய், வைத்தியக்காரா! நீ சொன்னபடி நான் இறந்து போகவில்லையே! இப்பொழுது என்ன பதில் சொல்லப் போகிறாய்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே! தங்கள் உருவத்தை நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று பார்த்தீர்களா? ஆறு மாதத்தில் நீங்கள் இறந்து போய் விடுவீர்கள் என்று நான் சொன்னதை நிஜமென்று நம்பி அன்ன ஆகாரம் இன்றித் தவித்தீர்கள்; தூங்காமல் வேறு கஷ்டப்பட்டீர்கள். ஆகையால் தங்கள் உடம்பு மெலிந்து பழைய அழகை அடைந்தீர்கள்!" என்று சொல்லி விட்டுத் தான் அணிந்திருந்த நீண்ட சட்டையைக் கழற்றி எறிந்தார் சந்நியாசி. என்ன ஆச்சரியம்! சந்நியாசியாக வேஷம் போட்டுக் கொண்டு வந்தது வேறு யாருமல்ல; மங்கள தேசத்து இளவரசிதான்!

அவளைப் பார்த்த சுந்தர ராஜாவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தான் காண்பது கனவோ என்று சந்தேகம் உண்டாகிவிட்டது. "இளவரசியே! தாங்கள் செய்த பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? எது வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்!" என்றார்.

"ராஜகுமாரா! தாங்கள் எதுவும் எனக்குத் தரவேண்டாம். தேவகன்னிகை கடைசியில் சொன்னது போல் தங்கள் ராஜாங்கக் காரியத்துக்குத் துணையாக என்னை ஏற்றுக் கொண்டால் போதும்!" என்றாள் மங்கள தேசத்து ராஜகுமாரி.

சுந்தர ராஜாவுக்கு அப்பொழுது தான் விஷயம் விளங்கிற்று. மறுநாளே அவருக்கும் மங்கள தேசத்து ராஜகுமாரிக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.



ராமு பதினொரு வயதுச் சிறுவனாக இருந்த போதே அவன் தகப்பனார் போன இடம் தெரியாதபடி போய் விட்டார். உலகம் அவரைக் குடும்பம் நடத்த முடியாது ஓடிய கோழை என அழைக்கலாம். ஆனால் வாழ்க்கையை வெறுத்து அவர் போன இடம் எதுவோ? பெற்ற தாயார் லக்ஷ்மி அம்மாள் உலகம் தெரியாது ஓடி விளையாடும் ராமுவை வளர்ப்பதெப்படி என ஏக்கம் பிடித்து பித்துப் பிடித்தவள் போல் இருந்தாள் கொஞ்ச காலம். பின்னர் கூலி வேலை செய்து, மாவு அரைத்து எப்படியோ பாடுபட்டு வளர்த்து விட்டாள் ராமுவை. அவன் வயது வந்த பெரியவனாகி இன்று ஓர் உத்தியோகத்தில் மாதம் ரூ. 25 சம்பாதிக்கிறான்.

ஒரு நாள் ராமு தன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த போது அவன் மனம் தன் நிலையை எண்ணிப் பார்த்தது. தகப்பனார் போய் வருஷம் ஒன்பது ஆகியும் உயிருடன் இருக்கிறாரா அல்லது அவர் இறந்து விட்டாரா என்று அறியாது தவிக்கும் தாயாரின் முகம் அவன் நெஞ்சை அழுக்கியது. இன்னும் என்ன என்னவோ எண்ணிக்கொண்டு நடந்தான். எண்ணம் முடிவதற்குள் அவன் வீட்டை அடைந்தான்.

“வா ராமு!” என்று அன்புடன் அழைத்துவிட்டுத் தாயார் லக்ஷ்மி அம்மாள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள்.

“ராமு! யாரோ ஒரு பிராமணன் வந்து விட்டுப் போனார். தம் வீட்டு விலாசம் கொடுத்திருக்கிறார். பெரிய சம்சாரியாம்; அவருக்கு ஆறு பெண்களாம். இவள் தான் மூத்தவளாம். நாளைக்குப் பெண்ணைப்பார்க்கக் கட்டாயம் வரணும் என்று சொன்னார். எனக்கோ வயசாச்சு; நான்தான் வாழா வெட்டியாய் நிற்கிறேன். நீயாவது மனைவி பக்கத்தோடு சந்தோஷமாய் இருப்பதைப் பார்த்து விட்டுக் கண்ணை மூடினால்தான் என் மனசு நிம்மதியடையும். என்னடாப்பா, நீ என்ன சொல்கிறாய்?” என்று சொல்லிக் கொண்டு வந்தபோதே துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் மல்கியது.

“சரி, அம்மா!” என்றுதான் சொன்னான். வறண்டு கிடக்கும் தாயாரின் வாழ்க்கையில் இதனாலாவது சிறிது சாந்தி ஏற்படாதா என நினைத்துத்தான் சம்மதித்தானோ என்னமோ?

* * *

கல்யாணம் ஆன ஒரு வருஷத்திலேயே ராமுவின் வாழ்க்கை அவன் எதிர்பாராதபடி மாறி விட்டது. புண்பட்ட நெஞ்சுடன் வாழ்ந்த ராமுவின் மனதிலே ஒரு வெறுப்புத்தான் ஏற்பட்டது. தனது செயலால் அவன் அன்பை பெறத் தவறிய சரளா தனது கடுஞ் சொற்களால் அவன் உள்ளத்தை உடைத்தே விட்டாள்.

ஐப்பசி மாதம். ஒரு நாள் மழை இரவெல்லாம் கொட்டியது போதாதென்று காலையிலும் பிசு பிசு எனத் தூறிக் கொண்டிருந்தது. இரவில் ஒழுகியதால் நனைந்து போன இடங்களைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தான் ராமு. தாயார் லக்ஷ்மி அம்மாள் எங்கோ வெளியே போயிருந்தாள்.

“சரளா, இங்கே ஒரே ஜலம். கொஞ்சம் துடைத்து விடு” என்றான்.

அதற்கு எதிர்பாராது வந்த துச்சமான பதில் ராமுவின் மனதைக் குத்தி, கோபத்தைக் கிளறியது. “அடி” என்றுகூட அழைக்காது இருந்த தன் மனைவியை வெறித்துத்தான் பார்த்தான்.

“என்ன பார்வை? அடித்து விடுவீர்களோ......” என்றாள்.

“நீ தான் அடிக்க வருபவள்போல் பாய்கிறாய்...” என்றான் ராமு.

"ஏன் அடிக்கக்கூடாது! புருஷன் மனைவியை கையைப் புடைக்கலாம். பெண்களுக்குப் பட்டுக் கொள்ளத்தான் உரிமையோ?"

"என்ன பிடை, உளறுகிறாய்! நான் என்றாவது தொட்டதுண்டா?" என்றான். அவனுக்குக் கோபம் வந்தது. சிறு விஷயந்தான். ஆனால் இதைப் போல எத்தனை நாள் பொறுத்துக் கொண்டிருப்பது. ஆம்; இனிமேல் பொறுக்க முடியாது என்று நிர்மாணித்து விட்டான். ராணுவத்தில் சேர்ந்து விடுவது என்று அன்றே ரயில் ஏறிவிட்டான்.

* * *

சீட்டை விரல் கனமுள்ள ரொட்டி; உலையில் உள்ள காய்கறிகளைப் போட்டு விவரிக்க முடியாத ருசியோடு கூடிய கூட்டு. இவைதான் இரண்டு வேளையும் ராமுவுக்குப் பட்டாளத்தில் கிடைத்த உணவு. வேலை செய்யக் காலை ஏழு மணிக்குப் போனால் திரும்ப மணி ஒன்று ஆகும். ரொட்டி தின்று விட்டுக் கை அலம்ப மணல்தான் உபயோகிக்க வேண்டும். மறுபடியும் இரண்டு மணி முதல் மாலை ஐந்தரை மட்டும் வேலை. இதைத் தவிர ஓய்ந்த நேரத்திலே சில்லறை வேலைகள்: வேலி கட்டுதல், புல் வெட்டுதல், செப்பனிடுதல் முதலியன. சாதி, மத பேதமின்றி சமதர்ம வாழ்க்கை வாழ அதுதான் தகுதியான இடம். ராமுவுக்கு இப்படிச் சில ஆண்டுகள் சென்றன.

ஒரு ஆள் கனம் கனக்கும் துப்பாக்கி முதலியன தூக்கிக் கொண்டு ஓட வேண்டும். வேளா வேளைக்குச் சோத்துக்கு வர முடியாது. வரா விட்டால் ரொட்டி கிடையாது. ஆகையால் பாதி நாள் பட்டினி. இது போதாதென்று உதிரம் உறையும்படியான குளிர் வாட்டி எடுக்க ராமு பயித்தியம் போல் அலைந்ததையும், அவன் தனிமையில் பெருக்கிய கண்ணீரைப் பகவான் அறிந்தாரோ என்னவோ, காப்டன் ஸ்ரீ சர்மா உணர்ந்தார். அவர் மிலிடரியில் ராமுவை அடிக்கடி பார்த்திருக்கிறார். அவன் முகத்திலே உள்ள சோகத்தின் சாயை அவரை வாட்டியது. அவனை அழைத்து விசாரித்தார். சர்மாவின் உள்ளத்தையே கலக்கி விட்டதுபோல் இருந்தது அவனது சோகக் கதை. "ஹா" எனக் கதறி விட்டார். உள்ளத்திலே பொதிந்துகிடந்த துக்கம் பீறிட்டு வெளிப்பட்டது. அவனைத் தன்னிடமே வேலைக்கு வைத்துக் கொண்டார். உண்ண நல்ல உணவு கிடைத்தது. அவருக்கு அவன் மேலே ஏற்பட்ட பாசம் அவன் உள்ளத்துக்கு ஓர் தாற்காலிக சாந்தி அளித்தது.



1944-ம் வருடம் ஓர் நாள் யூனிட்டில் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. மூந்நூற்றைம்பது பேர் போர் முனைக்குச் செல்ல ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. பலர் இதை விட்டுத் தொலைந்தால் போதும் எனக் குஷியாகப் புறப்பட்டார்கள். கட்டாயம் யமலோகத்தில் இதைவிட நன்றாக நடத்தப்படுவோம் என நம்பிக்கை அவர்களுக்கு. அப்படிப் புறப்பட வேண்டிய ஆபீஸர்களில் சர்மாவின் பெயரும் சிப்பாய்களில் ராமுவின் பெயரும் காணப்பட்டது. ராமுவின் மனதில் ஒரு சுறுசுறுப்பு. உடலிலே ஒரு வேகம். ஆனால் வாழ்க்கையில் எதிலேயும் ஏமாற்றத்தையே அடைந்த அவன் இதிலும் ஏமாற்றத்தையே அடைந்தான்.

அன்று இரவு அவனுக்கும் சர்மாவுக்கும் பலத்த வாதம். தான் ரொம்ப சிபார்சு செய்து போர்முனைக்குப் போவோர்களிலிருந்து அவன் பெயரை விலக்கி விட்டதாகவும், அவனுக்கு இனி அதிக கஷ்டமில்லாதபடியிருக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் ஸ்ரீ சர்மா சொன்னது அவனுக்கு வேப்பங்காயாயிருந்தது. ஆனால் அவர் வாதம் அவன் நாவை அடக்கி விட்டது. "ராமு, நான் செய்தது தப்பாக இருந்தால் மன்னித்துவிடு. இந்தத் தடவை நீ வரவேண்டாம். எனக்காக இந்தச் சிறு தியாகம் செய்ய மாட்டாயா? உன் மேல் உள்ள அன்பு காரணமாகவும் மதராஸி என்றதாலும் செய்தேன்" என்று அவர் சொன்ன சொல்லுக்கு எதிராக அவனால் ஏதும் பேச முடியவில்லை.

அடுத்த முறை போர்முனைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. ஏனென்றால் சண்டையும் முடிந்து ராமுவும் 'டிஸ்சார்ஜ்' ஆகித் தன் ஊருக்குப் புறப்பட்டான்.

* * *

'அதோ சென்ட்ரல் ஸ்டேஷன். அப்பாடி தமிழ், தமிழ் பேசும் மக்கள்' என்று உவகை தலைகாட்டியது ராமுவின் மனநிலை. அடுத்த கணம் ராமுவின் மனம் தவித்தது. "நாளை விடியற்காலை ஊருக்குப் போவோம். அம்மா 'வாடா' எனச் சொல்லிவிட்டு அழுவாள். ஸரஸா, பாவம், ரொம்ப இளைத்துப் போயிருப்பாள். நான் மிலிடரியில் சேரும் போதே மூன்று மாதமாக ஸ்நானம் செய்யவில்லை. ஒரு வேளை குழந்தை பிறந்து... சின்னப் பயலாக... அடடா!" அவன் மனதை என்னவோ செய்தது மெய் சிலிர்த்தது; ஆனந்த மிகுதியால் உதடு துடித்தது.

ஊரை அடைந்து விட்டான்.

நடப்பது தெரியாமல் வீட்டை நோக்கி நடந்தான் கையில் பெட்டி படுக்கையுடன்.

"அம்மா!" என்று மூன்றரை வருடங்களுக்குப் பிறகு வாய் விட்டு உரக்க அழைத்தான் ராமு.

"ராமுவா? என் ராமுவா!" என்ற குரல் வந்தது. கதவும் திறந்தது.

"அம்மா" என அழைத்துக் கொண்டே போனான். இரேழி, சமையல் அறை, சாமான் அறை... அம்மா...

"ஐயோ! என்னம்மா கோலம்?" எனக் கத்தினான். உணர்ச்சியால்; அவன் குரல் கம்மியது.

உருத்தெரியாது மங்கியிருந்த பழைய ராமர் காலண்டர் பின்னாலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினாள் லக்ஷ்மி அம்மாள்.

விளக்கைத் தூண்டினான். மிலிடரியிலிருந்து வந்த கவர்...கை துடித்தது. பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

பிரியமுள்ள லக்ஷ்மிக்கு,

இக்கடிதம் உனக்குக் கிடைத்தால் நீ துரதிர்ஷ்டசாலி என்று எண்ணிக்கொள்.

உன் மகனை வளர்த்த உனக்கு என்ன சொல்லப் போகிறேன்? நான் உன்னை விட்டுப் பிரிந்ததும் மிலிடரியில் சேர்ந்து படிப்படியாக காப்டன் பதவிக்கு வந்தேன். ஒருநாள் பெற்ற மகனைக் கண்டேன். ஆனால் ஏதோ ஒன்று அவனுக்கு நான் தான் அவன் தந்தை என்பதைச் சொல்ல விடவில்லை. என் மகன் பெரியவனாகி விட்டான் என்று சந்தோஷமடைந்தேன். போர் முனைக்கு அவனை வராமல் இருக்க ஏற்பாடு செய்யத்தான் முடிந்தது என் தந்தைப் பாசமே. போர் முனையிலிருந்து உயிருடன் திரும்பி வந்தால் மடலுடன் உன்னைப் பார்க்க இருந்தேன். இக்கடிதம் உன் கைக்குக் கிடைக்குமானால்

அது உன் துரதிர்ஷ்டம் தான். நான் போரில் இறக்க நேர்ட்டால் இக்கடிதத்தை உனக்கு அனுப்பும்படி ஏற்பாடு செய்து விட்டுப் போகிறேன். வாழ்க்கையில் துக்கப்படப் பிறந்த நீ அழாதே! ராமுவைக் கடவுள் காப்பாற்றுவார்."

"அப்பாதானா அவர்!" என்று அடி வயிற்றிலிருந்து எழுந்த அலறல் அந்தக் காலை வேளையிலே அந்தப் பாழடைந்த வீட்டைக் கிடுகிடுக்கச் செய்தது.

"கண்ணே, நீ அவரைப் பார்த்துப் பழகினாயோடா?" என்றாள் தாயார்.

உடனே சர்மாவின் விருத்தாந்தம் பூராவும் தாயாருக்குச் சொன்னான். அதற்குள் நித்திரையில் ஆழ்ந்திருந்த குழந்தை 'குவா, குவா' என்று கத்தியது.

ஒரு கணம் திகைத்த ராமு "அம்மா?" என்றான்.

"ஆமாப்டா, உன் குழந்தை தானடா?" என்றாள் தாயார்.

அதற்குள் சரளி குழந்தையைத் தூக்கிக் கொண்டுவந்து சேர்ந்தாள். குழந்தை மிலிடரி உடையிலிருந்த தன் தந்தையைப் பார்த்துத் தன் பொக்கை வாயால் சிரித்தது.

"அம்மா, அப்பா எனக்காகச் செய்த தியாகம் கொஞ்சம் கஞ்சமல்ல. அவர் அவ்வளவு தூரம் என்னைத் தடுக்கவில்லையென்றால் நான் இந்த உலகிலேயே இருந்திருக்க மாட்டேன். போர்க்களத்துக்குச் சென்று உயிரை விட்டிருப்பேன். அவருடைய பெயரைத்தான் உன் பேரனுக்கும் வைக்கப் போகிறேன் இந்த ஆண்டு நிறைவின் போது" என்று சொல்லிக் கொண்டு குழந்தையை வாங்கிக் கொண்டான்.

குழந்தையும் பொக்கை வாய்ச் சிரிப்பு ஒன்று சிரித்தது. அவன் கூறியதை ஆமோதித்தது.

• • •

அன்று தனியாக சரளி ராமுவைச் சந்தித்த போது "நான் செய்த சிறு தவறுக்காக என் மேல் கோபங்கொண்டு தானே படையில் சேர்ந்தீர்கள்? இனி மேல் நான் அவ்விதம் நடந்து கொள்ள மாட்டேன், எனக்கு நல்ல தண்டனை அளித்து விட்டீர்கள்" என்றாள்.

"உன்னைத் தண்டிக்க வேண்டும் என்று அவ்விதம் செய்யவில்லை. நானும் ஏதோ அசட்டுத்தனமாகத்தான் ஓடினேன். அதனால் என்ன, அப்பாவைச் சந்திக்க முடிந்ததல்லவா! அவருடைய அன்பையும் பெற முடிந்ததல்லவா!" என்று மழுப்பினான்.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

236. சிற்ப தேவதைக்குப் பூஜை

கற்பின் தெய்வமாய் இலங்கையில் இருக்கிறாள் சீதாதேவி, என்று அனுமன் சொன்னான். ராமன் சுக்ரீவன் முதலியவர்களுக்குச் சீதாதேவியைப் பற்றிய சஞ்சலமெல்லாம் நீங்கிற்று. ராவணனோடு போர் புரிவதற்கான ஏற்பாடுகளைப் பற்றி யோசிக்கலானார்கள்.

இதோடு சுந்தரகாண்டம் முடிகிறது. இனி, இலங்கைக்குப் போகிறோம்.

⁂

எரிபட்ட இலங்கையைப் புதுப்பித்து விட்டார்கள். அவ்விதம் திருத்தி அமைத்த நகரை ராவணன் நடந்து போய்ச் சுற்றிப் பார்க்கிறான்.

⁂

மனிதன் எத்தனையோ அற்புதமான பொருள்களைச் செய்திருக்கிறான். கோயில்களையும் கோபுரங்களையும் வெகு அருமையான வேலைப்பாடுகளோடு நம்மவர்களும், இந்தத் தமிழ் நாட்டில் நிறுவி இருக்கிறார்கள்.

ஆனாலும் ஒரு தாமரை மலரையும் அதன் அமைப்பையும் கூர்ந்து பார்த்து விட்டால் நம்முடைய எந்தப் புராதனமான சிற்பமும், தாமரை மலரில் காணுகிற எண்ணிறந்த அற்புத அம்சங்களின் பக்கத்தில் வர முடியாது.

பிரம்ம சிருஷ்டியில் காணும் சிற்பத் தொழிலே சிறந்த சிற்பத் தொழில். நம்மவர்கள் இந்த உண்மையை உணர்ந்து, சிற்பக் கலைக்கு பிரம்மனை அதிதேவதையாகக் கொண்டார்கள். பிரம்மனுக்கு வழிபாடான கிரியைகளையும் பக்தியுடன் செய்து வந்தார்கள்.

நாடக இயலில் ஒரு காட்சி.

பிரம்ம தேவனும் தேவ தச்சனும் நம் கண்முன் வருகிறார்கள். எங்கே போகிறார்கள் பார்க்கலாம்.

அனுமனுடைய வாலினால் சாம்பலாய் ஒழிந்துபோன இலங்கை நகரத்திற்குள் பிரவேசிக்கிறார்கள்.

பிரம்ம தேவன் தேவ தச்சனை நோக்கி இன்னின்ன முறையில் திருத்தமாக நகரை அமைத்துக் கட்ட வேண்டும் என்று கட்டளை இட்டான். தேவ தச்சன் அந்தக் கட்டளைக் கிணங்கவே இலங்கை நகர் முழுவதையும் கட்டி முடித்தான்.

சந்தம்

தானன தானன
    தான தன்னன

பூவரும் அயனொடும்
    புகுந்து, பொன் நகர்
மூவகை உலகினும்
    அழகு முற்றுற,]
ஏவினன் இயற்றினன்
    கணத்தின் என்பரால்,
தேவரும் மருள்கொளத்—
    தெய்வத் தச்சனே.

[பூவரும் அயனொடும் புகுந்து: தாமரையில் எழுந்தருளும் பிரம்ம தேவனோடு இலங்கைக்குள் போய்; பொன் நகர்: அழகான புதிய இலங்கை நகரை; மூவகை உலகினும் அழகு முற்றுற: கீழ் உலகம், பூ உலகம் வானுலகம் ஆகிய மூன்று உலகங்களிலும் காண முடியாத அவ்வளவு சிறந்து பூரண அழகோடு கூடியதாய்; ஏவினன் இயற்றினன்: பிரம்ம தேவன் எடுத்துக் காட்டியபடி செய்து முடித்தான்; கணத்தின் என்பரால்: ஒரு கணத்தில் என்று சொல்லும்படி அவ்வளவு துரிதமாக; தேவரும் மருள் கொள: ஏதோ வானவர்கள் என்று இருக்கிறார்களே, அவர்களே அதிசயிக்கும்படி; தெய்வத் தச்சனே: தெய்வ சக்தி வாய்ந்த மயனே— இயற்றினான்.]

குறிப்பு:—கம்பர் கட்டிடங்கள் கட்டுவதையும் நகரம் நிர்மாணிப்பதையும் பார்த்து ரொம்ப ரொம்ப அனுபவித்தவர். அந்த அனுபவத்தை வெளியிடுவதற்கு பிரம்மன், மயன் முதலிய மானசமான பாத்திரங்களைக்

கொண்டு வருகிறார். கவிஞருடைய கண்ணோடு நாமும் புதிப்பித்த இலங்கை நகரைப் பார்த்து அதிசயிக்க வேண்டும்.

* * *

தெய்வத் தச்சன் நகரை அமைத்து முடித்தான். பல வர்ணக் கற்களைக் கொண்டு வீடுகளையும், அரண்மனைகளையும் கோயில்களையும் அழகு பெற அமைத்தான். பொன்னாலும் நவரத்தினங்களாலும் அமைந்ததோ என்று சொல்லும்படியாக இருந்தது.

ராவணன் வந்து பார்த்தான்; ஒரே எக்களிப்பு உண்டாயிற்று அவனுக்கு. வானத்தை நோக்கினான் — அங்கே தான் இப்படி உண்டா என்று கேள்வி கேட்கும் பாவனையில்.

பொன்னினும் மணியினும்
அமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கினன்;
நாகம் நோக்கினன்;
முன்னையின் அழகுடைத்(து)
என்று, மொய்கழல்
மன்னனும் உவந்துதன்
முனிவு மாறினன்.

[பொற்புடை நன் நகர் நோக்கினன்: அழகு வாய்ந்த இலங்கை நகரை ராவணன் ஒரு பார்வை பார்த்தான்; நாகம் நோக்கினன்: அப்படியே எதிரே விண்ணையும் பார்த்தான் — வானுலகத்திலும் இப்படி உண்டா என்ற பொருள்பட; மொய் கழல் மன்னனும்: கால் நிறைந்த கழல் அணிந்த ராவணனும்: உவந்து தன் முனிவு மாறினன்: என்றும் இல்லாத சந்தோஷம் உண்டாய் அந்த சந்தோஷத்தினால் நகரை அழித்த குரங்கின் மேல் உண்டான கோபம் கூட மறந்து விட்டது.

குறிப்பு:—சிற்பக்கலை முதலான பண்பாடுகளில் ராவணன் எவ்வளவு உயர்ந்திருந்தான் (சங்கீதத்திலும் சமயத்திலும் உயர்ந்திருந்தது போலவே) என்பதைக் கம்பர் விளக்குகிறார்.]

* * *

பட்டணத்தின் அமைப்பைப் பார்த்து அதிசயித்தான் ராவணன். பிறகு உள்ளேயும் போய்ச் சுற்றிப் பார்க்கிறான். பார்த்தபின் சிற்பத்தின் அதிதேவதையான பிரம்மனுக்கு வழிபாடுகள் செய்யும்படி தெய்வத் தச்சனிடம் சொல்லுகிறான்.

திருநகர் முழுவதும்
திருந்த நோக்கிய
பொருகழல் இராவணன்,
'அயற்குப் பூசனை
வரன்முறை இயற்றித்
வழிக்கொள் வாய்' என்றான்,
அரியன தச்சற்கும்
உதவி ஆணையால்.

[பொரு கழல் ராவணன்: போரின் வெற்றிக்கான கழல் அணிந்த ராவணன்; அயற்குப் பூசனை: பிரம்மனுக்குப் பூஜைகள்; வரன்முறை இயற்றி: பூர்வமாக ஏற்பட்ட விதிப்படி செய்து; வழிக்கொள்வாய் என்றான்: அருளைப் பெறுவாயாக என்றான்; அரியன தச்சற்கும் உதவி ஆணையால்: மந்திரிமாருக்குக் கட்டளை இட்டு அவர்கள் மூலமாக அரிய பரிசுகளை — பீதாம்பரங்கள், சால்வைகள், பொற் கலசங்கள் ரத்தின ஆரங்கள் முதலிய பரிசுகளைத் தேவ தச்சனுக்குக் கொடுக்கும்படி செய்தான்.]

யுத்தம், அதிகாரம் முதலிய நோரணை இருந்த போதிலும் ராவணன் பற்றி சாதனங்களில் ஈடுபட்டிருந்தான் என்பதைச் செய்யுள் விளக்குகிறது. "பொருகழல் இராவணன்" என்ற வார்த்தையில் வீர தோரணை நன்கு தொனிக்கிறது.

நீலப் பெட்டி

எஸ். வி. எஸ்.

அன்று இரவு ஒன்பது மணிக்குமேல் உலாவச் சென்றேன்.

"பார்க்கப் போனால் சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பார்ப்பது நான் ஒருவன்தான் என்று ஏற்படும்" என்று ஒரு குரல் எங்கிருந்தோ வந்தது.

"எப்படி?" என்றது இன்னொரு குரல். அதற்கு முதலில் வந்த குரல் பின்வருமாறு பதில் கூறியது:

சமீபத்தில் தீபாவளி வந்ததல்லவா! இந்த தீபாவளியின்போது எத்தனை இளந் தம்பதிகள் எவ்வளவு குதூகலமாகக் கடிதங்கள் எழுதிக் கொண்டார்கள்.

"என் அருமைக் கண்மணி, தீபாவளி நெருங்க நெருங்க உன்னைக் காணவேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் எப்படி அடித்துக் கொள்ளுகிறது தெரியுமா? தீபாவளி வருவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பே 'தீபாவளி வரப் போகிறது; என் கண்மணியைப் பார்க்கப் போகிறேன்' என்று எண்ணி இந்த ஒன்றே முக்காலே அரைக்கால் மாசத்தையும் எப்படியோ தள்ளி விட்டேன். ஆனால் இந்த மூன்று நாளுந்தான் தள்ள முடியவில்லை. பாழாய்ப்போன தீபாவளி எப்படியாவது மாயாஜாலம் மகேந்திர ஜாலம் புரிந்து நாளைக்கே வந்துவிடக் கூடாதா என்றிருக்கிறது."

இவ்விதமெல்லாம் உற்சாகமாக எழுதிய கடிதங்கள் எத்தனையோ எனக்கு வந்தன. அந்த உற்சாகத்தில் தலைக் குப்புறக் கவிழ்ந்து நான் கடந்துவிடவில்லை.

"என் ஆருயிர் காதலரே! 'கல்யாணத்தின்போது என்னைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை; ஆடியின்போதும் என்னை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அதனால் உன் மேல் கோபம். தீபாவளிக்கு வரப்போவதில்லை' என்று எழுதியிருக்கிறீர்களே! நீங்கள் வரவில்லை என்ற வார்த்தை என் இதயத்தை வாள் கொண்டு அறுப்பது போலிருக்கிறதே! ஐயோ! நீங்கள் மெத்தப் படித்தவர்களாயிற்றே! எத்தனையோ காவியங்கள், காதல் கவிகள் படித்தவர்களாயிற்றே! அவைகளில் வரும் பெண்கள் நாணத்தினால் தங்கள் காதலர்கள் எதிர்ப்பட்டபோது பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்தார்கள் என்பதெல்லாம் படித்து மிக மிக அனுபவித்தவர்களாயிற்றே! பேதை நான் தங்களைப் பார்க்க இயலாமல் போவதை மட்டும் தங்களால் உணர முடியவில்லையா! தயவுசெய்து என்மீது இரக்கம் கொண்டு கட்டாயம் தீபாவளிக்கு வந்து சேருங்கள். புண்ணியமுண்டு."

இவ்வாறெல்லாம், சில ஆசிரியர்கள் கூறுவது போலக் கண்ணீரையும் மையையும் கூட்டி எழுதப்பட்ட கடிதங்கள் எத்தனையோ வந்தன. அதனால் எல்லாம் நான் நிலை தளர்ந்து விடவில்லை. நானும் கண்ணீர் விட்டுக் கொண்டு நிற்கவில்லை!

* * *

நான் வெய்யிலைக் கண்டு அஞ்சி பெருமூச்சு விட்டு 'ஊட்டிக்குப் போகலாமா, கொடைக்கானலுக்குப் போகலாமா?' என்று எண்ணுவதில்லை. அத்தனை வெய்யிலையும் தலையில் வாங்கிக் கொண்டு சிவனே என்றுதான் இருக்கிறேன்.

அப்படியேதான் அடாத மழை பெய்தாலும், குடை பிடித்துக்கொண்டு நிற்பதில்லை; மெழுகு பூசப்பட்ட துணியால் செய்த அங்கிகள் அணிவதில்லை.

பனி கொட்டினாலும் நான் பொருட்படுத்துவதில்லை! உல்லன்களால் செய்த துணிகள் அணிந்து கொண்டு கணப்பைத் தேடித் திரிவதில்லை.

இவ்விதமாக முதல் குரல் சொல்லிக் கொண்டு வரவே, இரண்டாவது குரல் "வாஸ்தவம். நீ பெரிய யோகிதான்! சுகம் துக்கம், வெய்யில் மழை எல்லாவற்றையும் ஒன்றாகப் பாவிக்கிறாயல்லவா!" என்றது.

அதற்குள் நான் என் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு என் வீட்டை அடைந்தேன். சட்டையைக் கழற்றினேன்! பைக்குள்ளிருந்த கடிதம் 'தொப்' பென்று கீழே விழுந்தது. தேள் கொட்டினாற்போல் கையை உதறிக் கொண்டு, "அடாடா! என்ன காரியம் செய்தோம்! ஆகாச விமானத் தபால்களுக்கென்று இரவு நேரங்களிலும் சேகரிக்கப் பிரத்தியேகமாக ஏற்படுத்தப் பட்டிருக்கும் நீல நிறத் தபால் பெட்டியில் இந்தக் கடிதத்தைப் போட வேண்டுமென்று போய் விட்டு, அந்தத் தபால் பெட்டியைப் பற்றி வேதாந்தம் பேசிக் கொண்டு தபாலைப் போடாமல் வந்து சேர்ந்தோமே! என்ன புத்திசாலித்தனம் என்ன புத்திசாலித்தனம்!" என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

வட்ட மேஜை

★

ஆதரவு வேண்டும்

மாணவர்கள் கடமை என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணய்யர் கடிதத்தையும் "குறைகள் நீங்கினால் மகிழ்ச்சியடையுங்கள். நீங்காவிட்டால் பொறுமையுடன் இருங்கள்" என்ற தங்கள் பதிலையும் கண்டேன்.

சமீபத்தில் மாணவர்கள் ஸ்டிரைக் நடந்த மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் தென் இந்து கல்லூரியிலும் நான் மாணவனாய் இருந்திருக்கிறேன். ஆறாண்டு கல்லூரி அனுபவத்திலிருந்து வடிகட்டும் பரீட்சையைப் பற்றி மாணவர்கள் நிலை என்ன, குறை என்ன, என்பதைக் கூற விரும்புகிறேன்.

இண்டர் மீடியட் மாணவர்களுக்கு ஆங்கிலம், தாய்மொழி, பிரத்தியேக பாடங்கள், என மூன்று பகுதிகள் உண்டு. சில மாணவர்கள் இந்த மூன்று பகுதிகளில் ஏதேனும் ஒன்றிரண்டில் தேர்ச்சிக் குறைவாக இருக்கிறார்கள். ஆனால் சென்னை அரசாங்க உத்தரவுப்படி 'தேர்தல் பரீட்சையில்' மூன்று பகுதிகளில் ஒன்றில் குறைந்த மார்க்குகள் வாங்கினாலும் அந்த மாணவனைச் சர்வகலாசாலைப் பரீட்சைக்குச் செல்லாமல் "வடிகட்ட" கல்லூரி அதிகாரிகளுக்கு உரிமை உண்டு.

இந்தத் துர்ப்பாக்கிய மாணவன் "வடிகட்டப்படாமல்" பரீட்சைக்கு அனுப்பப்பட்டிருந்தால் இரண்டு பகுதியிலாவது தேறியிருப்பான். அடுத்த பரீட்சையில் கவனக் குறைவான பகுதிகளிலும் தேர்ச்சியடைந்து மேல் வகுப்புச் செல்லத் தகுதியாக இருப்பான்.

தற்பொழுதோ, கல்லூரியை விட்ட பிறகு பேராசிரியர்கள் கவ்வ கண்காணிப்புமின்றி, மற்ற மாணவர்கள் உதவியுமின்றி, செப்டம்பரில் சக்தியற்ற பகுதியோடு மட்டுமல்ல, சக்தியுள்ள பகுதியிலும் தேறத் தவறுகின்றான். இவன் துர்ப்பாக்கியம் ஆங்கிலம், தாய்மொழி ஆகிய இரண்டு பகுதிகளின் உள்ள புத்தகம் 'ஸிலபஸ்' (பாடதிட்டம்) மாறி விடுவதால் பல தடவைப் படையெடுத்தாலும் தேற முடியாது தவறுகிறான்.

வடிகட்டும் முறை ஒரு கொடுமை. பாடத்திட்டம் மாறுவதும் ஒரு கொடுமை. கடந்த எட்டு ஆண்டுகளாக நம் மாகாணத்தில் இதை எதிர்த்துக் கிளர்ச்சி நடைபெறுகின்றது. மாணவர்களது கோரிக்கை இரண்டு: (1) வடிகட்டுதல் வேண்டாம். (2) குறைந்த பக்ஷம் மூன்று முறைக்காவது ஆங்கிலம் தமிழ்ப் பாடங்கள் மாற்றப்படக் கூடாது. இந்தக் கோரிக்கைகளை ஸ்ரீ சாமய்யர், ஸ்ரீ [illegible], ஸ்ரீ அலெக்ஸாண்டர் ஞானமுத்து ஆதரித்தவர்கள். பொது மக்களும் இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு காட்டி, 'பொறுமையுடன்' உள்ள மாணவர்களை மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டும்.

சென்னை
20—12—48 எஸ். எஸ். பார்த்தசாரதி

நிகழ்ச்சிகளைக் குறையுங்கள்!

இன்றைய அவசரகால சங்கீதத்தில், தானே இயங்கும் தன்மை காணப்படுவதில்லை. காப்பி அடிக்கும் மனப்பான்மையே அதிகமாகக் காணப்படுவதால் அவசரகால சங்கீதத்தில் ஜீவனிருப்பதில்லை. போதுமான அவகாசம் அளிக்கப்பட்டால் இன்றைய இளம் பாடகர்களில் பலரும் தத்தம் திறமைக்குத் தகுந்தவாறு தனியான பாணியைக் கைகொண்டு ரசிகர்களின் ஆதரவு பெற்றுச் சங்கீத உலகில் நட்சத்திரங்களாகத் திகழ முடியும். இன்று நாடெங்கும் பல சங்கீத சபைகள் இருக்கின்றன. போதிய சாதகமும் திறமையுமிருந்தால் இசைப் பயிற்சியாளர் சபைகள் மூலம் மேடைப்பிரபல்யம் அடைய முடியும்.

கர்நாடக சங்கீதத்தின் தரத்தைக் குறைக்கும் அவசரகால அரைகுறைச் சங்கீதத்துக்கு ரேடியோ போன்ற பொதுஜன உபயோகமான ஸ்தாபனங்கள் ஆதரவளிக்கக்கூடாது. இம்மாதிரியான உபயோகமற்ற நிகழ்ச்சிகளைக் குறைத்து விட்டால் நிலைய நிர்வாகப் பிரச்னைகள் பல தீர்ந்து இன்னும் உபயோகமான காரியங்களில் ஈடுபட நிர்வாகிகளுக்குப் போதிய அவகாசம் கிடைக்கும்.

திருவனந்தபுரம்
12—12—48 கை. கிருஷ்ணன்

★

யார் யோசனை கூறுவது?

"கிராம நிகழ்ச்சி" என்றால் அன்றாடச் செய்திகளை, 'என்ன அம்மே! என் தம்பி' என்ற பாணியிலே கூறிவிடுவது. அல்லது 'அல்லி அரசாணி' நாடகத்தை ஒலி பரப்பி விடுவது என்பதுதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைக் குறித்துப் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும், அதிகமாக அக்கரை காட்டினதாகத் தெரியவில்லை.

பல ஆண்டுகளாகக் கிராமங்களில் வாழ்ந்து, விவசாயத்திலே ஈடுபட்டு, அதிகமாகப் படித்திராமல் இருக்கின்றார்களே, அவர்கள் தான் உண்மைக் கிராமவாசிகள். அவர்களுடைய தொழில் முன்னேற்றத்திற்கும், வாழ்க்கை உயர்விற்கும் உபயோகமாக உள்ளவற்றைத்தான் "கிராம நிகழ்ச்சி"களில் ஒலிபரப்ப வேண்டும்.

மேற்குத் தாம்பரம்
13—12—48 சி. மகாலிங்கம்.

★

வேறு வேலை இல்லையா?

ரேடியோ வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. அநேகமாக இவர்களெல்லாம் ஏதேனுமாவது உத்தியோகம் பார்ப்பவர்களாகத்தான் இருப்பார்கள். காலையில் எழுந்து

தங்கள் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, ஸ்நானம் செய்துவிட்டு, சாப்பாட்டை முடித்துக் கொண்டு தங்கள் தங்கள் காரியாலயங்களுக்குக் கிளம்பவே மணி 9, 9—30 ஆகிவிடும். இந்த நிலைமையில் ரேடியோவின் காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணிவரை நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு அவர்களுக்கு நேரம் எங்கே இருக்கிறது? மொத்தத்தில் காலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ரேடியோ கேட்பவர்களில் பெரும்பாலோர் கேட்பதில்லை. காலையில் எழுந்ததும் எழாததுமாக முதல் வேலையாக ரேடியோவைத் திருகி விட்டு விட்டு ரேடியோ கேட்பது தானா நமக்கு வேலை? ஆகையால் யாருக்கும் பிரயோஜனமில்லாத இந்தக் காலையிலும், மத்தியானத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை எடுத்து விட்டால் என்ன?

செங்கற்பட்டு
16—12—48 சு. ராமசாமி

★

யாருக்குப் பிரயோஜனம்?

ரேடியோ சங்கீத நிகழ்ச்சிகளும் பிரசங்கங்களும், இசைத் தட்டு சங்கீதங்களும் காலை 7 மணி முதல் இரவு 10-30 வரை நடப்பதில் யாருக்கு லாபம்? காலை 7 மணி முதல் 9 மணி வரை யார் ரேடியோ கேட்கிறார்கள்? வீட்டுக்கு வீடு வந்து கணக்குப் பார்த்தாலும் நூற்றுக்குப் பத்துபேர் கூடக் கேட்பது இல்லை என்பதை நிச்சயமாய்ச் சொல்லலாம். வீடுகளில் காலையில் ஆண்கள் ரேஷன் தொல்லைக்கும், குழந்தைகள் படிக்கவும், பெண்கள் ரேஷனில் கிடைக்கும் கல்மண்ணைப் பக்குவம் செய்வதிலே பொழுது கிடைப்பது கஷ்டமாயிருக்கும்பொழுது யாருக்கு ரேடியோ நினைப்பு வரும்? காலை நிகழ்ச்சிகளால் உபயோகமே இல்லை. மாலை 4 முதல் 10 வரை உயர்ந்த நிகழ்ச்சிகளை நடத்தினால் பொது ஜனங்கள் ஆவலோடு கேட்பார்கள்.

கிராமங்கள் முன்னேறப் பல வழிகளையும் கையாண்டு வரும் காருண்ய சர்க்கார், கவனித்து கிராம நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மது விலக்கால் ஏற்பட்ட நன்மைகளையும், மது அரக்கனால் அடைந்த கஷ்டங்களையும் அடிப்படையாகக் கொண்ட நாடகங்களையும் நிகழ்த்தி கிராம மக்கள் விரும்பிக் கேட்கச் செய்யலாம்.

கிராமங்களிலிருக்கும் பொது ரேடியோக்களை அதிகாரிகள் அவை எல்லா நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பச் செய்ய வேண்டும். அது வல்லாமல் பாதிச் செய்தியில் ரேடியோவைத் திறக்க விட்டு, செய்தி முடியு முன்னே, வேலைக்காரர்கள் ஒலிபரப்பியைத் தூக்கிக் கொண்டு போய்ப் பூட்டுவதைக் கண்ணால் கண்டு வருகிறோம்.

சென்னை
15—12—48 லீலாவதி

★

கிராமத்துக்கு ஒரு ரேடியோ

தங்கள் 12-ந் தேதிய 'கல்கி' இதழில் வெளியான 'ரேடியோ மகாதேவர்' என்ற கட்டுரையைக் கிராமவாசியாகிய நானும் எனது நண்பர்களும் வரவேற்கிறோம். ஒரு கிராமத்துக்கு ஒரு ரேடியோ வீதம் சர்க்கார் செலவில் வைக்க வேண்டும். கிராமத்தார்களுக்குப் பத்திரிகைகள் தபாலில் இரண்டு தினம் கழித்துத் தான் வருகின்றன. கிராமத்துக்கு ஒரு ரேடியோ இருந்தால் அன்றாட நிகழ்ச்சிகளைக் கேட்டு கிராம மக்கள் மகிழ்ச்சி கொள்வார்கள். மகிழ்ச்சி மட்டுமல்ல, அறிவு வளர்ச்சியும் பெறுவார்கள். இதை நமது சர்க்கார் தங்கள் நிர்வாகத்தின் முதன்மையாக எடுத்து நிறைவேற்ற வேண்டும். கிராம மக்களுக்காக அரும்பாடு பட்ட நமது மகாத்மா மறைந்து விட்டார். அவருடைய மெய்யராகிய ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் இந்த ஏற்பாட்டைக் கூடிய சீக்கிரம் கவனிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அம்பலச்சேரி
16—12—48 மு. மா. முத்தையா

★

நிகழ்ச்சி முறை

12—12—48 'கல்கி' இதழில் தாங்கள் எழுதியுள்ள 'ஜே ஆந்திர மாதா'வையும் 'ரேடியோ மகாதேவரை'யும் வாசித்தேன். மேற்படி கட்டுரைகளில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் என் மனதில் வெகுகாலமாகவே தோன்றி வந்திருக்கின்றன. ஆனால் அவற்றையே நீங்கள் சொல்லியிருப்பது மிகவும் திருப்திகரமாய் அமைந்து விட்டது.

ரேடியோ நிகழ்ச்சிகளின் மொத்த காலம் மிக அதிகமா யிருப்பதுடன், அகாலத்தில் அமைந்து விடுகின்றன. காலையில் 7-30 மணி முதல் 9 மணி வரையில் ஜனங்களுக்கு ரேடியோ கேட்பது தானா வேலை?

மாதத்தில் பிரபல வித்வான்களின் கச்சேரிகள் என்று இரண்டு மூன்று கூடத் தேறாது. இவ்வளவுக்கும் நாள்தோறும் மொத்தம் பத்துமணி நேரத்திற்குக் குறையாமல் ரேடியோ அலறுகிறது. என்ன பிரயோஜனம்?

நிகழ்ச்சி முறைகளைப் பற்றியும், நிகழ்ச்சிகளின் தரத்தைப் பற்றியும் பக்கம் பக்கமாகக் குறைகள் எழுதலாம். மாலை 5-30 மணி முதல் இரவு 9 மணி வரை மட்டும் வடிகட்டி நிகழ்ச்சிகளை அமைத்தால் அநேகக் குறைகள் அடிபட்டுப் போகும்.

மேலும், சென்னை, திருச்சியில் தமிழ் நிகழ்ச்சிகள், நாடகங்கள், பிரசங்கங்கள் முதலியவற்றிற்குப் பெரும்பாலான நேரத்தை செலவிட வேண்டும். விஜயவாடா ரேடியோவில் தெலுங்கு மாதர் நிகழ்ச்சி, பள்ளிக்கூட நிகழ்ச்சி, சிறுவர் நிகழ்ச்சி முதலியவற்றை நடத்திக் கொள்ளலாம். கன்னடத்திற்குத்தான் மைசூர் ஆகாசவாணி இருக்கிறது; மலையாளத்திற்குத் திருவனந்தபுரம் இருக்கிறது. இந்த முறைகளை அனுசரித்தால் நிகழ்ச்சி நேரத்தைக் குறைப்பது சுலப சாத்தியமாகும்.

இராயப்பேட்டை
14—12—48 பத்மா

★

ஜெனரல் கரியப்பா

தங்களுடைய இவ்வார இதழின் கடைசியில் வந்த அட்டைப்படத்தைப் பார்க்கும்பொழுது என் உடல் புல்லரித்தது. உள்ளம் புளகாங்கிதமடைந்தது. காரணம், இந்திய சைனியங்களைச் சேர்ந்த மகாரதி வீரர் இந்திய சைனியத்தின் மாபெருந் தலைவராகப் போகிறார் என்னும் செய்தியை மிக்க மகிழ்ச்சியுடனும், பெருமிதத்துடனும் தெரி

விப்பதற்காக வீர தளபதி கரியப்பாவின் உருவப்படத்தை அட்டையில் வெளியிட்டிருந்ததுதான்.

இந்திய சைனியத்தைச் சேர்ந்த வீரர்களை யாரும் மறக்க முடியாது. 'வயிற்றுச் சோற்று வீரர்களா'யிருந்தாலும் நம் நாட்டுப் பற்று, தேச சேவை அவர்களுக்கில்லாமற் போகாது என்பதைக் குறிப்பாகத் தங்கள் 'உயிரையும் கொடுப்பார்கள்' என்னும் கட்டுரையில் உணர்த்தியிருந்தீர்கள். 'உயிரைப் பொருட்படுத்தாத தீரம்' கொண்ட அவ்வீரர்களை வெறும் 'அரிசிப்பட்டாளம்' என்றும் 'வயிற்றுச் சோற்று வீரர்கள்' என்றும் கூசாமல் கூறுகிறார்கள். உயிரைத் திரணமாக மதித்த வீரர்களுக்கு மேற்கூறிய விதமாக அவமதித்தது மிகவும் வருத்தமாக இருந்தது. வீரர்கள் இதயம் நொந்தனர்.

'உயிரையும் கொடுப்பார்கள்' எனும் தலையங்கத்தில் 1945-ல் ஏப்ரல் 1-ந் தேதி 'கல்கி'யில் கூறியிருந்ததை மறுபடியும் பிரசுரித்திருப்பதைப் படித்து மகிழ்ந்தேன்.

வாழ்க தளபதி கரியப்பா!

வாழ்க சுதந்திர சைனியம்!

ஜே ஹிந்த்!

திண்டுக்கல்
20—12—48

வி. கேசவன்
(மாஜி சைனிகர்)

★

பாராட்டுகிறோம்

லெப்டினண்டு கர்னல் ஏ. என். சுந்தரமூர்த்தி அவர்கள் எழுதிய 'இந்தியாவின் சைன்யம்' என்ற கட்டுரையைப் படித்தேன்.

தற்காலத்தில் நம் சுதந்திர இந்தியாவின் நடக்கும் காரியங்கள் என்ன? அரசியல் எப்படி அமைந்திருக்கிறது? சைன்யம் என்றால் என்ன? அதன் சிறப்பு, அமைப்பு, நிர்வாகம் எப்படி? என்பன போன்ற விஷயங்கள் அநேக ஜனங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் இதுபோன்ற கட்டுரைகளைப் பிரசுரித்தால் பொது ஜனங்களுக்கு தற்கால சர்க்காரின் நிலையைப் பற்றியும் அதன் அமைப்பு முதலிய விஷயங்களைப் பற்றியும், சர்க்கார் இலாகாக்களுக்குப் பாதகமின்றி எவ்வளவு தெரியலாமோ அவ்வளவு தெரிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்தக் கட்டுரையை ஜனங்களுக்கு அளித்த ஸ்ரீ ஏ. என். சுந்தரமூர்த்தி அவர்களை நானும் என் அன்பர்களும் வெகுவாகப் பாராட்டுகிறோம்.

கும்பகோணம்
21—12—48

மு. வைத்தியநாதன்

★

நம் சைன்யம்

'கல்கி' 19-ம் இதழில் வெளியான இந்திய சைன்யம் என்ற கட்டுரையை வாசித்துவிட்டு அளவிலா ஆனந்தம் அடைந்தேன். ஏன்? தமிழ் அன்பர்கள் அனைவருமே ஆனந்தம் கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்திய சைன்யத்தின் தலைமைப் பதவியிலிருந்த ஒரு ஆங்கிலேயரான பூச்சர் ஜனவரி 15-ம் தேதியில் போய்விடுவார். லெப்டினண்ட் ஜெனரல் கரியப்பா, அந்தப் பிரதம சேனாதிபதி பதவியை ஏற்பார். அன்றையிலிருந்து இந்திய சைன்யம் நம் சொந்த சைன்யமாகிவிடும். இது ஒவ்வொரு இந்தியனும் மகிழ்ச்சி அடைய வேண்டிய விஷயம்.

ஸ்ரீ மூர்த்தி அவர்கள் நம் சைன்யத்தின் உள்ள ஒவ்வொரு தலைவர்களையும், முற்காலத்திற்கும் தற்காலத்திற்குமுள்ள மாறுபாடுகளையும், சைன்யப் பிரிவுகளையும் உத்தியோகங்கள், சம்பள விகிதம், ஆங்கில அரசாங்கம் அளித்த பட்டங்கள், நம் சுதந்திர அரசாங்கம் வழங்கிய பட்டங்களையும் தமிழ் மொழியில் தந்தருளினார்கள். அவருக்கு நம் நன்றி. ஏனென்றால் தமிழ் மக்கள் நம் சைன்யத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்தானே?

பம்பாய்
18—12—48

வி. எஸ். ராஜு

★

பொது மக்கள் கவனிப்பார்களா?

எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தை மட்டும் குறை கூறிக் கொண்டே இருந்து விட்டால் அக்குறைகள் தீர்ந்து விடாது. ஆங்காங்கு பொது மக்கள் செய்யும் குற்றங் குறைகளையும் கண்ணால் கண்டவர்கள், கூசாது எடுத்துக் காட்டித் தடுக்கத் தயங்காமல் முன் வர வேண்டும்.

எங்கள் ஊர் நகர சபையினர் தண்ணீர்க் குழாய்கள் தாராளமாய்க் கட்டி வைத்திருக்கிறார்கள். கைப்பிடியைக் கீழ் நோக்கி அழுக்கினால் தண்ணீர் விழும். ஆனால் அப்படிச் செய்யாமல் ஆணியையோ கல்லையோ செருகி வைத்து விட்டு நிற்கிறார்கள். பானை நிறைந்ததும் திரும்பிப் பாராமல் மறைந்து விடுகிறார்கள். நாளடைவில் அந்தக் கைப்பிடி கெட்டு விடுகிறது. அந்த இரும்புக் குழாய் யாருடைய பணத்தால் போடப்பட்டது? யாருக்காகப் போடப்

பட்டது? யாருக்கு நஷ்டம்? சற்றேனும் யோசிக்கிறீர்களா?

இவ்விதமாக இன்னும் ஏராளமான குற்றங்களைத் தாராளமாக நமது பொது மக்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்து வருகிறார்கள். ரயில் வண்டிக் கதவு பழுப்பாடு பயமாக இருக்கிறது. சந்தையில் நிழல் தரும் மரங்கள், கோடாரியைக் கண்டு கொதிக்கின்றன. நீர் நிலைகள் எல்லாம் அசுத்த முள்ளவர்களைக் கண்டு அஞ்சுகின்றன. பொது ஸ்தாபனங்களெல்லாம் போக்கிரிகளைக் கண்டு பொருமுகின்றன. பால் போன்ற சுவர்களெல்லாம் பையன்களைக் கண்டு பயப்படுகின்றன.

ஆகவே ஆறு, குளம், குழாய், விளக்கு, சந்தை, போக்குவரவுச் சாதனங்கள், முதலிய பொது நலத்துக் காவலர்களைப் பொது மக்களே போற்றிக் காப்பாற்றுவார்களாக.

விருதுநகர்
14—12—48 எஸ். பி. சரோஜா

★

பில்லுக்கு எங்கே போவது?

நான் ஒரு குட்டிக் கணக்குப்பிள்ளை என்று அறிமுகப்படுத்திக்கொண்டு சில 'வரி'களை எழுதுகிறேன். தற்காலத்தில் வரி விதிக்கும் உத்தியோகஸ்தர்களிடம் (Tax Officer) குறிப்புக் கணக்குகளைக் காண்பிக்கப்போகும்போது ஏதோ ஒரு பீதி உடம்புடன் ஒட்டிக்கொள்கிறது. உத்தியோகஸ்தர் கேட்டதற்கெல்லாம் 'பில்' என்றும் ரசீது என்றும் பிராணனை வாங்குகிறார். எந்த மார்க்கட்டிலாவது கீழ்க்கண்டபடி — "நாலே அரைக்கால் வாழைக்காய்க்குக் காலே அரைக்கால் காசு" என்றோ எந்தப் பால்காரராவது "நாலரைப்படி சுத்தப் பாலுக்கு ரூ. மூன்று மட்டும்" என்றோ, எந்த விறகு பேட்டைக்காரராவது "எட்டரை டன் விறகுக்கு எண்ணூரை டன் ரூபாய்" என்றோ பில் தருகிறார்களா? அல்லது 'பில்' தான் கேட்க முடியுமா? கேட்டாலும் சாதாரணக் காகிதத்தில் மொட்டையாக எழுதிக் கொடுக்கிறார்கள். அதை 'பில்'லாகப் பாவிப்பதில்லை இந்த ஆபீஸர். இதற்கெல்லாம் கடைக்காரர் என்ன தொகை கொடுத்தாரோ அதைத் தானே கணக்கில் எழுத முடியும்? கணக்குப் பிள்ளைகளை உத்தியோகஸ்தர்கள் இவ்விதமெல்லாம் அலைக்கழிப்பதனால் கடை முதலாளிகள், "நீ கணக்குச் சரியாக எழுதாததால் தான் எனக்கு இந்தத் தொல்லை. ஆகையால் நாளை முதல் நீ வேலைக்குத் தேவையில்லை" என்று ஆசீர்வதித்து அனுப்பிவிடுகிறார்கள். இந்த நிலை இப்படி வளர்ந்து கொண்டே போனால், கணக்குப் பிள்ளைகளின் நிலை என்ன வாகுமோ?

திருச்சிராப்பள்ளி
18—12—48 க. ராஜகோபாலன்

★

செலவைக் குறையுங்கள்

12-ம் 'கல்கி' இதழில் தாங்கள் "ரேடியோ மகாதேவனை"ப் பற்றி எழுதியிருப்பதைப் பாராட்டுகிறேன். நான் அகில இந்திய ரேடியோ, டில்லியில் இரண்டு வருடம் வேலை செய்ததால் என்னால் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களைக் கொடுக்க முடிகிறது.

1942-ல் நான் சேர்ந்த பொழுது அகில இந்திய ரேடியோ மத்திய செய்தி ஸ்தாபனத்தில் மொத்தம் ஆறு உதவி ஆசிரியர்களும் (சம்பளம் ரூ. 150) ஆறு சுருக்கெழுத்தாளர்களும் ஒரு டைரக்டரும் இருந்தனர். சண்டையினால் வேலை அதிகம், செய்திகள் நேரம் ஜாஸ்தி என்று தினம் தினம் மேலதிகாரிகளுக்கு எழுதப்பட்டது. நான் 1944-ல் அந்த ஸ்தாபனத்தைவிட்டு விலகுமுன், சில நிமிட நேர ஜாஸ்தி வேலைக்காக நாலு மடங்கு அதிகச் சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டனர். சம்பள பில்லும் நாலு மடங்கு ஆகிறது. முன்பு இரண்டு மூன்று செய்திச் சுருக்கங்களை ஒரு உதவி ஆசிரியரும், ஒரு சுருக்கெழுத்தாளரும் செய்து வந்தார்கள். இப்பொழுது ஒவ்வொரு செய்திச் சுருக்கத்திற்கும் ஒரு செய்தி ஆசிரியர் (சம்பளம் ரூ. 600) ஒரு உதவிச் செய்தி ஆசிரியர் (ரூ. 450) இரு உதவி ஆசிரியர்கள் (ரூ. 300) ஒரு சுருக்கெழுத்தாளர் (ரூ. 200) ஒரு ரேடியோ நிருபர் (ரூ. 300) ஒரு செய்தி நிருபர் (ரூ. 300) இருக்கின்றனர். முதலில் வேலைக்காக ஜாஸ்தி ஆட்கள், பிறகு ஜாஸ்தி ஆட்களுக்காகப் புதுவேலை கண்டுபிடிப்பது. இதுவே சுருக்கச் சொன்னால் அகில இந்திய ரேடியோவின் சரித்திரம். முன்பு இருந்த டைரக்டர் ஜெனரல் ஸ்ரீ போகாரி இந்த ஊதாரித்தன வைபவத்தைச் செவ்வனே செய்து வந்தார். இப்பொழுதும் தேசிய சர்க்கார் கண்ணில் மண்ணைப் போட்டுச் சம்பள, உத்தியோக வேட்டை ஏன் நடைபெற வேண்டும்? செய்தி ஸ்தாபனத்தில் 75 சதவிகிதச் சிக்கனம் செய்ய இடம் உண்டு.

நமக்கு ஏற்ற குள்ளர்கள் வைதப்பார்கள். ஆனால் குள்ளர்களுக்கு ஏற்ற நிலை ரேடியோவில் தான் பண்ணுகிறார்கள். பிரதி ஞாயிறன்றும் பஞ்சரங்கத்தில் ராம சக்கரத்தில் கண்ணை மூடிக்கொண்டு கட்டத்தைத் தொடுவதுபோல் சில இசைத் தட்டுகளைப் பொறுக்கி எடுத்து அவர்கள் கடமை முடிப்பதற்காக அவைகளுக்கு வியாக்கியானம் செய்யும் கண்றாவியை நீங்கள் கேட்டால்தான் அதன் பாதகம் உங்களுக்கு விளங்கும். அதேமாதிரி, வைகாசியின் அமரத்துவம் அடைந்த "லை. ஜா ராஜகுமாரி" என்ற பாட்டை "லை. ஜா வைத்தியக்காரர் ஆக்கு" என்ற கேலிக் கூத்து ஒளரங்கசீப்பால்கூட முடியாது.

ரேடியோவின் காலையில் இருந்து நேரம் கொஞ்சம் நல்ல இசைத்தட்டு சங்கீதம் போதும். மத்தியானம் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) ஒரு நிகழ்ச்சியும் தேவை இல்லை. சாயங்காலம் காரிதமாக செய்திக்கு அரை மணி, நல்ல உயர்தர கர்நாடக சங்கீதத்திற்கு இரண்டு மணி நேரம், இசைத் தட்டுக்கு அரை மணி ஆக மொத்தம் மூன்று மணி நேரம் போதும். வேலைக்காக அதிக ஆட்கள், அந்த ஆட்களுக்கு வேலை கண்டுபிடித்தல் முதலியவை ஒழிய வேண்டும். ரேடியோவை ஜனங்கள் கேட்க வேண்டியதை யுள்ளபடி நிகழ்ச்சிகள் அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் பெருந்தலைவர் ராஜாஜி சென்னை நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து "ரேடியோவினால் பல அரும்பெரும் காரியங்களைச் சாதிக்க முடியும் என்று கனவு காண்கிறேன்" என்ற சொன்ன பொன் மொழிகள் நனவாகும்.

தியாகராஜநகர்
12—12—48 கே. சீனிவாசன்

★ வட்ட மேஜைப் பக்கத் தொகை ரூ. 25-ஐ 'ஆதரவு வேண்டும்' என்ற கடிதம் எழுதிய செல்வி. எஸ். என். பார்த்தசாரதிக்கும், 'செலவைக் குறையுங்கள்' என்று எழுதிய தியாகராஜநகர் கே. சீனிவாசனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஜனவரி ௨, 1949 4 அணா

REGD. NO. M. 4392

